# தமிழ் மணம்

பன்மொழிப் புலவர்

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

மீனாட்சி புத்தக நிலையம்

60, மேலக்கோபுரத் தெரு :: மதுரை-1

முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1962
மீனாட்சி-25
உரிமை பதிவு

விலை ரூ. 2·00

MEENAKSHI PUTHAKA NILAYAM
60, West Tower Street,
MADURAI-1

மங்கை அச்சகம்
இராயப்பேட்டை, சென்னை-14

# முன்னுரை

"தமிழ் மணம்" இந்தத் தொகுப்பில் வரும் தலைப்புகளில் ஒன்றில் மணக்கின்றது. அதுவே இந்தத் தொகுப்பிற்குப் பெயரும் ஆயிற்று. இந்தக் கட்டுரைகள் எப்போதெப்போதோ எழுதியவை. அதனால் அங்கு வரும் குறிப்புக்களை இக் காலத்திற்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும். சில ஆந்திர நாடு பிரிவதற்குமுன் எழுதியவை; சில நம் சாகித்திய அகாடமி தோன்றுமுன் எழுதியவை. அக்காலக் கண்கொண்டு ஓதவேண்டும் என்றே அவற்றை மாற்றவில்லை.

செய்வன திருந்தச் செய்யும் வழக்கம் எனக்கு என்றும் கைவரவில்லை. இக் கட்டுரைகள் ஒருசிலர் கட்டாயத்தின் பயனாகவே உருப்பெற்றவை. அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதையை இதில் ஒவ்வொரு கட்டுரையிலும் காணலாம். இதனை வெளியிடும் உரிமை எனது மனைவியது. எனவே அதனைத் தடுக்க வழியில்லை. இக் கட்டுரைகளைத் திரட்டித் தரும் பழிக்கு உரியவர் என் நண்பர் திரு. இ. அண்ணாமலை (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்). இதனைத் திருத்த நேரம் எனக்கு

இல்லை என்றபோது அந்தத் தொண்டினை மேற் கொண்டார், பேராசிரியர் டாக்டர் மொ. அ. துரைஅரங்கனார். என்ன சொன்னாலும் விடாது தொடர்ந்து இக் கட்டுரைகளைப் பெற்று அச்சிட்டு வெளியிடுபவர் மீனாட்சி புத்தக நிலையத்தார்.

இத்தனை எதிர்ப்பிலிருந்து நான் எப்படித் தப்ப முடியும்? நான் தப்பினாலும் கட்டுரைகள் தப்பிப் பிழைக்க வழியின்றி உங்களை அடைக்கலம் புகுகின்றன. காத்தருள்க.

அண்ணாமலை நகர்
1—8—'62

இங்ஙனம்:
தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

# பதிப்பகத்தார் குறிப்பு

பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் "தமிழ் மணத்"தைத் தமிழ்ப் பெருமக்களின் முன் படைப்பதிலே பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

பேராசிரியரவர்கள் முதுபெரும் தமிழ்ப் புலவர். அவருடைய நன்மாணாக்கர்களில் பலர் இன்று பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறைத் தலைவர்களாக விளங்குகிறார்கள். அவர் பயிற்றும் முறையினால் கவரப்பெற்று அவர்பால் பக்திகொண்ட மாணவர் பலர் இன்று பல்வேறு துறைகளில் உயர்நிலைகளில் இருக்கும்பொழுதும் பேராசிரியரவர்களைக் குருதேவர் என்று தலையார வணங்குவதைக் காண்கிறோம். முதுபெரும் புலமையும், விளக்கிக்கூறி மாணவர் உள்ளத்தில் கருத்தைப் பதிய வைக்கும் பயிற்றும் திறமையும், உண்மையைத் தெளிவாகக் கூறும் ஆற்றலும் படைத்த பேராசிரியரவர்களின் கருத்துக்கள் நாம் ஊன்றிப் பயின்று மனங்கொளத் தக்கவை.

சென்னை நாகரிகம், பல்லவ அரசு, கற்கோயில்கள் பற்றிய பல அரிய செய்திகளை இந்நூல் நமக்களிக்கிறது. பேராசிரியரவர்கள் தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சியிலே எவ்வளவு அதிக அக்கறையும் கவலையும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இந்நூல் ஒரு சிறந்த சான்று.

இந்த நல்ல நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்களித்த பேராசிரியரவர்களுக்கும், எங்கள் வேண்டுகோளுக்கிணங்கப் பேராசிரியரின் கட்டுரைகளைத் தொகுத்து வாங்கித் தந்ததுடன் அச்சுத் தாள்களை ஒப்புநோக்கியும் உதவிய எங்கள் மதிப்பிற்குரிய டாக்டர் மொ. அ. துரையரங்கனாரவர்கட்கும் எங்கள் வணக்கமும் நன்றியும் உரியது.

மதுரை,
7—8—62

மீனாட்சி புத்தக நிலையத்தார்

# பொருள் அடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | கறியும் சோறும் | 9 |
| 2. | ஆமையும் முயலும் | 14 |
| 3. | குழப்புதல் வேண்டா | 19 |
| 4. | என் ஆசை | 25 |
| 5. | கடற் கிழவன் | 27 |
| 6. | சங்கம் எங்கே? | 30 |
| 7. | தமிழுக்கு உழைத்த தாத்தா | 36 |
| 8. | தமிழ் வளர்கிறதா? | 44 |
| 9. | இந்திய மொழிகளில் தமிழ் மணம் | 51 |
| 10. | தமிழ்நாட்டில் பௌத்தம் | 59 |
| 11. | சங்க காலத்தில் சைவம் - 1 | 68 |
| 12. | சங்க காலத்தில் சைவம் - 2 | 74 |
| 13. | பல்லவர் சிற்பம் | 80 |
| 14. | சோழர் கால்த்துச் சமுதாயப் பணிகள் | 86 |
| 16. | சென்னை நாகரிகம் | 91 |

# 1. கறியும் சோறும்

தெள்ளமுதம் வாய்க்கு விருந்து. தென்றல் உடலுக்கு விருந்து. தமிழ்த் தென்றலோ உள்ளத்திற்கும் உயிருக்கும் விருந்து; உள்ளத்தின் வழியே ஐம்புலனுக்கும் விருந்து. மொழி கேட்பது, காதுக்கன்று; உள்ளத்திற்கே. ஆதலால், விருந்துகளில் எல்லாம் சிறந்தது, மொழிவிருந்தே ஆகும். தமிழ்த தென்றல் அளிப்பது இந்தத் தனிப்பெரு விருந்தே ஆம்.

விருந்து என்றால், பல சுவைகளும் பழுத்திருக்க வேண்டும். சோறும் ஊறுகாயும் இருந்தால் போதுமா? அது சிறுசோறு. விருந்தென்றால் பெருஞ்சோறும். என்ன பெருமை? குறுணி குறுணியாகக் கொட்டுவதா? இல்லை, இல்லை. பெருமை எல்லாம், சோற்றொடு கலக்கும் சுவை கனிந்த குழம்பமுது, சாற்றமுது, கூட்டமுது, கண்ணமுது, கறியமுது முதலிய அமுது வகைகளின் பெருமையே ஆம்.

தமிழ் மொழி விருந்திலும் தமிழ்ப் பெருஞ்சோற்றொடு பிறமொழிக் கறியமுதுகளும் வேண்டும் அன்றோ? தமிழ்ச் சோற்றின் பெருமையைப் பேசவேண்டாம். அதனை உலகம் அறியும்; ''நீர் அறியும்; நெருப்பறியும்'' என்பர் பெரியோர். ஆங்கில மொழி ஓர் ஊறுகாய் ஆம். அதனைத் தொட்டுக்

கொண்டே தமிழ்ச் சோற்றினை உண்டு களித்து உடலுரமும் உயிருரமும் பெறலாம்.

ஆனால், இந்த வெறுஞ்சோறு போதுமா? பழஞ்சோறு, புதுச் சோறு, சுடுசோறு, பருப்புச் சோறு வேண்டாமா? அண்டைவீட்டார் அயல்வீட்டார் இல்லையா? தமிழ் மொழியின் அண்ணன்தம்பிகள் இல்லையா? அக்காள்தங்கையர் இல்லையா? ஊர்நாடு இல்லையா?

'இந்தியா,' 'இந்தியர்' என்று பல நூற்றாண்டுகளாகப் பேசிவரும் பொதுப்பேச்சு இன்று பொய்யாய்ப் பழங் கனவாய் ஒழியலாமா? இந்த நாட்டில் வாழவேணடும்; பணமும் பொருளும் கொடுத்தும் வாங்கியும்வரவேண்டும்; கடலிலும் காற்றிலும் சுற்றிவரவேண்டும். நாம் சுற்றிவரும் இந்தச் சூழலில் எல்லோருடனும் தட்டித் தடுமாறியேனும் பேச வேண்டாமா? எந்தப் பேச்சுப பேசுவது? இஸ்லாமியர் இந்துஸ்தானியைத் தமது தாய்மொழி எனப் பாராட்டுகின்றனர். எல்லோருடனும் ஒத்துவாழ விரும்பும் நாம் இந்துஸ்தானியைப் பேசக் கற்றுக்கொள்வது நல்லது. பருப்புச் சோற்றில் நெய்யூற்றியதுபோல அது மணக்கும்; கீழ்நாடுகளொடு தொடர்பு கொள்ள ஒரு வாய்ப்பும் உண்டாகும். ஆனால், வடநாட்டினர் தம் தலையை முட்டி மோதி உடைத்துக் கொள்ளும் ஹிந்தி-உருது போராட்டத்தில் புகவேண்டுவதில்லை. இந்தத் துலுக்கு மொழியை ஆங்கில எழுத்தில எழுதிக் கற்றுக்கொள்வதே தமிழருக்கு எளிது.

அண்ணன்தம்பிபோல நம்முடன் பழகும் நாயுடுவையும நாயரையும் இராவையும் மறக்கலாமா? ஓய்விருக்குமானலை, மனமிருக்குமானல், அவர்கள் தெலுங்கினையும், மலையாளத்தினையும, கன்னடத்தினையும் கற்றால் குடி முழுகிப்போகுமா? குடியும் முழுகிப்போகாது; தலையும் முழுகிப்போகாது. குடிமுறையும வாழும்; தலைமுறையும் வாழும். வாணிபம் செய்வோர் இந்த உளவினை அறிவர். தலை என்பதனைத்

தலா என்றால் தெலுங்காய்விட்டது. வந்தான் என்பதனை வந்து என்றால் மலையாளம் ஆகிவிட்டது. பால் என்பதனை ஹாலு என்றால் கன்னடமாகிவிட்டது. ஆகவே அவற்றினைக் கற்றுக்கொள்வதில் அருமையே இல்லை. அனைவரும் ஒன்றாகப் புழங்கும்போது பேசப் பழகுவது எளிது. தெலுங்கு, காரம் நிறைந்து நெய் மணக்கும் "கோங்கூரா" (புளிச்ச கீரை)ப் பச்சடியாகும். மலையாளம், தேங்காய்ப் பால் நிறைந்து வாய் மணக்கும் அவியலாகும். கன்னடம், பருப்பும் கற்கண்டும் நிறைந்து பால்மணக்கும் போளியாகும்.

நம் நாட்டுப் பழைய மொழிகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. இந்தப் பழஞ்சோறு உடலுக்கும் உயிருக்கும் நல்லது. மேனாட்டாரும் அவற்றினை விரும்பிக் கற்கின்றனர். சம்ஸ்கிருதம், பாரசீகம், அரபி, ஹீப்ரூ—இவை நம் நாட்டில் வாழவந்தோர் பாராட்டும் பழைய மொழிகள். கடவுட் கொள்கையை ஒளிவிடும் விளக்குக்களாக இவை பலருக்குக் காட்சி அளிக்கின்றன. கடவுள் உண்டோ இல்லையோ, கடவுளை நம்புவோர் கண்ணெதிர் தோன்றுகின்றனர். அவர்கள் உள்ளத்தினை அறியவேண்டாமா? எதனையோ எல்லாம் கற்கின்றோம்! மக்கள் கற்பதற்குச் சிறந்த பொருள் மக்களையன்றிப் பிறிது ஒன்று உண்டோ? இந்நாளைய மக்கள் கருத்தினையும் முன்னாளைய மக்கள் எண்ணங்களையும், மனப் போக்கினையும் வளர்ச்சியினையும் இந்தப் பழைய மொழிகள் பாலுஞ் சோறுமாய் ஊட்டுகின்றன; நம்மனைவரையும் நல்ல வழியில் பிணித்து ஒன்றாக்குகின்றன. ஆனால், அடிப் பொருளை மறந்து நிழலுக்காகச் சண்டை இடத் தொடங்கிக் குருட்டுக் கொள்கையாம் பாழ்ங்கிணற்றில் விழாதபடி ஆராய்ச்சிக் கைவிளக்குக் கொண்டுசெல்லவேண்டும். நம் நாட்டுப் பழம்புதையல்களாம் இவற்றை மண்மூடி அழிய விடலாமா? நாம் உரிமை பெறுவது வாழ்விற்கா, அழிவிற்கா? இவற்றின் சாயல் இன்று இந்தியாவில் வழங்கும் தாய்

மொழிகள் பலவற்றிலும் நன்கு விளங்கக் காண்கிறோம். அந்தச் சாயல் வழியே அவற்றைக் கற்பது எளிது.

அவற்றால் பல தீமைகள் நம் மொழிக்கு நேர்ந்திருக்கலாம். அந்தத் தீமையை ஒழிக்கவேனும் அவற்றினைக் கற்க வேண்டாமா? உண்மையில் தீமை வந்தது அவற்றால் அன்று; அடிமையில் ஊறிய உள்ளம் அவற்றிற்கும் அடிமையானதாலேயாம். இன்று நாம் வேண்டுவது உரிமையொடு மொழிகளை ஆளுவதேயாம். இனித் தமிழன் எவருக்கும் அடிமை இல்லை; எதற்கும் அடிமை இல்லை; மொழிக்கும் அடிமை இல்லை; நாட்டுக்கும் அடிமை இல்லை; கொள்கைக்கும் அடிமை இல்லை; குறைவிலா நிறைவுக்கு அடிமை. உரிமையே அவனுடைய உயிர்ப்பு. இத்தனையையும் பிறருக்குக் கேடின்றி இன்பமாக ஆண்டு நுகர்வதே அவனது உரிமை!

அம்மட்டோ? தமிழன் உலகம் முழுதும் செல்லுதல் வேண்டும்; அனைவரும் வரவேற்று மகிழுமாறு வாழ்தல் வேண்டும். தமிழர்கள் சிறந்த அமைச்சர்களாகவும், பெருந்தூதர்களாகவும், பிற நாட்டில் பேரும் புகழும் பெற்று விளங்கும் காலம் வருகிறது; வந்துகொண்டிருக்கிறது; வந்து விட்டது! பிற நாட்டு மொழிகளையும் பிற நாட்டுக் கலைகளையும் அறியாமல் அங்கெல்லாம் போய்ப் புகழ் பெற்று உயர்வது எப்படி? இவ்வாறு வாழவேண்டி ஏற்பட்டதாலன்றோ மேனாட்டினரிற் பலர் பல மொழிகளையும் கற்றுச் சிறந்து விளங்குகின்றனர்! பிற நாட்டிற் புகழும் பெறுகின்றனர்! பிற நாட்டு நூல்களைத் தம் மொழியில் மொழிபெயர்த்துத் தம் மொழியையும் வளர்க்கின்றனர்! பல மொழிகளும் தமிழ்த் தேனில் தோய்ந்தூறிய பலவகைக் கனியமுதுகளாகித் தமிழ் விருந்திற் சிறக்கும் என்பதில் என்ன தடை?

இவ்வாறு உலக மொழிகளை எல்லாம் கற்றறிவது கடவுளால் ஆவதன்றி மக்களால் ஆகுமா? ஆகாது. ஆனால், அனைத்தினையும் அறியும் ஆண்டவனாக மக்கள் மாறவேண்டுவ

தில்லை. தமிழொன்றையே தமிழ்மக்களனைவரும் கற்றுத் தெளிதல்வேண்டும். மேல்வகுப்பில் கற்க விரும்புவார் சிறிது துலுக்கு மொழியிற் பேசவும் ஆங்கிலம் கற்கவும் தொடங்கலாம். உயர் வகுப்பில் ஓத வருவார் பழைய மொழிகளையோ பிற நாட்டு மொழிகளையோ விருப்பமிருந்தால் ஓத இடம் அளித்தல்வேண்டும். கட்டாய இந்தியால் பிற மொழிகள்மேல் மனக்கசப்பு எழுந்தது. கட்டாயத்தால் எந்தக் கலையும் வளராது என்பதனை உணர்ந்தபின் இந்தக் கசப்பு நீங்கவேண்டாமா? தமிழன் தனியே வாழ முடியாது. பிற மொழிகளைத் தமிழன்போலக் கற்பாரும் இல்லை என்ற உண்மையை உறுதியாக நம்பிப் பிற மொழிகளைக் கற்பதில் நம்மவர் ஊக்கங் கொள்ளுதல்வேண்டும். வடமொழியை நம்மவர்போல ஓதுவார் உண்டா? ஆங்கிலத்தினைச் சீனிவாச சாத்திரியார்போல உலகிற் பேசியவர் உண்டா? வானமளந்த தமிழையறிந்த தமிழனுக்கு, 'ஆகாதது' என்று ஒன்றும் இல்லை. இந்த உறுதி வளரவேண்டும். பிறமொழி கண்டு தடுமாறும் மனம் ஒழியவேண்டும். உலகெல்லாம் தமிழ் வளர இதுவே வழி. ''தமிழன்றி வேறொரு மொழியும் வேண்டாம்'' என்ற கருத்துப்போலத் தமிழினைக் கொலை செய்யும் படை வேறொன்றும் இல்லை.

# 2. ஆமையும் முயலும்

தமிழுணர்ச்சி - தமிழ் மலர்ச்சி - தமிழ் மணம் - தமிழ் ஒளி - தமிழ் முரசு - தமிழ்க் கலை - தமிழ் விருந்து - தமிழ் வெள்ளம்—இன்றைய தமிழ்நாடு தரும் காட்சி இது. இதோ ''தமிழ்த் தென்றலும்'' வீசுகிறது. காய்ந்த உடல் கனிந்து மகிழ அதில் ஒரு குளிர்ச்சி உண்டு. தமிழ் மலரின் மண மெல்லாம் கொண்டு அது வீசுகிறது; தமிழ்த் தேன் நாவில் அமுதத் துளியாய் ஓயாது இனிக்க வீசுகிறது. தமிழ்க் குயி லின் பாட்டும் காதில் விழுகிறது. இந்தக் காற்று வீச்சில் மாசு நீங்கித் தமிழின் உயிரொளியும் பளபள என மின்னித் தோன்றுகிறது. தமிழ்த் தென்றல் வீச வீசத் தமிழறிவுத் தனித் தீயும் அறியாமை இருளை ஓட்டி அழகு விளக்காக ஓங்கி எரிகிறது.

எல்லாம் தமிழ்! எங்கும் தமிழ்! இது நல்லது; இனியது. ஆனால், ''வேறு ஒன்றும் இல்லை; இருந்தாலும் வேண்டாம்'' என்பதாக இது முடிதலாகாது. வேறெங்கும் கண் எடுத்துப் பார்ப்பதில்லை என்றால் கண்மூடிக் கிடப்பது என்றே பொரு ளாம். ''இங்குப் பகல்; அங்கு இரவு'' எனத் தொலைவில் கிடக்கும் - பாதாள உலகமாய்க் கிடக்கும் - அமெரிக்காவை யும் நமது அண்டை வீடாக்கிவிட்டது ஆகாய விமானம். இவ்வாறு உலக முழுதும் ஒன்றாகும்போது தமிழ்நாடு எங்கே பறந்து ஓடிப்போகக்கூடும்? உலகக் கருத்துக்களை எல்லாம் தமிழில் கொண்டுவந்து குவிக்கவேண்டும். ஆனால், அவற் றிற்கு அடிமையாகவேண்டாம். அவற்றினை ஆராய்வதற் கேனும் அவற்றை யறியவேண்டாமா? காற்று எங்கிருந்தே னும் வீசலாம்: அது தமிழ்த் தென்றலாக முடியுமானால் இன்பமானதேயாம். அறிவு, கதிரவன்போல உலகிற்குப் பொது. ஒளி எங்கிருந்தேனும் வரலாம்: தமிழ்நாட்டில்

வரும்போது தமிழ் ஒளியாகும். எனவே, உலகினையே தமிழாக்கிப் பார்க்கும் உள்ளக் கிளர்ச்சியே தமிழுணர்ச்சி ஆம்.

''தமிழில் இல்லாதது என்ன?'' என்று பலர் கேட்கின்றனர்; ''இல்லாதது இல்லை; பின் என்ன கவலை?'' எனத் தூங்கத் தொடங்குகின்றனர். ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஓராயிரம் ஆண்டிற்கு முன்—எகிப்து நாடு—அலக்சாண்டிரியா என்ற நகரம்—உலகத்தில் உள்ள நூல்களை எல்லாம் சேர்த்து வைத்த நூல்நிலையம்—இதனெதிர் ஓர் அரசர் வருகின்றார்; இதனைக் காண்கின்றார்; ''இத்தனை நூலா!'' என்று மருள்கின்றார்; 'நாங்கள் நம்புவது எங்களது திருமறை. அதிலிருப்பது மட்டுமே இந்த நூல்களில் இருந்தால் இத்தனை ஏன்? வீணே; அதில் இல்லாதது இங்கு இருந்தால் இத்தனையும் பொய்; பொய்யானாலும் புகைந் தெரியவேண்டும்; வீணானாலும் வெந்தெரியவேண்டும்'' என்று எரிகிற கட்சிப் பாட்டுப் பாடுகின்றார். இட்டதே சட்டம். அத்தனை நூலும் எரிகிற காட்சியைத்தான் இன்று மனத்தாலே நாம் பார்க்க முடியும். இப்படித்தான் முடியும், ''தமிழில் இல்லாதது என்ன?'' என்று கேள்வி கேட்கின்ற மனப்பான்மையும்.

தமிழில் அடிப்படையான உண்மைகள் உண்டு; நிறைய உண்டு. அந்த உண்மைகள் மாறுவதில்லை. ஆனால், உலகம் மாறிமாறி வருகிறது. மாறிவரும் உலகத்தொடு மாறாத உண்மைகளைப் பொருத்திப் பார்க்கவேண்டும். மாறும் காலத்திற்கேற்ப மாறாத உண்மைகளை விளக்கினால் மட்டுமே மக்களுக்கு விளங்கும். ''குழந்தையும் கடவுளும் கொண்டாடும் இடத்திலே'' என்று, பழமொழியை வாய் பேசுகிறது. அந்த உண்மை உடலில் ஊறியிருக்கிறதா? ஊறிக் கிடந்தால் குழந்தை ''குய்யோ முறையோ'' எனக் கூவியலறிப் பள்ளிக் கூடம் போகுமா? கொண்டாடும் இடத்திற்குப் போகிறதா? திண்டாடும் இடத்திற்குப் போகிறதா? ஆங்கிலக் குழவிகள்

கற்கத் தொடங்கினுல் இனிதாகக் கற்கின்றன. ஆடல் பாடலாகவே அறிவு வளர்கின்றது. எதனைப்பற்றியும் எளிதாக விளங்கும் நூல்கள்! எழுத்துத் தெரியாமற்போனுலும் படத்தாலேயே எல்லாவற்றையும் விளக்கும் நூல்கள்! வழவழப்பான ஏடுகள்! முத்துமுத்தான எழுத்துக்கள்! பட்டுப்போலப் பளபள எனப் பொலியும் கட்டுக்கள்! விளையாடிக்கொண்டே கற்கும் நூல்கள்! பாடிக்கொண்டே அறியும் நூல்கள்! இவற்றிலும் என்ன என்ன வகை! என்ன என்ன அழகு! என்ன என்ன இனிமை! தமிழ்க் குழவிக்கு இந்த வாய்ப்பு உண்டா? ''அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவான்'' என மருட்டி வெருட்டுகிறோம். குழவியன்றோ நாளைத் தமிழன்? நாம் படும்பாடு எல்லாம் அவனுக்காக வன்றோ? அவனையே இப்படி வளர்த்தால் எதிர்காலம் எப்படி இன்பமாக மலர முடியும்? மனம் மகிழ்ந்து குழவிகள் எந்த நூலை ஓதும் என அறியவேண்டாமா? இப்போது இருக்கிற நிலையில் பிற மொழி நூல்களைக் கண்டாலன்றி இந்த உண்மை விளங்குமா?

அவ்வளவுதானு? உலகில் தோன்றிய கருத்துக்களில் பெரும்பான்மையானவற்றை ஆங்கிலத்தில் காணலாம். ஆங்கிலந்தான் இன்றைய உலகத்தின் கண். உலகப் பொருள்களைப்பற்றி மேலும் மேலும் அறிய விரும்பினுல் ஆங்கிலத்தினை ஒதுக்கித் தள்ள முடியுமா? தமிழ் முதல்மொழியாகிவிட்டது. தமிழில் பாட நூல்கள் வரும். அவ்வளவே! ஆங்கிலத்தில் இருப்பதனைத்தும் தமிழாகிவிடுமா? பாடத்தில் உள்ளவற்றைப்பற்றி மேலும் மேலும் குறிப்புக்கள் அறிய விரும்பினுல், ஆசிரியர் எங்கே போகக்கூடும்? ஆங்கில நூல்களிடந்தான் செல்லக்கூடும்?

என் இப்படித் தலைகீழாகத் தமிழ்நாடு நிற்கிறது? தமிழன் சில நூற்றுண்டுகள் தூங்கிக கிடந்தான். ஆங்கிலேயன் இவனைத் தூங்கவும் வைத்தான். இப்போதுதான்

தமிழன் விழித்தெழுகின்றான். "ஆமையும் முயலும்" ஓடிய கதையாய்த் தோன்றுகிறது. ஆங்கிலேயனே முன்னேறி ஓடியுள்ளான். அவன் ஓடிய வழியில் அவன் அடிச்சுவட்டினைப் பின்பற்றித்தானே ஓடவேண்டும்? விரைவாக ஓடி வெற்றி பெறவேண்டும். ஆங்கிலத்தில் இருப்பதுபோலத் தமிழிலும் எல்லாக் கருத்துக்களும் அழகு அழகாக இனிமை இனிமையாக எல்லோருக்கும் எளிதில் எட்டும்படி குவித்துக் குவித்து வைக்கவேண்டும். அப்போது நாம் பின்பற்றக்கூடிய ஆங்கிலேயரின் அடிச்சுவடு தோன்றாது. அவன் நம் பின்னே இருப்பான்; நாம் முன்னே இருப்போம். நம் அடிச்சுவட்டினைப் பின்பற்றியே அப்போது அவன் வரவேண்டும்.

அதுவரையில் ஆங்கிலத்தினையோ பிற மொழிகளையோ வெறுத்துப் பயனில்லை. தமிழ்மொழி பேராற்றல் படைத்தது. கும்பகருணன் பேராற்றல் படைத்தவன்; ஆனால், தூங்கித் தூங்கி ஒன்றற்கும் உதவாமற்போனான். நாமும் தூங்குதல் கூடாது; விழிப்பாக இருக்கவேண்டும்; விழித்தெழுந்து விரைவாக ஓடவேண்டும். தூங்கினால் ஆமை; விழித்தோடினால் முயல். இல்லை, தூங்கினால் பிணம்; ஓடினால் பணம். பணம் எங்கும் பாயும். தமிழ் இப்போது விரைந்தோடுகிறது. அதற்கென்ன ஓட்டம்? செலாவணி? தமிழ்மொழி, உண்மையில் முதல்மொழியாக அமையவேண்டும். எல்லாம் தமிழாகிவிடும்; எங்கும் தமிழாகிவிடும்.

அப்போது ஆங்கிலம் துணைமொழியாக உதவுவதில் கேடொன்றும் இல்லை. ஆளும் மொழி என்று அதனைக் கற்கும் நிலை போயது. கட்டாயத்தால் கசப்பு நிலை நீங்கியது. உலக மொழி எனக் கற்கும்போது அதிலோர் இனிப்புத் தோன்றும். ஆங்கிலேயர் மொழி என்பதன்று அதன் பெருமை. அதுவே புதுமையின் வடிவம். புதுமையின் வாய்க்கால் அது; அதனைத் தமிழ் நிலத்தில் பாய்ச்சிக்கொள்வதில் கேடொன்றும் இல்லை. பழைய எரு இங்கு நிறைய உண்டு.

எல்லாம் செழிப்பாக வளர்வதில் என்ன ஐயம்? ஆமை முயலாம்; முயல் ஆமையாம். புதுமை பழமையாம்; பழமை புதுமையாம். முடிவில் முழுதும் ஒன்றும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்."

# 3. குழப்புதல் வேண்டா

ஆங்கிலம் தமிழ்நாட்டில் பரவியுள்ளது. பிற மொழியை அறிந்தவரைவிட ஆங்கிலமறிந்தார் தமிழரிடையே பலர் உள்ளார்கள் என்பதில் ஐயத்திற் கிடமில்லை. எழுதப் படிக்க அறிந்தவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ள நம் நாட்டில், ஆங்கிலம் அறிந்தாருடைய எண்ணிக்கை அந்த வகையில் பார்க்கும்போது மிகக் குறைவேயாம்! ஆனால், இங்கு நாம் ஆராயவேண்டுவது உயர்நிலை வகுப்பிற்கும், கல்லூரிக்கும் சென்று கற்கும் மாணவர்களது சூழ்நிலையேயாம. இங்கு ஆங்கிலம் பழகியதொரு மொழியாக விளங்கவே காண் கிறோம். வேறு எந்த மொழிக்கும் தமிழ்நாட்டில் தமிழுக்கு அடுத்தபடியாக இந்தச் சிறப்பும பழககமும் இல்லை எனலாம்.

அனைத்துலக மொழியாக விளங்கும் இதனைச் சாம்ராஜ் யத் திமிரின் கடுங் குரலாக இனி நாம கேட்கவேண்டுவ தில்லை. உலக முன்னேற்றச் சூழலில் ஒலிக்கும் விஞ்ஞானத் தின் உண்மைக் குரலாகவே அஃது இன்று எல்லோர்க்கும் இனிக்கின்றது. உலகத்தோடு ஒத்து வாழ முயலும் நாம், இயற்கையின் இயைபொடு நம் வரலாற்றுப் போக்கில் நமக் குக் கிடைத்து, நம்மிடம் பரவிய அந்தச் செல்வத்தினை இழக்க வேண்டுமோ? நம் வழிவழி வரும் தலைமுறைகளுக்கும் உதவும் செல்வமாக அதனை வகுப்பதே சிறந்ததாம். எனவே, நம் பிரதமர் ஆங்கிலத்தை நம் மாணவர்கள் கற்கவேண்டும் என்று கூறுவது தமிழன் நெஞ்சில் எழும் இனிய பாடலே என்று கூறலாம்.

ஆங்கிலம் அறிந்த மாணவர்கள், தம் தாய்மொழி வழியே எதனையும் கற்கப் புகும்போது அவர்களுக்கு என் றென்றும் எப்போதும் உதவ ஆங்கில நூல்களும், ஆராய்ச்சி இதழ்களும் கோடிக்கணக்கில் காத்துக்கொண்டிருக்கின்றன.

இவற்றை எல்லாம் தமிழில் மொழிபெயர்த்தே தீரவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை; முடியவும் முடியாது. ஒருசில அடிப்படை நூல்கள் தமிழில் இருந்தால் போதும். உலகம் முழுதுமாக வளரும் ஆங்கிலம் மிகச் சிறிய செலவில் கண்ணைக் கவரும் வகையில் உண்மையை உள்ளது உள்ளபடி நம்முடைய மாணவர்கள் எளிதில் அறியும் போக்கில் உதவ முன்னிற்கும்போது நம்முடைய மாணவர்கள் பழமபசலி யாவது என்றும் இல்லையாம்.

ஆனால், நம் மாணவர் கற்கும் ஆங்கிலத்தின் தரம் உயர வேண்டும். ஆங்கிலமோ பேச்சுமொழி. ஆதலின், அதைக் கற்பது அருமையாகவேண்டுவதில்லை. கற்பிக்கும் முறையே மாறவேண்டும். நம்முடைய மாணவர்கள் இன்று இடைநிலைப் பள்ளியின் முதல் வகுப்பில் ஆங்கிலம் கற்கத் தொடங்குகின்றனர். தாம் கற்கும் நேரத்தில் ஏறக்குறையக் கால் பங்கு அளவு (ஐந்தில் ஒரு பங்கு) ஆங்கிலம் கற்கவே செலவிடுகின்றனர். இதில் ஒன்றும் வஞ்சகம் இல்லை. இவ்வாறே பட்டம் பெறும்வரை நேரத்தைச் செலவு செய்கின்றனர். ஆனால், எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக முடிகின்றது. முதல் கோணல் முற்றும் கோணலாகப்போகிறது. முதலில் கற்பிப் பவர்கள் ஆங்கிலத்தில் நன்றாகப் பேசத் தெரியாத, எழுதத் தெரியாத ஆசிரியர்கள்; உயர்நிலைப் பள்ளிப் பாடததை முடிததுத் தேர்ந்தவர்கள். இவர்கள்போலத்தானே இவர்கள் மாணவர்களும் ''ஊமைக் குளறுவாயன் உற்பாத பிணடம்'' என்ற பழமொழிபோல் ஆகிறார்கள்? இதன் பயனாக மாண வர்கள் படிக்கும் நேரமெலாம் வீணாகி ஒழிகிறது. இதற்குச் செலவாகும் பணமும கமரில் உகுத்த பாலாகிறது. மாணவர் அறிவில் குறைந்தவர் அல்லர். பட்டம் பெற்று ஆங்கிலத் தில தேர்ந்தவர்களை அந்த முதல் வகுப்பில கற்பிக்க வகை செய்தால், கிறித்தவர் கல்லிமாடங்களில் கற்கும் நம் மாணவர்கள்போல் இரண்டாண்டுகளில் ஆங்கிலத்தில்

விரும்பிப் பேச, ஆங்கில நூல்களை விரும்பிப் படிக்க எளிதில் தேர்ச்சி அடைந்துவிடுவார்கள். இந்த விருப்பம் கைவந்த பின், இவ்வளவு நேரம் பின்னைய ஆண்டுகளில் செலவழிக்க வேண்டுவதில்லை; நேரங் குறையச் செலவும் குறையும். முதல் வகுப்பில் பட்டம் பெற்றோரை ஆசிரியராக அமர்த்துவதால் நேரிடும் செலவு இந்த வகையில் ஈடாகிவிடும். முதலில் நல்ல வகையில் கற்பிக்காமல், பின்னெல்லாம் முயல்வது வீணேயாம். மேலும் மேலும் சுமையை மாணவர் தலையில் சுமத்துவதாகவே அத்தகைய முயற்சிகள் மாணவர் உள்ளத்தைக் கலக்குகின்றன. முதல் இருந்தே கற்பிக்கும் முறை மாறுமானால் ஆங்கிலத்தின் தரம் உயர்வதில் தடை ஒன்றுமில்லை

இந்தத் திட்டத்தில் ஆங்கிலம் துணையாக நிற்குமேயன்றி முதலாக அமைந்துவிட முடியாது. முன்னெல்லாம் முதலாக அமைந்த ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ்நாட்டில் தமிழே பெறமுடியும். ஆங்கிலமே பெறமுடியாதென்றால், இந்தி அந்த இடத்தைப் பள்ளிக்கூடங்களில் பெறமுடியும் என்பது வீண் கனவேயாம். தமிழில் உயர்நிலை வகுப்புகளில், மாணவர்கள், எல்லாப் பாடங்களையும் படித்துவிட்டுக் கல்லூரியில் வந்ததும் வேறு மொழியில் படிக்கத் தொடங்குவது அருமையினும் அருமையாகிறது. பாதித் தமிழிலும் பாதி ஆங்கிலத்திலும் பேசியே இன்று கல்லூரிகளில் பாடம் நடைபெறவேண்டியிருக்கிறது. அங்கும் தமிழிலே நடந்தால் மாணவர்கள் எளிதில் கருத்தினைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால், இன்று கருத்தினை அறிந்தால் மட்டும் போதாது; அதனை ஆங்கிலத்தில் பரீட்சையில் எழுதி வெளியிடும் ஆற்றலும் மாணவர்கள் பெறவேண்டும். எனவே, இந்தப் பரீட்சை அவர்கள் அறிவை அளக்காமல் ஆங்கிலப் பயிற்சியையே அளக்கிறது. இதன் பயனாக, மாணவர்கள் கருத்தினை அறிவதில் நாட்டம் இழந்து. அக் கருத்தை எளிதில் உருப்போட்டு

எழுதக்கூடிய அளவில் உள்ள ஆங்கிலக் குறிப்புக்களையே நாடி நிற்கின்றனர். நூல்களைக் கற்கும் மனப்போக்கு இங்கு வளருமா? ஆசிரியர் பேசும் விளக்கத்தினைக் கேட்கும் மனப் பான்மை வளருமா? Notes, Notes என்றே கதறுகின்றனர் மாணவர்கள்; அதனைக் கொடுத்தால்தான் அமைதியாக எழுதிக்கொள்கின்றனர்; பிற எல்லாம் அவர்களுக்கு இனிப்ப தில்லை; Bore, Bore என்று கத்துகின்றனர். ஈதோ அறிவுச் சூழல்? இங்கு எப்படி ஒழுங்குமுறை வளரக்கூடும்? ஒழுங் கின்மையே வளர்கிறது. யார் வளர்க்கிறார்கள்? மாணவர் களா! இல்லை; இந்தத் திட்டம் வகுக்கும் நாமே!

ஆங்கிலம், நம் மாணவர்கள் அறியவேண்டும். ஆனால், ஒரு மொழியை அறிவதில் இரண்டு வேறு நிலையுண்டு. ஒன்று அந்த மொழியிலுள்ள நூல்களை விரும்பிக் கற்று அறிந்துகொள்ளும் அளவு கற்பது; மற்றொன்று அதிலேயே எழுதும் அளவு கற்பது. எனக்கு வடமொழி வரும்; வடமொழி நூல்களை நான் படிக்க முடியும். ஆனால், அதிலே நான் எழுத முடியாது. எழுத முயல்வது வீணேயாம். நம்முடைய மாண வர்களும் ஆங்கில நூல்களைக் கற்றறியக்கூடிய அளவு ஆங் கிலம் அறிந்தால் போதும்; ஆங்கிலம் பேச்சுமொழியாதலின் சிறிதளவு முயன்றால் எழுதவும் வரலாம்? மிகமிக முயன்று இரண்டோர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிவிடலாம். ஆனால், எல்லாவற்றையும் ஆங்கிலத்திலேயே எழுதவேண்டும் என்று வற்புறுத்துவது பொருளற்ற, பயனற்ற முயற்சியே யாம்.

கலைச் சொற்களைப்பற்றிய குழப்பமும் நம்மிடையே உலவுகிறது. எல்லாத் துறைகளையும் எண்ணிப்பார்த்தால் நமக்கு வேண்டிய கலைச் சொற்கள் நூறாயிரக் கணக்கில் இருக்கக் காண்கிறோம்! இவற்றையெல்லாம் தமிழில் மொழி பெயர்ப்பதா? மொழிபெயர்த்த பின்தான் தொடங்குவ தென்றால், கடலலை ஓய்ந்தபின் கடலில் குளிப்பதுபோலாகும்.

கலைச் சொற்கள் நாள்தோறும் வளர்ந்துகொண்டே வருகின்றன. நம்முடைய கல்வி அறிவை நாம் அறிந்த கலைச் சொற்களின் எண்ணிக்கை கொண்டு அளந்துவிடலாம். நாம் அறிந்த கலைச் சொல்லே நம்முடைய கலை அறிவானால் இவற்றை முழுதும் மொழிபெயர்ப்பாகவோ, வேறாகவோ மாற்றி அமைக்கும்போது என்ன நேரும்? இன்று கலையில் வல்லவர்கள் என்பவர்கள் எல்லாம் அந்தப் புதிய சொல்லுலகில் ஓரறிவுமில்லாதவர்களாக மாறிவிடுவார்கள். தமிழ் அறிந்தவன் திடீரென ஹாட்டண்ட்டாட் மொழியினிடம் சிக்கினால் ஊமையாகத்தானே விளங்கவேண்டும்? ஆசிரியர்கள் எல்லாம் இப்படி ஊமையானால், இனிக் கற்பிப்பார் யார்? எனவே, அனைத்துலகக் கலைச் சொற்களைப் பயன்படுத்துவது தான் இப்போதுள்ள ஒரே வழி. ஆசிரியர்களுக்கும் அவை கொண்டு கற்பித்தல் எளிதாம். தமிழில் நூல் இல்லாத பொழுது ஆங்கில நூல்களையே நம்பி வாழும் மாணவரும், பிறரும் இக் கலைச் சொற்களை அறிவதால் ஆங்கில நூல்களைக் கற்பதும் எளிதாகிவிடும். தமிழில் எழுதுவதும் மாணவர்க்கு இயல்பாகிவிடும். தமிழில் நூல்கள் வரும் வரையிலும் காத்திருக்கவும் வேண்டாம். கலைச் சொற்களை அறிவது என்பதுதான் கலவித்துறையில் ஆழ்ந்து வருவதன் பயன் எனக் கண்டமையால் அவற்றின் எண்ணிக்கையை, அறிவைக் குறைத்தால் அன்றிக் குறைக்க முடியாது. எனவே, அவை நீங்கலான பிற சொற்களைத் தமிழில் எழுதுவதுதான் இங்கு மாணவர் காணும் எளிமை. இந்த எளிமையைத்தான் மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கல்லூரிக்குரிய நூல்களில் விஞ்ஞானம் இப்படித்தான் எந்த மொழியிலும் மணிப்பிரவாளமாக அமைய முடியும். கலைச் சொற்கள் பெருக்கல் வாய்பாட்டில் வரும் எண்கள் போன்றவையேயாம். ஆதலின், அவை உலகப் பொதுமொழி எனலாம். ஆனால், விஞ்ஞானத்தைப் பொதுமக்கள் அறியும்

வகையிலே விளக்குவது என்பது வேறு. இங்கே மணிப் பிரவாளம் வரவேண்டுவது இல்லை. நல்ல, இனிய, எளிய தமிழில் எழுதி வருவதே இங்கு இயல்பாகும். ஆனால், இந்த முயற்சியினையும், கல்லூரி வகுப்பு நூல்கள் எழுதும் முயற்சியினையும் ஒன்றெனை எண்ணிக் குழப்புதல் ஆகாது.

# 4. என் ஆசை

''ஆசைக்கோர் அளவில்லை.'' வீண் ஆரவாரமும் பெருமை பேசிக்கொள்வதும் இழிவின் அறிகுறிகளாம். உலகம் போற்றத் தமிழன் வாழவேண்டும். அதுவே என் பேராசை. எல்லாத் துறைகளிலும் தமிழன் உலகிற்குதவினு லன்றோ அவன் பெயர் உலக மக்களின் நாவில் உலாப்புறம் போதல் கூடும்! பழம்பெருமை பேசுவதால் பழைய மக்களது பெருமையும், இன்றைய மக்களது சிறுமையுமே வெளி யாகும். ஒவ்வொரு தமிழனும் தமிழ்நாட்டின் உயர்வும், தமிழின் சீரும் தன்னுலேயே வாழும் அல்லது தன்னுலேயே வீழும் என உறுதியாக நம்பித் தமிழின் ஒப்புயர்வற்ற உட் கோளுக்கேற்ப வாழ முற்படுதல் வேண்டும்.

உரிமையே தமிழனது உயிர்ப்பு; எத்துறையிலும், எங் கும் அது வாழவேண்டும். அன்பே தமிழனது உயிர்: அதன் உண்மையை உலகம் அறியுமாறு செய்தல்வேண்டும். அறிவே தமிழனது வடிவம்: அறிவுலகைப் படைத்தல்வேண் டும். அஞ்சாமையே அவனது வீறு: அதன் திறத்தை உலகு அறிதல்வேண்டும். கலையே அவனது கோயில்; அவ் வழிபாடு சிறக்கவேண்டும். பண்ணிசைந்த பாவே அவனது ஒலி: அத் தமிழ் முழக்கம் உலகெங்கும் பரவி, இன்பத்தை ஊட்டு தல் வேண்டும். தொண்டே அவனது இயக்கம்; அன்பொழு கும் அறிவுத் துறையில் அந்தக் கனிந்த தொண்டு, விஞ்ஞான முறையே, காற்றிலும், தரையிலும், கடலிலும் இயற்கையோ டியற்கையாக, பெருங்கலையாக இயைந்து, இன்பத் துறக்க மாக - வீடே உண்மை வீடாக - ஆக்கவேண்டும். 'அ, ஆ' என எழுதத் தொடங்குநாளில் இருந்து இந்தத் தமிழ்நிலே யில் ஒவ்வொரு தமிழ்க் குழவியும் வாழ முந்தவேண்டும். குப்பை வாரும் தொழிலேயாயினும் ஒப்புயர்வின்றிக்

கடமையே நோக்கமாகச் செய்து வாகை சூடுதல்வேண்டும். 'செய்வன திருந்தச் செய்''; ''சீர்பெற நில்''—இவையே நமது மதமாதல் வேண்டும். அவ்வாறாயின், பல ஐன்ஸ்டைன்களும், பல ஷேக்ஸ்பியர்களும், பல காந்திகளும், பல கலியாணசுந்தரனார்களும், பல டால்டன்களும், பல எடிசன்களும் வாழுமிடமாகத் தமிழ்நாடு உலகின் உயிர்நிலையாகும். அவனது தமிழினை உலகம் போற்றும்; வாழ்த்தும். அவன் பாட்டினை உலகம் பாடும். அவன் எழுத்தினை உலகம் ஓதும். அன்றே, தமிழ், உலகப் பொதுமொழியாகும்; தமிழ்நாடு உலகில் உயர் தனிநாடாகும். தமிழா, என் ஆசை நிறைவேறும்! நிறைவேறுதல் உன் கையில் உள்ளது.

# 5. கடற் கிழவன்

இதோ, கதிரவன் எழுகின்ருன். இன்று உடையவர் (இராமாநுசர்) திருநாள். திருமண் பூசிய அடியார் பலர் சூழநின்று அகமகிழ்கின்றனர். இவர்களிடையே, "சிதம்பர தரிசனமா, பறையா! நீ அதைச் சிந்திக்கலாமா, போடா!" என்ற பாட்டின் பொருளை நெடுகப் பேசுகின்ருர் ஒரு பெரியார்; "தீண்டாமை ஒழியக் கோயில்களை ஒழிப்பதா?" என்று கோயில்மேலும் சீறி விழுகின்ருர்! தீண்டாமை நீங்கப் பிறப்பெடுத்த உடையவர் பிறந்த பெரும்பூதூரில் காலத்தின் கோலத்தால் இத்தகைய பேச்சுப் பெரும்பேச்சாய் எழுவது கண்டு கோயில் துறையாளரும் திடுக்கிடுகின்றனர். பேச்சு முடிகிறது.

வயிற்றுக்கு நல்ல விருந்து! உண்ட களைப்பில் உறங்கி விடுகின்றேன். ஆசிரியருடைய கூப்பாடு கேட்டு விழித்துக் கொள்கின்றேன். மாலை ஆகின்றது. அருகே ஒரு பள்ளியி லிருந்து வயிறு எரிந்து கூவிக் கதறுகின்ருர் ஒரு கிழவர். "அட பாவிகளே! ஏனடா இப்படித் தமிழைக் குட்டிச்சுவராக் கித் தொலைக்கின்றீர்கள்!" என்று அவர் கூவுவது கேட் கின்றது. பள்ளிக்குள் நுழைந்து பார்க்கின்றேன். தீண்டாமை நீங்கக் கோயிலைத் திறந்தால் பட்டினி கிடந்து உயிர் விடுவ தாக முழங்கிய பெரியவர், நடுப்பகலானதும் பருப்புச் சோற்றை விருப்புற்று உண்டதனை ஒரு பையன் தன் கட்டுரையில் எழுதிக் காட்டுகின்ருன். "மறைந்து, அவர் உள்ளே சென்று உண்டார்" என்று சொற்களைப் பிரித்துப் பிரித்துப் பையன் எழுதியதுதான் இந்த ஆசிரியரின் கண்ணை யும் கருத்தையும் குத்திக் குலைத்துவிடுகின்றது. இதுகண்டே வயிறு எரிகின்ருர் இந்தத் தமிழிலக்கணப் புலவர். கருத் தினைப்பற்றிய கவலை இந்தக் கருந்தமிழ்ப் புலவருக்குக்

கனவிலும் கிடையாது. ''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்'' என்று எத்தனை முறை நெஞ்சுத் தண்ணீர் எல்லாம் வற்ற வறட்டுத் தவளைபோலக் கத்தினாலும், செவிடன் காதில் சங்கு ஊதியதுபோலக் கிடக்கின்றீர்களே! நன்னூலைச் சூளையில் வைத்துச் சுட்டெரித்தாற்போல, இலக்கணத்திற்கு மாறாகச் சொற்களைப் பிரித்து எழுதுகின்றீர்களே! ''மறைந்தவ ருட்சென் றுண்டார்'' என்றன்றோ சொற்களைப் புணர்த்து எழுதவேண்டும்? என இரைகின்றார் கிழவர். சிறுவனுக்கோ, ஒன்றும் விளங்கவில்லை. நகைச்சுவைப்பட எழுத்வந்த சிறுவன் நடுநடுங்கி, என்றென்றும், எழுதுவதனையே விட்டுவிடுகின்றான்.

இருண்டுவிடுகின்றது. வீடு திரும்புகின்றேன். 'தூங்கலாம்' எனப் படுக்கையில் சாய்ந்து, கண்ணை மூடிக்கொள்கின்றேன். கண்டன எல்லாம் காற்றாய்ப் போயின என நினைக்கின்றேன். ஒரு காட்சி தோன்றுகிறது. கனவா? நனவா? தெரியவில்லை. என்ன காண்கின்றேன்?....தோள்வலி படைத்த காளை, வாடி வதங்கிக் களைத்து இளைத்துநிற்கின்றான். அவன் தோள்மேல், எலும்பாய் ஒட்டிய வடிவம், காலம் கண்ட நரைத்தலையோடும் காட்சி அளிக்கின்றது. அருகே, இந்தக் காளை நீந்திவந்த கருங்கடல், 'ஓ' என்று இரைந்து, பெருஞ்சிரிப்புச் சிரித்து, அலைகளை வீசிக் கைதட்டிக் கொக்கரித்து நிற்கின்றது. காளை திணறுகின்றான்; நடக்கமாட்டாது தள்ளாடுகின்றான். கள்ளக் கிழவன் காளையின் கழுத்தைக் காலால் நெருக்கி, மெல்ல முறிக்க முயல்கின்றான்!...

மறக்க முயன்றாலும் இது மறையாது என்னை வெருட்டுகின்றது. இதனைக் காணுந்தோறும் என் கழுத்துத்தான் முறிவதுபோலத் திடுக்கிட்டு எழுகின்றேன். பேயா என்னை மிதிக்கின்றது? இல்லை. பழைய நினைவு வருகின்றது. நான் ஏழாம் வகுப்பில் கற்ற கதையில் வரும் காட்சி இஃது.

அரபிக்கதையில், சிந்துபாது என்ற மீகாமன், பல இடையூறு களுக்கு உள்ளாகி, முடிவில், செல்வனுகத் திரும்புகின்றான். ஒருமுறை கடற் கிழவன் ஒருவனைக் காண்கின்றான் சிந்து பாது. நடக்கத் திறமற்ற கிழவன், வழி அறியாத சிந்து பாதுக்கு வழிகாட்டவேண்டித் தோள்மேல் ஏறிக்கொள் கிறான்; பின்னர்க் கழுத்தை நெரிக்க முயல்கின்றான்.

உடையவரைக் கும்பிட்ட பயன்போலும் அந்தக் கதை யின் உட்பொருள், இன்று, படுத்த படுக்கையிலேயே தெளிவாகிவிடுகிறது! பழமையின் கொடுமையே கிழவனது கொலைமுயற்சி. நல்லகாலம்! கிழவன் கையிலிருந்து சிந்து பாது தப்புகின்றான். பழமையின் பிடியிலிருந்து மக்களும் விடுபடுவர் என்பதன்றோ இதன் கருத்து! வலவனேவா வான ஊர்தியில் சென்று, அணுக்குண்டு எறியும் இந்த நாளில், பழமையின் கொடுமை ஏது என்று சொல்லப்போமா? ''கம்பர் எழுதிய பின்னுமா பாட்டு எழுதுவது? பரிமேலழகர் திருக்குறளுக்கு உரை எழுதிய பின்னுமா வேறொரு விளக் கம் எழுத முற்படுவது? நச்சினார்க்கினியருக்குப் பின் ஒரு தொல்காப்பிய ஆராய்ச்சியா? சிவஞான முனிவர்க்குப் பின் னர்ச் சித்தாந்தத்தைப்பற்றிப் பேச என்ன உண்டு?'' — இவ்வாறு பேசுகின்ற பேச்சு எல்லாம் கடற் கிழவனுடைய புதிய கோலங்களே ஆம். பெரும்பூதூர்க் காட்சி எல்லாம் இந்தக கிழவனது காட்சியே ஆம். தொல்காப்பியத்தினையும் கம்பனையும் காட்டி நம்மை வாய்ப்பூட்டிட்டுச் சிறைப்படுத்த முயல்வார் எல்லாம் கடற் கிழவர்களே ஆவர். சிந்துபாது பிழைத்துச் சிறந்து ஓங்குவாளுக!

# 6. சங்கம் எங்கே?

நமது நாடு உரிமை பெற்ற நாடாகி ஐந்து ஆண்டுகள் முடியப்போகின்றன. ஐந்தாம் ஆண்டில் நமது நாட்டில் பிள்ளைகள் பள்ளிக்குப் போகின்ற வழக்கம் உண்டு. பள்ளிக் குப் போகின்ற பருவம் வந்தும், கண்ணைத் திறந்துபாராத குழவியாகவே நமது நாடு இன்று விளங்குகிறது. எழுதப் படிக்கத் தெரியாதவர் எத்தனை பேர்! இன்று சித்தூரில் பஞ்சம்; நாளை இராமநாதபுரத்தில் பஞ்சம்; நேற்றுக் கோயம் புத்தூரில் பஞ்சம் என்று, பஞ்சப் புராணம் பாடுவதே பெருவழக்காகிவிட்டது. 'இல்லை;' பாடவும் ஆள் இல்லை. பாட்டு வளர இடம் உண்டா?

மக்கள் பிறக்கின்றனர்; இறக்கின்றனர். ஆனல், அவர் கள் பெருமை அவர்கள் இறந்த பின்னும் வாழ்கின்றது. அவர்கள் வளர்த்த பண்பாடு சமுதாயத்திற் படிந்து, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து ஆற்று வெள்ளம் போல ஓடுகின்றது. தாய் மடியில் தவழ்ந்து தாய்ப்பாலோடு இந்தப் பண்பாடு விளங்கும் தாய்மொழியையும் உண்டு வளர்கின்ருேம். பண்பாட்டின் பிற வடிவங்கள் - ஓவியங்கள், கோபுரங்கள் - மறைந்தாலும், மொழியாகவும், மொழிவழி வளரும் செயலாகவும் ஓங்கி ஒவ்வொருவரிடமும் சிறப்புற்று வரும் பண்பாடு மறையாது. இந்த மொழிப் பண்பாட்டின் பெருமை, அந்த மக்களினத்தின் உயிர்நிலை, அவர்கள் வர லாற்றின் சுருக்கம், அவர்கள் நெஞ்சின் துடிதுடிப்பு—இலக் கியங்களில் விளங்குகிறது. மக்களின் உயிர்நிலையாக விளங்குவது பண்பாடு. நம் உரிமை இந்தப் பண்பாட்டினை வளர்க்கவில்லையானல் என்ன பயன்? சாவதற்கா உரிமை? வாழவன்ருே உரிமை? வாழ்வென்ருல், பாட்டு. பல துறை யாக விரிந்து வளரும் உண்மை நாகரிகத்தில் அறிவாய்ப்

பழுக்கும் இனிய இன்ப அன்புப் பழமன்ரோ பண்பாடு? இந்தப் பண்பாடு வளர்வதன்ரோ உரிமையின் அறிகுறி? அதுவே மணக்கோலம்; பிற எல்லாம் பிணக்கோலம். இந்தப் பண்பாட்டின் வளர்ச்சியை இலக்கிய வளர்ச்சியில் காண லாம். எல்லாத் துறைகளும் அங்கு நிழலிட்டு ஒளிர்ந்து விளையாடும். இந்த வகையில் இன்று என்ன காண்கிருேம் பாரதிக்குப் பின்?

பழைய நாளில் சேர சோழ பாண்டிய பல்லவர் தமிழை வளர்த்தனர். வள்ளல்கள் புலவர்களுக்கு வறுமை என்பதே தெரியாதபடி வாரி வழங்கினர். விசயநகரப் பேரரசும் புலவ ரைப் போற்றியது. பின்வந்த பாளையப்பட்டினரும், சிற் றரசினரும் தம் பேரவையில் புலவரை வைத்துப் பாராட்டு வதனை இன்றியமையாத அரசியல் வழக்கமாகக் கொண்டு வந்தனர். புலவரில்லாத செல்வரது அவை பொலிவு பெறுவ தில்லை என்று எல்லோரும் நம்பினர். ஆனல், இன்ரு, முடிவேந்தரும் இல்லை; சிற்றரசரும் மறைந்தனர்; நிலத்திற் பொலிந்த செல்வர் நடுப்பகலில் நிழல்போல மறைந்து வரு கின்றனர். குடியரசில் எல்லோரும் இந்நாட்டு மன்னர். ஆனல், இந்த மன்னர்களோ, பட்டினி வள்ளல்கள்! இவர்கள் எப்படிப் பாவாணரைக் காப்பது? பட்டினியைத்தான் பங்கிட் டுக் கொடுக்கலாம்!

புரவலர்கள் ஏன் வேண்டும்? உயர்ந்த இலக்கியங்களை இயற்றவேண்டுமானல், பெரும்பான்மையோர் அதனை உடனே சுவைத்து இன்புற முடியாது. பாடிய பாவலனுருக்கு அவர் எல்லாரும் சோறிட முடியாது. இன்று, அசையும் படங் களிலும், பேசும் படங்களிலும் என்ன காண்கிருேம்? களவு - கடையான காமம் - இவற்றை விளக்குகின்ற கதைகளே பணத்தைக் குவிக்கின்றன. இலக்கிய உலகிற் சிறந்த படங் கள் அங்கு விலையேறுவது அருமை. பழைய புலவர்களுக்கு இன்றைய பட முதலாளிகளின் கவலை இருந்தது இல்லை.

புரவலர்கள் இருக்கும் வரை அவர்கள் இலக்கியம் மக்களை உயர்த்தும் இலக்கியமாகத் தூய வானகத்தில் பறந்து வரலாம்.

இந்த நிலையில் என்ன செய்வது? குடியரசின் பெருமை கூட்டுறவின் பெருமை. பண்பாட்டில் ஈடுபடுபவர் எல்லாம் ஒன்று சேர்தல்வேண்டும். அரசியலார் இவர்கள் சங்கத்திற்கு ஒரு சிறப்பிடம் தருதல் வேண்டும். சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குதல் முதலிய தொண்டுகளில் இந்தச் சங்கம் ஈடுபடுதல் கூடும். ''நாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்படுவன யாவை? பிற நாடுகளில் எவ்வாறு இவை எல்லாம் வளருகின்றன?'' என்பன போன்றவற்றை ஆராய்ந்து வெளியிடலாம். அவற்றை நிறைவேற்றத் திட்டங்கள் வகுத்து அரசியலார் உதவியைப் பெறலாம். வழிகாட்டியாக இந்தச் சங்கம் விளங்குமே அன்றிப் புலவர்களை ஒரு வழியில்தான் செல்லவேண்டும் என வற்புறுத்தி எந்திர நாகரிகத்தில கொண்டுவிடாது.

பழைய நாளில் தமிழ்ச் சங்கம் அத்தகைய தொண்டினைச் செய்துவந்தது. இது நாமறிந்த பழங்கதை. இன்று தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒரு சிறிய அளவில் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. அரசியலாரின் ஒத்துழைப்பிருந்தால் மேலும் பல நன்மைகள் செய்தல் கூடும். ஆனால், தமிழுக்கு மட்டும் இவ்வாறு இருந்தால் இந்திய நாட்டுக்குப் போதுமா? ஒவ்வொரு மொழிக்கும் இவ்வாறு இருந்தால்கூடப் போதாது; நாடு முழுவதற்கும் உழைக்கும் ஓர் இலக்கியச் சங்கம், பழைய தமிழ்ச் சங்கம் இருந்த நன்மதிப்போடும், ஆற்றலோடும், பெருமையோடும் இன்று விளங்கவேண்டும். உரிமை பெறுவதற்கு முன்னர்ப் பலர் இத்தகைய முயற்சிகள் எடுத்ததுண்டு. அறிஞர் கசின்சு (டாக்டர் கஸின்ஸ்) இத்துறையில் பெரிதும் முயன்றார். இஃது ஒரு பழங்கனவு. ஆனால், இத்தகைய சங்கம், அந்நாளைய மன்னர்பிரான் பொறி

யொடு வெளிவருவது அடிமையின் அறிகுறியாகுமே அன்றி உரிமைப் பண்பாட்டினை வளர்க்காது என ஒருசிலர் அஞ்சினர். மக்களுடைய தலைவர்களில் பெரும்பான்மையோர் விடுதலைப் போராட்டத்தில் குதித்திருந்தமையால் இதனைப் பற்றி எண்ண அவர்களுக்கு நேரமில்லாதுபோயிற்று. உரிமை பெற்ற பின்னர் ஓவியம், இசை முதலியவற்றிற்கு ஒரு குழு அமைத்ததுபோல, இலக்கியத்திற்கும் ஒரு நிலையம் அமைக்க ஏற்பாடுகள் எழுந்தன. சென்ற ஆண்டு டில்லியில் பல நாட்டுப் பல மொழியினரும் கூடினர்; பேசினர்; திரும்பினர். முடிவு வெளிவரக் காணோம். வரவுசெலவுத் திட்டத்தில் அரசியலார் இதற்கெனப் பணம் ஒதுக்கிவைக்கக் காணோம்.

இந்தி மொழி பரவுவதே போதும் என அங்குள்ளார் நினைக்கலாம். வடநாட்டு மொழிகள் வடமொழியாம் சம்ஸ்க்ருதத்தின் திரிபுகள். தென்நாட்டு மொழிகளில் பல வடமொழியால் வாழ்ந்தாலும் அவற்றின் அடிப்படை வடமொழியன்று. பச்சைத் தமிழும், அச்சுத் தெலுங்கும், பச்சை மலையாளமும், பழங் கன்னடமும் பசுந்துளுவும் வடமொழியை வெறுக்காவிடினும், வடமொழியின் துணையின்றி வாழ முடியும். இவை எல்லாம் ஒரு தாய்மொழியின் மக்கள். "கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்.... அழியாதுன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்று அறிஞர் சுந்தரம்பிள்ளை தமிழைப் போற்றவில்லையா? ஆதலின், இந்த மொழிகளின் வரலாறு பலபல வகையில் வேறுபட்டாலும் ஒருவகையால் ஒற்றுமை பெற்று விளங்குகிறது.

இன்று தற்காப்புத் தேடி வளர்ந்து ஓங்கவேண்டிய பழைய மொழிகள் இவை. ஆதலின், இந்திய இலக்கியச் சங்கம் தோன்றுவதற்குமுன் அதற்கு வழிகாட்டியாகத்

தென்னிந்திய இலக்கியச் சங்கம் ஒன்று தோன்றுதல் வேண்டும். அவ்வம் மொழியில் ஆஸ்தான வித்வான்கள், அவ்வம் மொழியில் வரும் நூல்களுக்குப் பரிசில்கள் என்ற திட்டங்கள் சென்னை நாட்டில் நிலைத்து நின்றுவிட்டன. ஆதலின், இந்த அடிப்படையில் இலக்கியச் சங்கம் தோன்றுவது எளிது. தென்முனை வடமுனைக்குத் தெரிவது அருமை; நமக்குத் தெரிவது எளிது. உலகில் வடமொழி நூல்கள் பேரும் புகழுமாக விளங்குவது நமது பெருமையே ஆகும். ஆனால், தென்மொழியில் உள்ள சிறந்த நூல்களும் உலகில் பரவி அறிவுப் பஞ்சத்தினைப் போக்கவேண்டாவா?

இதில் தென்னிந்திய மொழியினருக்கும் நன்மை உண்டு. வடமுனை பிற நாடுகளோடு எளிதில் தொடர்பு பெறுகிறது. தென்னாட்டு மொழிகள் தமக்குள் ஒன்றோடொன்றும் தொடர்பு கொள்வதில்லை. நாம் கதவுகளைத் திறந்துகொண்டு வெளியே வரவேண்டும். வெளியிலிருந்து வீசும் தூய காற்றும் கதிரவனது நல்லொளியும் உள்ளே புகுந்து தூய்மையாக்கும்படி பலகணிகளைத் திறக்கவேண்டும். ஒருவர் நூலை ஒருவர் கற்பதோடு, பிறநாட்டு நூல்களையும் அறிய வாய்ப்பு வேண்டும். அவற்றில் தலைசிறந்தவற்றை நாம் நம் மொழியில் அமைத்துக்கொள்ளுதலும் வேண்டும். கலைக் களஞ்சியங்களுக்குப் பொதுவான படம் முதலியவற்றை எல்லா மொழியினரும் ஒன்ருகத் திரட்டலாம் அன்றோ? கலைச் சொற்கள் மொழி வளர்ச்சித் திட்டங்கள் போன்ற முயற்சிகளில் அனைவரும் ஒத்துழைப்பதால், எடுத்த வேலையை எளிதில் முடிக்கலாம். வரலாற்று ஒற்றுமை, சூழ்நிலை ஒற்றுமை முதலியனவும் துணை செய்யும்.

சர்தார் பணிக்கர் இந்த முயற்சியை வற்புறுத்திப் பேசியதையும் இதற்கென முன்னேற்பாட்டுக் குழு ஒன்று தோன்றியுள்ளதையும் செய்தித்தாளில் பலரும் கண்டிருப்பர். இந்த முயற்சி வெற்றியோடு தென்னாட்டு மொழிகளினை

வளர்த்து இந்திய இலக்கியச் சங்கம் தோன்ற வழிகாட்டுவதாக.

தமிழ்ச் சங்கம் தமிழன் உடலில் ஊறியுள்ளது. தமிழன் புதுச் சங்கம் காணவும் வல்லவன். வாழ்க சங்கம்! வாழ்க இந்தியா! வாழ்க உலகம்!

# 7. தமிழுக்கு உழைத்த தாத்தா

'தமிழ்த் தாத்தா'வுக்கு நூற்றுண்டு விழாக் கொண்டாடினேம். பொதுவாகப் பெரியோரின் இறந்தநாளைக் கொண்டாடுவதே வழக்கம். ஆனுல், சாவாப் பெருவாழ்வு வாழ்ந்த பெரியோர்கள் - புதிய யுகத்தை, ஊழியைத் தொடங்கிய அறிஞர்கள் - உடலைமட்டும் எமன் கையில் விட்டு ஒழித்து அவனை ஏமாற்றி என்றென்றும் வாழும் புகழாளர்கள் - இவர்கள் இறந்தார்கள் என்று எவ்வாறு கூறுவது? இவர்கள், இறப்பின் எல்லையையும் இறந்து வாழவே பிறந்தார்கள். இவர்கள் பிறந்த விழாவே பெரும் பொருள் உடையது. கிருஷ்ண ஜயந்தி, இராம ஜயந்தி, சங்கர ஜயந்தி, காந்தி ஜயந்தி என்று கொண்டாடுவது போலச் சாமிநாத ஜயந்தியும் இனிக் கொண்டாடுவோம். ஆம்; டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்தாம் தமிழ்த் தாத்தா - தமிழ்க் குழந்தை - அதுவே வியப்பு.

அவர் பிறந்து நூருண்டு - சகாப்தம் - முடிந்தது. இந்தியாவும் தமிழ்நாடும் புத்துயிரும் புத்துடலும் பெற்றெழுந்த நூற்றுண்டு இது. சிப்பாய்க் கலகம் என்ற இந்திய உரிமைப் போருக்கு வேண்டிய சூழல் உருவாகும்போது இவரும் கருவில் உருவானுர். இன்று நாம் உரிமையும் பெற்று வாழ்கின்றேம். நம் உரிமை வேட்கை பழம்பெருமை வேட்கையாகவும் விளங்கியதன்றே? அந்தப் பழம் பெருமையே நமக்கு உரிமை கேட்கும் உறுதி தந்தது; உரிமை கேட்கும் வாயும் தந்தது. நம் பழைய வரலாறு நமக்கோர் ஊக்கம் தந்தது. மேல்நாட்டாரும் வியந்து போற்றும் வரலாறு அன்றே அது? அந்த வரலாறு நம்முடைய மொழிகளின் வழியே வெளியாயிற்று. நம் உரிமைப் போராட்டம் மொழிப் போராட்டமாய், வரலாற்றுப் போராட்டமாய்

பண்பாட்டுப் போராட்டமாய் வளர்ந்ததன் நுட்பம் இதுதான். இத்தகைய உரிமைப் போராட்டம் முதலில் சிப்பாய்க் கலக மாய்த் தோன்றினும் முடிவில் காந்தியடிகளின் சத்தியாக் கிரகம் என்னும் பண்பாட்டு அன்புப் போராட்டமாகத்தானே விளங்குதல் கூடும்?

பண்பாட்டுப் போராட்டம் என்றால் பண்பாட்டினை அறியவேண்டாவா? முன்னே தமிழ்ப் பழநூல்கள் வெள்ளத் தில் வெள்ளமா யோடின; நெருப்பில் பேரொளியாக எரிந் தன. மக்களைவிட நெருப்பறியும், நீரறியும் தமிழின் அருமை: தமிழ் எழுதிய ஓலைகளை உண்ட செல்லும், இராம பாணமும் தமிழின் சுவையை அனுபவித்ததுபோலத் தமிழன் அனுபவித்ததில்லை. உரிமை இழந்த நாட்டில் உலகம் போற் றும் நூல்களின் நிலை வேறு என்ன ஆகும்! ஆடிப் பெருக் கென்றால் காவிரிக்கு ஏடுகொண்டு வழிபடவேண்டும். உற் றவர் இறந்தார் என்றால், அவர் ஏடும் உடன்கட்டை ஏற வேண்டும். இப்படி ஒரு வழக்கமும் வந்ததே!

உரிமை வேட்கை பிறந்தபோது பழைய நூல்களைத் திரட்ட, அவற்றை அறிய, உலகினுக்கு அவற்றை வெளி யிடப் பெருமுயற்சியும் பிறந்தது. சங்க நூல்கள் இல்லை யானால், தொல்காப்பியம் இல்லையானால் நம் பழமையை எவ்வாறு பேசுவது? பசிபிக் முதல் அத்லாந்திக் வரை, காழகம் முதல் உரோமாபுரி வரை சென்ற தமிழரசின் உரி மையைப் பெருமையாக நாம் எவ்வாறு பேசுவது! சிலப்பதி காரமும் மணிமேகலையும் சிந்தாமணியும் இல்லையானால் தமிழ் மரபின் வளர்ச்சியை எவ்வாறு அறிவது? உலா, கலம்பகம், தூது, பிள்ளைத்தமிழ், கோவை, மாலை, அந்தாதி, பரணி, குறவஞ்சி முதலியவற்றை அறியாவிடின் பின்னிளைய தமிழின் பல்வேறு போக்கினை எவ்வாறு உள்ளவாறு உணர்வது?

உரிமை வேட்கை பிறந்ததும் இவற்றைத் திரட்டி வெளியிடும் முயற்சியில் தமிழுலகம் ஈடுபட்டது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதற்பட்டம் பெற்ற தாமோதரம் பிள்ளை தொல்காப்பியமும் கலித்தொகையும் சூளாமணியும் அச்சேறி உலாவக் கண்டார். தொல்காப்பிய உரையிற் சங்கப் பாக்களே எடுத்துக்காட்டுக்களாக வருகின்றன. அவற்றின் உண்மை வடிவத்தினைக் கண்டாலன்றோ தொல்காப்பியத்தினை உள்ளவாறு உணர்ந்தவர் ஆவோம்? சங்க நூல்கள் அன்றோ நம் பழைய வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டுகின்றன? இந்திய நாட்டுப் பேச்சுமொழிகளின் மிக மிகப் பழையது தமிழே ஆகும். ஆதலின், பழந் தமிழ்நூல்கள் நம் பழம்பெரு வரலாறாகும். பத்துப்பாட்டும், புறநானூறும், பரிபாடலும், பதிற்றுப்பத்தும், ஐங்குறுநூறும், குறுந்தொகையும் தமிழ்த் தாத்தா புதியனவாகக் கண்டெடுத்துத் தந்த பழம் புதையல்கள். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமே சங்கப் பாக்கள். இந்தப் பதினெட்டு மேற்கணக்கு நூல்களில் பதினைந்தும் இவர் அச்சிட்டன.

இவருடைய பதிப்புக்களே இவர் சிறப்பினைப் பேசும். இத்தனையும் இவர் பதிப்பித்தது நம்முடைய நல்ல காலம். ஏடுகளைப் படிப்பதே ஒரு கலை. புள்ளியில்லாமல் 'தொலகாபபியம' என்பதனைத் 'தொல்காப்பியம்' என்று படிப்பது எளிதா? 'Ilampuranam' என்று ஆங்கில எழுத்தில் எழுதப் பெற்றதனைத் தமிழ் எம். ஏ. பட்டப் பரீட்சைக்கு எழுத விரும்பிய ஒருவர் 'இளம்புராணம்' என்று படித்துவிட்டுக் கடையெல்லாம் கேட்டலைந்தார் என்றால், இதனினும் அருமையாகப் புள்ளியில்லாத எழுத்துக்களைப் படிக்கும் கலையின் அருமையை என்னென்று சொல்வது? இவற்றைப் படிப்பது ஒருபுறம் இருக்கட்டும். படிக்க ஏடுகள் வேண்டாவா? பேரே தெரியாமல் பரணைமேல் கிடக்கும் ஏடுகளை எவ்வாறு அறிவது? ஊர் ஊராகச் சுற்றினர் தமிழ்த் தாத்தா. போன

இடத்தில் எல்லாம் ஏடுகள் உண்டா என்றுமட்டும்தான் கேட்கமுடியும். இருந்தால், எல்லாவற்றையும் புரட்டித்தானே பார்க்கவேண்டும்? கலம் உமி குத்திக் கைப்பிடி நெல் காண்பதுபோலவே முடியும் இந்த ஏட்டு வேட்டை. கலம் குத்தி மணியே காணுது, கையும் கண்ணும் நொந்து திரும்புவதும் உண்டு! தாமறிந்த பெரியாரிடம் இவர் கேட்டுப் பெற்ற பரிசில் என்ன? அவர்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தி ஒருசில ஏடுகளைப் பெற்றதேயாம்.

இவற்றை எல்லாம் ஒருமுறைக்குப் பலமுறை ஓதுவதே இவர் வாழ்வு. ஒருநாளா, பொழுதுபோக்கா? வாணுள் எல்லாம் இதே உழைப்பு! உயிர் பிரியும் வரை இதே உழைப்பு! காலையில் எழுவது முதல் இரவு துயிலும் வரை இதே உழைப்பு! உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? இவர் பதிப்பித்த நூல்களைமட்டுமா அறிகிறோம்? ஒப்புமைப் பகுதி என்று இவர் காட்டுவனவற்றின் வழியே பிற நூல்களையும் அறிகிறோம்.

இவர் நேரே தொல்காப்பியத்திற்கோ சங்க நூல்களுக்கோ போகவில்லை. பழைய மரபின்படியே அந்தாதி, கலம்பகம், கோவை, புராணங்கள், ஐந்திலக்கணம் என்ற இவற்றின் வழியே தமிழறிந்தார். அந்தநாளைய மரபின்படி தமிழ் வளர்த்துப் புராணம் பாடிய மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டுப் பாட்டெழுதிப் பழகினர். புராணம் பாடுவதற்கும், புராணம் பாடப்போகும் ஊரின் வரலாறுகள் கதைகள் பாடல்கள் முதலியவற்றைக் கேட்டறிய வேணடும் அன்றே? அந்தப் பழக்கம் தமிழ்த் தாத்தாவின் உடலில் ஊறிவிட்டது. பலரறியாத பாட்டுப் பாடினுலும் பலரும் அறிந்த கதைகளையும் பாடல்களையும் அறிந்து பலரோடும் தமிழில் திளைக்கின்ற வாய்ப்பினை முழுதும் இவர் பயன்படுத்திக்கொண்டார். 'கண்டதும் கேட்டதும்' என்று இவர் எழுதிய நூல், இவை எல்லாம் அவருடைய தமி

மூாராய்ச்சிக்கு உதவியதனையும் அவருக்குத் தமிழ் என்றால் ஏற்பட்ட ஈடுபாட்டினையும் நன்கு விளக்குகிறது. அந்தாதி முதலிய நூல்களில் உள்ள சுவையினையும் எடுத்துக்காட்டிப் பின்னே நம்மையும் சுவைக்குமாறு இவர் செய்கின்றார்.

பின்வந்த இலக்கியங்களுக்கெல்லாம் பிறப்பிடமாக அமைந்த சிந்தாமணியே இவர் முதல்முதல் பதிப்பித்தது. சைவ மடத்தில் பழகியவர் சமண நூலைப் பதிப்பிப்பது அந்நாளைய வியப்புக்களில் ஒன்று. தமிழன்றி வேறு ஒன்றிலும் ஈடுபடாதவராகையால் அவருக்கு ஈது ஒன்றும் வியப்பில்லை. நச்சினார்க்கினியர் சைவராயினும் சிந்தாமணிக்கு உரை எழுதவில்லையா? அவர் பரம்பரையில் வந்தவரே தமிழ்த் தாத்தா. நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு மட்டுமா உரை எழுதினார்? பத்துப்பாட்டுக்கும் உரை எழுதினார். பத்துப்பாட்டிலும் தமிழ்த் தாத்தாவின் மனம் சென்றது. சிந்தாமணியை ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்றென்றால் சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற மற்றைய இருபெரும் காப்பியங்களிலும் மனம் செல்லாதா? மிகுதிநின்ற வளையாபதியும் குண்டலகேசியும், எவ்வளவு முயன்றும் கைக்கு எட்டவில்லை. நச்சினார்க்கினியர் உரை என்றால் எட்டுத்தொகை நூல்களும் அங்கே காட்சியளித்துக் கருத்தைக் கவரும்; பெருங்கதை என்ற நூலும் எடுத்துக்காட்டாக வரும். கொங்குவேளின் இலக்கியச் சுவைப் புதையலையும் தேடிக் கொணர்ந்தார் தமிழ்த் தாத்தா. ஒருசில பகுதிகளே கிடைத்தன. இருந்தாலும், என்ன சுவை! என்ன சுவை!

தமிழ்த் தாத்தா பழைய இலக்கண நூல்களையும் வெளியிட்டார். ஐயனாரிதனாருடைய புறப்பொருள் வெண்பாமாலை இல்லையானால் புறநானூற்றின் துறைகளை அறிவது முடியாது. நன்னூலின் பழைய உரைகளையும் ஐயர் அவர்கள் பதிப்பித்து இலக்கண வரலாற்றினை நாம் உணருமாறு செய்தார். கௌடப் புலவன், கவிராக்ஷசன், கவிச்சக்கர

வர்த்தி ஒட்டக்கூத்தனைப்பற்றிக் கதைகளை கேட்டுவந்த தமிழ் உலகம் அப் புதுமைக்கவியின் பாடல்களில் தலைசிறந்த தக்க யாகப்பரணியினைப் பழைய உரையோடு பயிலும் பேற்றினையும் தமிழ்த் தாத்தா தந்தார்; பிற பரணிகளையும் அச்சிட்டார்; பிற பிரபந்தங்களையும் வெளியிட்டார்; அவற்றின் அருமை பெருமைகளை விளக்கினார்.

குமரகுருபரர் பிரபந்தம், சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்—இவையும் இவர் கையில் மெருகு பெற்றன. குறவஞ்சி நாடகத்தில் இவருக்கு இருந்த ஈடுபாடு, இசையில் இவருக்கு இருந்த பயிற்சி, இவர் கேட்டறிந்த வழக்குக்களின் இன்றியமையாமை—இவை எல்லாம் இந்தப் பதிப்புக்களில் வெளியாயின.

இவர் மேனாடு சென்று பதிப்புமுறையை அறியவில்லை; ஆங்கிலக் கல்லூரி சென்றும் அறியவில்லை; தனித் தமிழனாக இருந்தே அறிந்தார். உண்மை நாட்டம் ஒன்றே இவருக்கு உயிர். புறநானூற்று முதற் பதிப்பில், 'என்று' என்பதில் தந்நகரம் வந்த பாடபேதங்களையும் இவர் குறித்து வைத்தார். இப்படிப் பலப்பல. என்ன பயன்? தவறென்று பிறர் கருதிய பாடங்கள், பின்னே நிறையான பாடங்களாயின. சூளாமணியைப் பதிப்பித்த அந்நாளைய பெரியார் ஒருசில இடங்களில் விளங்காமையாற் பாடத்தைத் தாமே திருத்தியதாக முன்னுரையில் கூறியுள்ளார். அதுவே இயல்பாகலாம். ஆனால், அவ்வாறு திருத்தினால் பின்னர் உண்மை அறிய முடியுமா? தமிழ்த் தாத்தா அப்படி என்றும் செய்ததில்லை. இருந்ததனை இருந்தபடி இருத்திக்காட்டும் இயல்பினையே இவரிடம் காண்கிறோம். தம் கருத்தினைக் குறிப்பில் குறிப்பாகக் கூறுவார்; ஒத்த பகுதிகளைக் காட்டுவார்; வேண்டிய விளக்கம் தருவார்; இன்றைய வழக்கினைச் சுட்டுவார்; விளங்கவில்லை என்றும் எழுதுவார். இந்த வீரமும் இவருக்கு உண்டு. எத்தனை பெயருக்கு இத்தனை வீரம் உண்டு? இன்று

வருகிற பதிப்புக்களை நம்ப முடியுமா? தாத்தா இவ்வாறு பழகியதால் பிறர் இத்தகைய பழக்கத்தினை மேற்கொள்ளாமையைக் கண்ணெரியக் கருத்தெரியக் கண்டமையால் தாமே சிறந்த தமிழ்நூல்களைப் பதிப்பிக்கவேண்டும் என்று எண்ணினர். இதனைத் தவருகக் கருத முடியுமா?

தமிழொடு துடித்தது தமிழ்த் தாத்தாவின் உள்ளம். எல்லாவகையான நூல்களையும் அவர் பதிப்பித்தமையும் கண்டோம். பதிப்பாசிரியர் மட்டுமா அவர்? உரையாசிரியரும் அவரே. மணிமேகலையின் குறிப்புரை, குறுந்தொகையின் விரிவுரை இவற்றை யாரே மறக்கக்கூடும்! தமிழ் எழுதும் முறையும் தமிழ்நாட்டு முறையோடு சேர்ந்து அவரிடம் மாறி வளர்ந்து ஓங்கியது. தமிழே வடிவாக விளங்கியவர் தமிழொடு வளராரா? புறநானூற்றின் முன்னுரையையும், குறுந்தொகையுரையையும் கண்டால், 'என்ன புரட்சி!' என்றே தோன்றும். முதுமையில் எழுந்த இளைய மனப் புரட்சி, அன்புப் புரட்சி, தமிழ்ப் புரட்சி இது. சிறுவர்க்கான செந்தமிழ் என்ற முறையில், 'கண்டதும் கேட்டதும்' முதலான நூல்கள் எழுதினர். இந்த மாறுதல், இளைஞரோடு பழகி இளைஞர் உள்ளத்தோடு இவர் ஒன்றுகிவிட்டதால் எழுந்ததுபோலும்! கும்பகோணம் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ்த் தலைமை நடாத்தும் உரிமை பெற்றார்; பதிப்பாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என இவ்வாறு வாழவரும்போது புதிய தமிழுலகத்திற்கேற்ற நூலாசிரியராகவும் ஓங்கி வளர்ந்தார்; வாழ்க்கை வரலாறு என்ற நூல்வகைக்கு என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் வகையிலும் எழுதினர். நன்றியுள்ளமே வடிவானவர் அன்றோ இவர்! தியாகராய செட்டியார் கும்பகோணம் கல்லூரித் தமிழ்த் தலைமையை இவருக்கு அளித்தார். அவர் வரலாற்றைத் தாத்தா எழுதினர். தம் வீட்டினையே தியாகராயர் பெயரால் அழைக்கலாயினர்; அம்மட்டுமா? தம்

ஆசிரியர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் வரலாறும் எழுதினார். அது தமிழில் தனியிடம் பெற்றுள்ளது. 19-ஆம் நூற்றாண்டின் தமிழிலக்கியத்தின் வரலாறுமாக அஃது அமைந்துள்ளது. 'Auto-biography' என்ற சுயசரிதம் அல்லது தன் வாழ்க்கை வரலாறு எழுதுவதும் தமிழ்நாட்டில் புதிய கலை. காந்தியடிகளின் சுயசரிதம், நேருவின் வரலாறு, திரு. வி. க.வின் வாழ்க்கைக் குறிப்புக்கள் போலத் தமிழ்த் தாத்தா - டாக்டர் சாமிநாத ஐயர், தமிழ் எழுத்தாலும் வாழ்கிறார். வாழ்க தமிழ்த் தாத்தா! வாழ்க தமிழ்!

# 8. தமிழ் வளர்கிறதா?

''கன்னித் தமிழ்,'' ''என்றுமுள தென்தமிழ்,'' என்று புலவர் போற்றினர். இன்றும் இவற்றை மறைமொழியாக வையாமல் மேடைகள் முழங்குகின்றன. நம்மைப் புகழ்ந்து கொள்வது நாகரிகம் அன்றுபோலும்! ஆனால், தற்புகழ்ச்சியில் விருப்பம் இல்லாதவர் யார்? எனவே, நம்மைப் புகழ்ந்து கொள்வதற்குப் பதிலாக, நம் தமிழை வானளாவப் புகழ்கின்றோம். ஆனால், இது பெரும்பான்மையும் பழமையைப் பாராட்டுவதாக முடிகின்றது. சிலபோது இன்றைய நிலைக்கு இரங்குவது ஆகவும் அப் பழம்புகழ்ச்சி மாறுகின்றது.

தமிழரை விட்டால் தமிழ் எங்கே உண்டு? ஓலையிலா? கல்வெட்டிலா? அப்படியானால், செத்தொழிந்த பழைய எகிப்து மொழியும் கல்வெட்டில் வாழ்கிறது எனல்வேண்டும். கல்வெட்டும் கண்டு எடுத்து ஓதுவார் நாவில் அன்றோ வாழ்கிறது? எனவே, தமிழ், தமிழன் நாவில் தவழ்ந்து விளையாடும் கலைமகளாம். தமிழனே அதனைப் படைக்கும் கடவுள். பேசுந்தோறும் இந்தப் படைப்பு நிகழ்கிறது. மந்திரத்தை நாவும் அசையாமல் உள்ளுக்குள் நவிலுதலும் உணடு; அதற்குப் பதிலாக எழுதுவதும் உண்டு. அதுபோலத் தமிழும் அவ்வாறு வழங்கினாலும், அடிப்படை, நாவில் எழும் பேச்சே ஆம். தமிழ். பேசும் மொழியாக உள்ளவரையிலும் வாழ்கிறது, வளர்கிறது என்றே கூறவேண்டும்.

ஆனால், இத்தகைய வளர்ச்சி எல்லா மொழிகளுக்கும் உண்டு. உயிராக இருக்கும் நிலையே அன்றி, வாழ்வு என்று இதனை உயர்த்திப் பேச முடியாது. கம்பன்தமிழ் வாழ்ந்தது எனலாம். ஆங்கிலம் பல நாடுகளிலும், வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் தங்குதடையின்றி வாழ்கிறது. அவ்வாழ்வின் சிறப்பால் அதனை அனைவரும் போற்றிக் கற்கின்றனர். அத்தகைய நிலையில் தமிழ் வளர்கிறதா?

எல்லையைக் கண்டால் இந்த நிலை உண்டா? வடவேங்கடம் தென்குமரி, கிழக்கும் மேற்கும் கடல் என்ற நிலை தொல்காப்பியர் காலத் தமிழகத்தின் எல்லையாம். இன்று மிகக் குறுகிவிட்டது தமிழ்நாடு. ஆனால், தமிழ் பேசுவார் எண்ணிக்கை அன்றினும் மிகுதியே எனலாம். தமிழ் பேசுவார், இலங்கையிலும், கீழைக்கடல்நாடுகளிலும், தென்ஆப்பிரிக்காவிலும் பரவி உள்ளனர். அவர்கள் கூலித்தமிழர். அரியணையில் வீற்றிருந்தது தமிழ் என்று குமுறுகிறது தமிழ் உள்ளம். என்றாலும், காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு. எழுதப் படிக்கத் தெரிந்த தமிழர் தொகை நூற்றுக்கு இருபத்தைந்து அளவிலும் இல்லை. என்றாலும், பத்திரிகை உலகில் தமிழ் முன்னேறியே வருகிறது; தமிழ் நூல்களும் அழகான நிலையில் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. நூல்நிலையத்தில் நூல்களைப் படிக்கும் வழக்கம் ஆந்திர நாட்டில் சிறந்துள்ளது என்றால், தமிழ்நூல்களை அவ்வாறு பொது உடைமையாகக் கொள்வதில் மனமின்றித் தனிஉடைமையாக வாங்கி வைத்துத் திளைக்கவே விரும்புகிறது தமிழ்நாடு எனல்வேண்டும். ஆனால், நினைத்ததுபோல வாங்கக் கையில் பணம் உண்டா? தாய்நாடு விட்டுக் கூலிகளாக அரசியலார்க்கும் தெரியாமல் கள்ளத் தோணியில் கடல் கடப்பார் கையில் பணமேது?

"தமிழன் வாழ்ந்தாலன்றித் தமிழ் வாழ்வது எங்கே?" என்ற பல்லவியையே திருப்பித் திருப்பிப் பாடவேண்டும். இன்று நாடு உரிமை பெற்றுள்ளது. சென்னை நாட்டின் அரசியல்மொழியாகத் தமிழ் இன்று உயர்ந்துள்ளது; உயர்நிலைப் பள்ளிகளின் கல்விமொழியாகவும் வாழ்கிறது; தமிழ் மேடையின் முழக்கமாகவும் உள்ளது; ஆனால், கல்லூரி மொழியாக வளரவில்லை; அரசியல் துறைகள் பலவற்றிலும் பழக்கத்தில் வரவில்லை; இங்கெல்லாம் வாழும் நாள் விரைவில் வருவதில் ஐயம் இல்லை. ஆனால், பிறமொழிகளைப் பயிலாத நிலை

தமிழனுக்கு உண்டா? இந்திய மொழிகளில் ஒன்ருகிய இந்தியோடு வாழ்வுக்கே போராடவேண்டியுள்ளது என மனம் ஏங்குவார் பலர். இந்தி இல்லையாளுலும் ஆங்கிலம் கல்லாமல் இருப்பதற்கு இல்லை. பிறமொழி பயிலுவது - சிறப்பாக ஆங்கிலம் போன்ற உலக மொழிகளைப் பயிலு வது - அடிமைகளாக அன்றி உரிமை பெற்றவர்களாகப் பயிலுவது - கட்டாயத்தால் அன்றி விரும்பிப் பயிலுவது - தாய்மொழிக்குக் கேடாகாது ஊட்டமாகவும் முடியலாம்.

ஆங்கிலம் வாழ்கிறது என்ருேம். எல்லாக் கலைகளும் அம்மொழியில் திளைத்துச் செருக்கிக் கூத்தாடுகின்றன. அம் மொழி கற்ருர் அதன் வழியே எல்லாம் அறிதல் கூடும். இக் கலைகள் தோன்றிய நாள் முதல் ஆங்கில மொழி அவற்றைப் பேசிவருவதால் இங்கு ஒரு புதுமையும் இல்லை. ஆனுல், தமிழோ? தமிழனைப் பாருங்கள். மிகமிகப் பின்தங்கிவிட் டான்; அவற்றைக் கற்ற தமிழரும் அவற்றை ஆங்கிலத்தி லேயே கற்றனர். அவற்றைத் தமிழில் பேசச் சொல்லின்றித் தடுமாறுகின்றனர். இது, கற்ருேர்கள் நிலையே அன்றி மற் ருேர்கள் நிலை அன்று. பணியாட்கள் தமிழில் அன்றி வேறு எதனில் பேச முடியும்? ஆங்கிலப் பெயர்களை அப்படியே தங்களால் முடிந்த அளவு ஒலித்துத் தமிழிலேயே பேசுகிருர் கள். இதனைப் பார்த்து மகிழப் பலருக்குக் கண் இல்லை; கேட்டுக் களிக்கக் காது இல்லை; இது தமிழ் இல்லை என்கின் றனர் தமிழ் அறிஞர். அவர்கள் விரும்பும் தமிழ் அன்று, என்பது உண்மையாகலாம். இருந்தாலும் தமிழே தமிழே தமிழே ஆம். தமிழனை விட்டுத் தமிழினைக் காணும் முயற்சி வீண் வீண் வீண். இப்படித்தான் தமிழ் வளரும்; தமிழ் வாழும் என உணர்தல் வேண்டும். ஆங்கில நூல்களிலும் கலை நூல்கள் இப்படித்தான் உள்ளன. இதனை அறிந்தால் மட்டுமே இந்த நிலையினைத் திருத்தியும் புதுக்கியும் உதவ முயல்வோரும் உதவ முடியும். கம்பனும் தமிழன்; கூலியும்

தமிழன். கூலியைக் கண்டு குருடராகவேண்டுமா? கம்பன் என்று களித்து நிற்கவேண்டாவா? கூலி என்றேனும் கரைந்து குழைந்து கண்ணீர் சிந்தவேண்டாவா? கம்பன் தமிழ் வாழ வேண்டாவா? ஆனால், எங்கும் கம்பன் தமிழ் வாழ்ந்தால் வாழ்வு என்ன ஆகும்? பத்திரிகை எல்லாம் பாட்டு! அலுவலகம் எல்லாம் அடுக்குமொழி! விஞ்ஞான நிலையமெல்லாம் கற்பனைக் களஞ்சியம்! தொலைபேசி எல்லாம் எதுகை மோனை!—இவ்வாறு இருந்தால், உலகம் நடைபெறுமா? "தமிழனுக்கு ஏற்ற தமிழ்" என்பதே மந்திரம். அவ்வத் துறைக்கு ஏற்ற தமிழே அங்கங்கே வாழவேண்டும்,

ஆனால், கம்பன் தமிழும் வாழாமலா நிற்கிறது? கம்பன் வழி வந்தவன்தானே பாரதி? கம்பனையும் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டாகக் கொண்டார்களா? பழமை புதுமையை வரவேற்குமா? ஆனால், குடியரசு வந்ததும் பாரதியின் புகழும் மிகமிக ஓங்கி வளர்கிறது. பாரதி உயிர்வாழும்போதேயே உலகம் அவன் பாடலைப் பாடத் தொடங்கிவிட்டது. அதில் எழுந்த ஊற்றத்தால் காந்தி அடிகள்வழியில் நம் நாடு சென்று விடுதலையும் பெற்றது. நாட்டுப் பாடல் மட்டுமா பாடினார்? சீர்திருத்தம் மட்டுமா பாடினார்? வேதாந்தம் மட்டுமா பாடினார்? அவர் பாடிய 'கண்ணன் பாட்டு'ப் புதிய திருவாய்மொழி; 'பாஞ்சாலி சபதம்' புதிய இதிகாசம்; 'குயில் பாட்டு'க் குழந்தைகள் முதல் ஞானிகள் வரை பலரும் தத்தமக்கேற்ற வகையில் ஈடுபடும் காப்பியம். பாரதி பரம்பரை வற்றிவிட்டதா? பாரதிதாசன், கவிமணி முதலியோரது நூற்றாண்டில் தமிழ் வளரவில்லை என்றால், பின் என்று வாழ்நதது? வாழும்? அம்மட்டுமா? பாடுவதற்கே பாட்டென்பதனையும் அறிகிறோம். தமிழிசைப் பாடல்கள் முன் இல்லாமல் இல்லை. இடையில் மறந்த காலம் போய் இன்று புதுவாழ்வு பெற்று வருகிறது தமிழர் இசை. நாடோடிப் பாடல்களை நாட்டின் செல்வமாய்க் கொள்ளும் குடியரசு

காலத்தில் அந்த நடையிலும் நூல்கள் வெளிவருவது இயல்பே ஆம்.

''அச்சுப் பொறியே குடியரசின் கல்விப் பொறி.'' ஆதலால், எதனையும் எளிதில் அச்சிடலாம். பகட்டே கண்ணைப் பறிக்கும் காலத்தில் தமிழிலும் சில ஏமாற்றம் எழலாம்; அஞ்ச வேண்டா. பெருவெள்ளம் புதிதாக ஆற்றில் வரும் போது காண்பது என்ன? என்ன குப்பை! என்ன நுரை! என்ன சேறு! என்ன கலக்கம்! என்ன ஆரவாரம்! இவற்றை வெறுப்பார் உண்டோ? ஆனால், கரையைக் காப்பது கடனாம்.

மேடைத் தமிழில் வளர்ச்சியை அறியாதார் யார்? தெருக்கள்தோறும் உங்கள் காதினைத் துளைக்கவில்லையா? கல்வி பரவாத நாட்டில் கேள்வியே மக்கள் அறிவினை வளர்த்தல் கூடும். பேச்சில் ஓர் உயிர் உண்டு; உணர்ச்சி, அளவுக்கு மேல் பொங்குகிறது. இன்று, ஒளியைவிடப் புகையும் சூடும் மிக்கிருக்கலாம். உண்மைக்கு என்று பேசுவது குறையலாம். அடுக்குச் சொற்களின் ஆரவாரம் அன்றி வேறு ஒன்றும் இல்லாமலும் போகலாம். இங்கும் புதுவெள்ளம் புரண்டு வருவதனையே காணல்வேண்டும். முதலில் சொல்லின் இனிமையில் மக்கள் ஈடுபடுவது இயல்பே ஆம். ஆற்றல் வளர்ந்தபின் தெளிவு எழுந்தே தீரும். இதனையும் இன்று நாம் காணமல் இல்லை. தமிழ் முன்னறியாத வளர்ச்சி இங்கு எழுகிறது என்பதில் என்ன ஐயம்? திரு. வி. க.வின் தமிழ்ப் பேச்சும், தமிழ் எழுத்தும் எந்த நாட்டு மொழிக்கும் குறைந்தன அல்ல.

உரைநடை ஓர் இலக்கியம் என்பதனை அறியாதிருந்த காலமும் உண்டு. நாம் பேசுவது எல்லாம் உரைநடையில் அன்றோ? பத்திரிகைகளின் வளர்ச்சியால் பல கருத்துக்களை யும் விளக்கும் ஆற்றலையும் நுட்பத்தினையும் தமிழ் பெறு கின்றது. மொழிபெயர்ப்பு முறையும் இந்த விரைவுக்கும் கட்டாயத்திற்கும் ஏற்ப வளர்கிறது. வானொலி வழியே

இந்த உரைநடை காதுக்கு உவந்ததாகிச் செறிவும் திட்பமும் உடையதாய் வளர்வதோடு பரந்த கருத்துக்களைப் பலரும் அறியச் சுருங்க விளக்கும் திறம் பெறுகிறது. முழுவதும் வெற்றி கண்டோம் என்று கூறுவதற்கு இல்லை; ஆனாலும், வளர்ச்சியைக் காணாமல் இல்லை. உலகத்தினை ஒன்றாக்கி விளக்கும் இந்த உரைநடை குழந்தைகளையும் மகிழ்விக்க இன்று தொடங்கி உள்ளது.

''குழந்தைகள் இலக்கியம்'' ஒரு புத்தம் புது முயற்சி. பாடபுத்தகங்கள் மட்டும் அல்ல இங்கு வருவன. அவற்றில் ஒரு பகுதியே இலக்கியம் எனத் தக்கது. இதுவரை முதியோர் இலக்கியத்தையே அவர்களுக்கு வழங்கிவந்தோம். இப்போது குழந்தைகளுக்கு என்றும், இளைஞர்களுக்கு என்றும் பாடல்களும், கதைகளும், விளக்கங்களும் படங்களோடும் சுவையோடும் அவர்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளிவரக் காண்கிறோம். அவர்கள் மனநிலையையும் மொழிப் பாங்கினையும் ஆராயும் ஆராய்ச்சியின் பயனாகவே இவை வளர்தல் கூடும்.

நாவல்கள் முன்போல மொழிபெயர்ப்புக்களாகவும் தழுவல்களாகவும் அன்றிப் புதிய தமிழ்ப் படைப்புக்களாகவும் வெளிவருகின்றன. சிறந்த மொழிபெயர்ப்புக்களும் பலப் பல திறத்தில் வரக் காண்கிறோம். இவற்றில் எவை வாழும் என்று இப்பொழுது எவ்வாறு கூறுவது? சிறுகதைகளிலும் தமிழன் பின்னணியில் நிற்கவில்லை. சில கதைகள் நிலைத்து என்றும் வாழும் என்பதில் ஐயம் இல்லை. இங்கும் வெள்ளத்தினைக் கண்டு நாம் அஞ்சவேண்டுவது இல்லை.

இன்று நாடகம் பல எழுந்தாலும், என்றும் வாழும் நாடகங்கள் எவை என்று கேட்கலாம்? இந்தப் புதிய துறையில் நுழைந்து அதன் சிக்கல்களை அறிந்து திகைப்பின்றி இயங்குவதே பெரிய வளர்ச்சியாம். இங்கே வழிகாட்டியவர் திரு. சம்பந்த முதலியார் ஆவர். புதிய விஞ்ஞானப் போக்

கினை எல்லாம் பயன்படுத்தி உலகினை மயக்கும் வெள்ளித் திரையிலும் வளருவது நாடகமே ஆம். ஆனால், அங்கே எல்லாம் பாடலாய், உணர்ச்சியின் ஆரவாரமாய், அடுக்குத் தொடர்களாய் வருவது கண்டு அஞ்சவேண்டா. முத்தமிழ் வளர்கிறது; வழிதுறை அறிகிறது. ஓரங்க நாடகங்கள், பள்ளி நிலையங்களில் வளரவில்லையா! கண்ணாலேயே பாராமல் காதால்மட்டும் கேட்டு மகிழும் வானொலி நாடகம் ஒரு புதுமை! கற்பனையிலே அனைத்தினையும் காணும் புதுமைக்கு ஏற்ற நுண்ணிய ஒலிவேறுபாட்டினையும், இனிமையினையும், ஆற்றலினையும் இடத்திற்கேற்பத் தமிழ் பெற்று வளர்கிறதன்றோ?

கலைகளை வளர்க்கும் தமிழும் வளரவில்லையா? 'கலைக் கதி'ரே அந்த வளர்ச்சிக்கு நிலைத்துவிட்ட ஒரு சான்றாகும். வரலாறுகள் - உள்ளத்தியற்கை - இலக்கிய ஆராய்ச்சி - ஒவ்வொன்றாகக் கூறுவானேன்?—எல்லாத் துறையிலும் தமிழ் ஓடி விளையாடுகிறது.

# 9. இந்திய மொழிகளில் தமிழ் மணம்

விடுதலைக்குப்பின இந்தியா பண்பாட் டொருமைப்பாடு பெற்றுவருகிறது. ஒரு மொழியில் உள்ளதனை மற்றைய மொழியில் தரத் துரைத்தனமும் முயல்கிறது. திங்கள் வெளியீடு முதலியனவும இத்தொண்டில் ஈடுபடுகின்றன.

'செக்' மொழியிலும், ரஷ்ய மொழியிலும் தமிழ்ச் செய் யுள்களும் கதைகளும் மொழிபெயர்ப்பு வடிவில் வரும்போது இந்திய மொழியில் வருவதனைக் கூறவேண்டுமா? போப்பின் திருவாசகம், திருக்குறள், நாலடியார் முதலியவற்றின் மொழிபெயர்ப்புப் போன்றவை இங்கிலாந்திலும், ஆங்கிலே யர் ஈடுபாட்டிலும் எழுவதுமட்டும் அருமையாகிவிட்டன.

தமிழிலிருந்து மொழிபெயர்த்து இந்திய மொழிகளில் வெளிவந்த நூல்களில் தலைசிறந்தது திருக்குறள். அது, கன்னடம், மலையாளம், தெலுங்கு, வங்காளம், இந்தி முதலிய மொழிகளில் வெளிவந்துள்ளது. பாரதியின் பாடல்களும் கதைகளும் இவ்வாறு வெளிவருகின்றன. திருப்பனந்தாள் மடத்து முயற்சியின் பயனாகச் சைவ சித்தாந்த நூற்கள் இந்தியில் நடையாடக் காண்கிறோம். விடுதலைக்கு முன்னரே எழுந்த முயற்சி, பின்னே பெரும்பயனாக விளைந்தது ஒன்று உண்டு. அதுவே தெலுங்குச் செய்யுள் வடிவில் வந்த கம்பராமாயண மொழிபெயர்ப்பு. கம்பனை மொழிபெயர்ப் பது அருமை. எனினும், தெலுங்கு அறிந்தவர்களுக்குக் கம்பனை ஒருவகையில் அறிமுகம் செய்வதற்கு இஃது உதவும் என்பதில் ஐயமில்லை.

கம்பராமாயணம், தோன்றிய நாள்முதல், மக்கள் மனத் தினைக் கவர்ந்துவரும் சிறந்த இலக்கியம். வைணவர்கள் கம்பனைத் தம் பேருரைகளில் 'தமிழன்' என்று வள்ளுவ ரோடு ஒருங்கு வைத்துப் பாராட்டுவார். வான்மீகியின் பாடல்

களுக்கும் கம்பனை ஒட்டிப் பொருள் கூறும் இடங்களும் உண்டு. சுக்கிரீவனோடு கிடந்த தாரை, இருந்தது இருந்தபடியாக இலக்குவனைக் காண வரும் பகுதியை விளக்கும் நம் பிள்ளை, தன் மகனைக் காண வரும் தாய்போல் என்ற உவமையைக் கையாளுவது கம்பராமாயணம் கற்ற கைவன்மையே ஆகும். கோவிந்த ராசீயம் என்று வான்மீகிக்கு உள்ள உரையும் இத்தகையது எனலாம். மலையாள நாட்டில் கம்பனைச் சிவனது அவதாரம் என்று போற்றுவர். கம்பராமாயணத்தைப் படிக்க அங்கே கட்டளைகள் உண்டு. கம்பராமாயணத்தை 32 பாவைக் கூத்துக்களாக்கிக் கோவில் திருவிழாவில் காட்டுவது இன்றும் வழக்கமாம். 14-ஆம் நூற்றாண்டைய கன்னடக் கல்வெட்டு, கம்பராமாயணப் பிரசங்கத்தில் கைதேர்ந்தவர்களைக் குறிக்கின்றது. கம்பராமாயணக் கதை, தெலுங்கில் வந்த இராமாயணங்களில் புகாமை வியப்பே ஆகும்.

துளசிதாசர் பாடிய இந்தி இராமாயணம் வடநாட்டில் தலைசிறந்து விளங்கி, மக்கள் மனத்தை நீர்ப்பிண்டமாக்குவது. இதில் உள்ள பாலகாண்டம், கம்பராமாயணப் பகுதிகள் பலவற்றை நினைப்பூட்டும். இப்பகுதியைத் துளசிதாசர் முதலில் எழுதியபின் திருத்திப் பெருக்கினர் என்று கூறுவதுண்டு. துளசிதாசர் இராமேசுவரம் வரை யாத்திரையாக வந்து போனவர். நேரே தமிழ்ப் பாட்டைத் தம் நூலில் புகுத்தினர் என்று சொல்வதற்கு இல்லை; தமிழ்நாட்டிற்கு வந்து போனபோது இங்கு வழங்கிய கம்பராமாயணக் கதையையும் கேட்டிருப்பார் என்று கருத இடம் உண்டு. வில் வளைப்பதற்குமுன் இராமனும் சீதையும் காதல் கொண்ட பகுதி கம்பராமாயணத்தை நினைவுக்குக் கொண்டுவருகிறது. சுயம்வரததிற்குமுன் இருவரும் காதலிக்கும் கதை கம்பனுக்கு முன்னும் உள்ளதே. ஆனல், துளசிதாசர் கூறுவது கம்பர் கூறுவதுபோலவே உள்ளது என்பதே இங்குக் குறிப்

பிடத்தக்கது. குமரகுருபரர் காசியில் கம்பராமாயணப் பிரசங்கத்தை இந்தியில் செய்யும்போது துளசிதாசர் கேட்டிருந்தார் என்று சிலர் கூறுவது உண்டு. ஆனால், துளசிதாசர் தம் நூலை இயற்றிய காலம், குமரகுருபரர் வடநாட்டுக்குச் சென்றதற்கு அரை நூற்றாண்டுக்கு முந்தியேயாம் என்பதனை நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வடமொழியில் உள்ளன எல்லாம் முதல் என்றும், தமிழில் உள்ளன எல்லாம் வடமொழியின் மொழிபெயர்ப்பே என்றும் கூறும் மனப்பான்மை பிற்காலத்தே எழுந்து பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கிறது. கைவல்லிய நவநீதம் என்ற தமிழ்நூலைச் சங்குகவி வடமொழியில் மொழிபெயர்த்துள்ளார்; உள்ளிருக்கும் ஆன்மாவைக் குகேசன் என்று நெஞ்சுக் குகையில் உள்ளதனை விளக்குவார்போலத் தமிழ் ஆசிரியர் கூற, அதனை வல்லீசன் என அவ்விடத்திற்கு ஒரு தொடர்புமின்றி மொழிபெயர்ப்பது ஒன்றுமே எது முதல் நூல் என்பதனை விளக்கிவிடும்.

உபமன்ய பக்த விலாசம் என்பது பெரியபுராணத்தின் மொழிபெயர்ப்பு. இதனுடைய மொழிபெயர்ப்பே பெரிய புராணம் என்று வாய் கூசாது கூறுவாரும் உண்டு. பெரிய புராணம், மொழிபெயர்ப்பு என்ற வரலாறு இதுவரையும் யாரும் கேளாத ஒன்று. இதனைப்பற்றிப் பிற இடங்களில் எழுதியுள்ளமையால் இங்கு விரித்துக் கூறவேண்டுவது இல்லை.

சிவஞானபோதச் சூத்திரங்களும் தமிழிலிருந்தே வடமொழியிற் போயின என்பதனை வடமொழிப் பன்னிரண்டாம் சூத்திரம நன்கு விளக்குகிறது. தமிழில் பன்னிரண்டு சூத்திரமாக விளங்குவது வடமொழியில் பதினொன்றரை ஆகிவிடுகிறது.

இவ்வாறே நாலடியார் முதலியவற்றில் உள்ள பல பாடல்களையும் மொழிபெயர்ப்பென்று வாதாடுவார் பலர்.

இடைச்செருகலாக நுழைந்த சில அத்தகையவை ஆகலாம். பதினெண் கீழ்க்கணக்கில் பலவகையான மகன் முறைவகைகளைக் கூறுவன அத்தகையனவே. நாலடியாரில் உள்ளவை அத்தகையன அல்ல. அவை மகடூஉ முன்னிலை, ஆடூஉ முன்னிலை முதலியவற்றோடு பொருந்தி வரும் அழகு தமிழ் மரபோடொப்பச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் நுட்பம் முதலியவற்றை நோக்கவேண்டும்.

இவையே அன்றி வியாச பாரதத்தில் இருந்து பல பாடல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகக் காட்டுவாரும் உள்ளனர். இங்கே ஒன்று நினைவில் வைத்தல் வேண்டும். மகாபாரதம் ஆயிரக்கணக்கான பாடல்களிலிருந்து இலட்சக்கணக்கான பாடல்களாக வளர்ந்தது தென்னாட்டிலேயே யாகும். ஆகவே, அவ்வாறு வளர்ந்த புது வளர்ச்சி தமிழ்நாட்டு வளர்ச்சியே யாகும். அவ்வாறானால், தமிழ்க் கருத்தும் அங்கே புகுந்திருக்க இடமுண்டு என்பதனை மறத்தலாகாது.

சங்கரர், திங்நாகர், இராமாநுசர், கிருதகோடி முதலானோர் அந்நாளைய தமிழர் என்பதனையும் மறத்தலாகாது. திருமழிசை ஆழ்வாரே திருமிடாச்சாரியார் என்று வடநூற் பேருரையில் குறிக்கப்படுகிறார் என்று காலஞ்சென்ற குப்புசுவாமி சாஸ்திரியார் அவர்கள் கருதினார்கள். ஆகையினால், தமிழ்க் கருத்துக்கள் பல பிராகிருதம், பாலி, வடமொழி முதலியவற்றில் எழுந்த நூல்களில் புகுந்திருத்தல் வேண்டும். இந்தக் கண்கொண்டு இனி ஆராய்ச்சி செய்தல் வேண்டும்.

கண்ணப்பரைச் சிவாநந்த லகரியிலும், திருஞானசம்பந்தரைச் சௌந்தரிய லகிரியிலும் சங்கரர் குறிக்கின்றார். அவர் திருஞானசம்பந்தர் பாட்டில் ஈடுபட்டுப் பாடுவதாகத் தெரிவதால் அக் கருத்துக்கள் அவர் பேருரையில் உள்ளனவா என்று ஆராய்தல்வேண்டும். நம்மாழ்வார் பாடலின்

பகுதிகளை அங்கங்கே மொழிபெயர்த்துத் தம் பிரம்மசூத்திரப் பேருரையில் இராமானுசர் எழுதுகிறார்.

இராமாநுசரின் வைணவம் புதிய ஊழியை இந்தியாவில் துவங்கியது எனலாம். ஆழ்வார்களை ஒட்டி, அன்பு நெறியையும், கடவுளின் அளவற்ற அருள்நெறியையும், தொண்டர்குலமென மக்களை ஆண்டவன் புதல்வராகக் கொண்டு சமூகத் தொண்டு செய்து சாதிச் சழக்கில் விழாத பெருநெறியையும் அவர் வற்புறுத்தினார். அவர்தம் கொள்கையே இராமாநந்தர், கபீர், துக்காராம், இராமதாசர், நாநக், சைதந்யர் என்ற வடநாட்டுப் பெரியோர்கள்வழியே பெரும்புரட்சியை விளைவித்தது. எனவே, தமிழ்ப் பண்பாட்டின் பெருமையையே இங்குக் காண்கிறோம்.

பின்வந்த மணவாள மாமுனிகளும் இந்தப் பாதையில் இந்தியா முழுவதிலும் ஆழ்வார் பாடல்களை அவரவர்கள் தத்தம் மொழியெழுத்தில் எழுதிப் பாராயணம் பண்ணும் முறையைப் பரப்பினார். பதிரிகாசிரமத்திலும், பம்பாயிலும், தெலுங்கு நாட்டிலும் இந்தக் காட்சியை இன்றும் காணலாம். உண்மையில், மணிப்பிரவாளத் தமிழில் உள்ள நூல்கள், முதலில் தெலுங்கிலேயே பதிப்பிக்கப்பெற்றுவந்தன.

ஆழ்வார்கள் பாடல்களும், நாயன்மார்கள் பாடல்களும் ஒருதன்மையனவே. 'பக்தி என்ற கன்னி, தாமிரபர்ணிக் கரையிலும், காவிரிக்கரையிலும் பிறந்து, வடநாட்டில் உலவி, குஜராத்தில் முதுமை அடைந்தாள்' என்று பவிஷ்யத் புராணம் கூறும் கதை, பக்தி இயக்கத்தின் வரலாற்றுண்மையைக் கற்பனைக் கண்கொண்டு காணும் காட்சியே ஆம்.

நம்மாழ்வார் பாடலின் கருத்துக்களை வேதாந்த தேசிகர் வடமொழியில் பாடி அருளினார். ஆண்டாளின் வரலாற்றை விசயநகரப் பேரரசராயிருந்த கிருட்டினதேவராயர் ஆமுக்த மால்யதா என்ற காப்பியமாகப் பாடினார். ஆமுக்தமால்யதா என்பது சூடிக் கொடுத்த நாய்ச்சியார் என்றே பொருள்படும்.

தமிழ்நாட்டுச் சைவப் பெரியார்களின் பெயர்களைச் சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் பாடியுள்ளார். இதனை நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி என்று விரிவாகப் பாடினார். இவர்கள் வரலாற்றைக் காப்பியச் சுவை தோன்றச் சேக்கிழார் பெரியபுராணமாகப் பாடியருளினார். கண்ணைப் பிடுங்குதல் முதலிய வன்றொண்டுகள் 'பாதகமே சோறு பற்றிய'வாற்றை விளக்குவன; பொது மக்கள் பின்பற்றத்தக்கன அல்ல. பொதுமக்கள் பின்பற்றக் கூடிய மென்றொண்டுகளைச் செய்து பல சிவனடியார்கள் வீடுபெற்றுள்ள கதைகளும் அங்கு உண்டு. அத் தொண்டுகள் சமுதாயத் தொண்டாக விளங்கக் காண்கிறோம். தொண்டக் குலமே அங்கு விளங்குகிறது. வேறு குலத்திற்கு அங்கே பொருளில்லை. ஆண்டவனை எங்கும் காணுதலே - சிவலிங்கத்தைச் சீவனுள்ளே இலிங்கமாகக் கண்டு நடமாடும் கோயிலாக வழிபடுவதே - அங்கு அடிப்படையாக விளங்குகிறது.

இவர்களது பொதுமை அறம் வீரசைவப் பெருமக்களது மனத்தைக் கவர்ந்தது. கன்னடத்திலும் தெலுங்கிலும் பல காப்பியங்கள் இந்த அடியார்களைப்பற்றி எழுந்தன. ஹரிஹரர் கன்னடத்தில் 'ரகளை' என்ற இலக்கிய வகையில் இந் நாயன்மார் வரலாறுகளைத் தனித் தனியாகப் பாடியுள்ளார். சதுர்ஷஷ்டி புராதன சரிதை (பண்டையோரது அறுபான் மும்மையோர் வரலாறு) என்ற நூல்கள் பல தோன்றின. ஹரிஹரர் தமிழ்நாட்டில் வந்து போனமை விளங்குகிறது. இங்கு வழங்கிய தமிழ்ச் சொற்களை 'நம்பி ரகளை'யில் பயன்படுத்துகிறார். அப்படியே தெலுங்கிலும் பல காப்பியங்கள் எழுந்தன. திருப்பருப்பதத்தினைப் பாடிய மல்லிகார்ச்சுனர் முதலானோர் அங்குச் சென்ற தமிழர் பேசிய பேச்சினையும் குறிக்கின்றார்கள். இத்தகைய இலக்கியங்கள் வீரசைவர்களின் உயிர்நிலையாக விளங்கின எனலாம்.

சைன மதத்தில் உலகினை வெறுப்பதே முடிவு என்ற கருத்தில், சைன அரசியல் அமைய முடியுமா என்ற ஐயம் எழுவது இயல்பே. அகிம்சையை வற்புறுத்திய காந்தியடிகள் அரசியலை அறவியலாக்கியபின் இந்த ஐயம் எழுவதற்கில்லை. ஆனால், சோழப் பேரரசு புத்துயிர் பெற்று மேலோங்கியபோது சோழக் குடியில் தோன்றிய திருத்தக்கதேவர் சைனக் கொள்கையைத் தவறாது பின்பற்றும் சீவகன் பேரரசனாக வாழ்வதனை விளக்கிச் சீவக சிந்தாமணி என்ற காப்பியத்தைப் பாடித் தந்தருளினர். இந்தக் காப்பியம் முன்னெல்லாம் வடமொழி நூல்களான க்ஷத்திர சூடாமணி, சத்ய சிந்தாமணி, சீவசம்பு முதலியவற்றிலிருந்தவற்றை அடியொற்றி அமைக்கப்பெற்றது என்று பேசிவந்தனர். க்ஷத்திர சூடாமணி பாடிய வாதீபசிம்மர், 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் இராசராசனின் அவைக்களப் புலவராதலின், அவ்: நூல் திருத்தக்கதேவர் காப்பியத்தைப் பின்பற்றியது என்பது இப்போது தெளிவாகிறது.

சைனர், பௌத்தர் முதலானோர் தமிழறிந்து தமிழை வளர்த்தது ஒருபுறமிருக்கத் தண்டி ஆசிரியர் போன்றவர்களும் தமிழ் அறிந்திருந்தனர் என்பது இப்போது புலனாகிறது. தண்டி ஆசிரியர் இராசசிம்மப் பல்லவர் அவைப் புலவர் என்பது விளங்குகிறது. அவர் எழுதிய நூல் ஒன்றில், தமிழில் சத்ருகர் வரலாற்றை எழுதிய சிற்பி ஒருவர் தம் நண்பர் என்று கூறுகிறார். ஆதலின், ஒருவேளை தண்டியும் தமிழ் அறிந்திருக்கலாம்; தம்முடைய அரிய நூலான காவியாதரிசத்தில் செய்யுட்களைத் தொடர்நிலைச் செய்யுள், தொகைநிலைச் செய்யுள் (அகநானூறு) முதலியவை என்றும், தொடர்நிலைச் செய்யுளைச் சொற்றொடர்நிலைச் செய்யுள் (அந்தாதி) என்றும், பொருள் தொடர்நிலைச் செய்யுள் (காப்பியம்) என்றும் பிரித்து வழங்கியது தமிழ்நூல்களில் உள்ள அந்தாதி, எட்டுத்தொகை முதலிய நூற்களை அறிந்ததாலே

4

ஆம் என்று கூறலாம். காவியாதரிசத்தின் உரையாசிரியர்களும் தமிழ்நூல்களைக் குறிப்பிடுகின்றனர். எனவே, அணியியல் தமிழ்ச் செய்யுள் வழக்கை ஒட்டி இயங்குவதனை அங்கே காணலாம்.

இவ்வாறு பொதுவாகக் கூறலாமேயன்றி, இக் கருத்தை விளக்கிக் கூற மேலும் ஆராய்ச்சிகள் பல நிகழவேண்டும். பிறமொழி நூல்களைத் தமிழ்நூல்களோடு ஒட்டி ஆராயும் ஆராய்ச்சியில் தமிழர் புகுதல்வேண்டும்.

# 10. தமிழ்நாட்டில் பௌத்தம்

பௌத்த மதம் உலகப் பொதுமதமாக எழுந்து உலகம் முழுதும் பரவியதாகலின் தமிழ்நாட்டிலும் வேர்கொண்டு பரந்து வளர்ந்தது. அசோகரது கல்வெட்டு, அப் பேரரசர் தம் அறக் கொள்கைகளைச் சோழ பாண்டியர்களது நாட்டிலும் நிலைநாட்டினர் எனக் கூறுகிறது. அசோகருடைய மகனர் மகேந்திரனர் கி.மு 250-இல் இலங்கையில் பௌத்த மதத்தினைப் பரப்பச் சென்றார். இவருடைய பெயர் இலங்கையில் மகிந்தர் என வழங்கும். இவருடன் அறத் தொண்டு புரிந்தவர் இலங்கை அரசரின் உறவினரான அரிட்டர் என்பவராவர். மகேந்திரர் தமிழ்நாட்டு வழியாகவே சென்றிருத்தல் வேண்டும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பௌத்த சின்னங்களைத் தேடிவந்த யுவான்சுவாங் என்ற சீனப் பெருமகனர் தமிழ்நாட்டினைச் சுற்றிவந்தபோது, இந்த மகிந்தர் கட்டியதாக வழங்கிய பௌத்தப் பள்ளி ஒன்று மதுரையில் இருந்ததனைப்பற்றித் தம் நூலில் குறித்துவைத்துள்ளார். இந்த மகிந்தருடன் தொண்டாற்றிய அரிட்டர் பெயர் அரிட்டபாடி என்ற இடப்பெயரில் இன்றும் நின்று நிலவுகிறது. மகிந்தர் காலத்து எழுத்துக்கள் வெட்டிய குகைகள் இந்த அரிட்டபாடி என்ற பாண்டிநாட்டு ஊரருகே உள்ளன. தமிழ்நாட்டில் இன்று கிடைக்கும் இந்தப் பழைய எழுத்துக்கள் இவ்வாறு பௌத்தப் பள்ளிகளோடு தொடர்பு பெற்றுத தமிழ்நாட்டுத் தென்கோடியிலும் காட்சி அளிக்கின்றன. எழுத்தறிவு ஊட்டும் நிலையங்கள் இன்று பள்ளிக்கூடங்கள் எனப் பெயர் பெறுவது பொருத்தமே ஆம். எனவே, பௌத்தப் பேரறம் கிறித்தவ ஊழிக்கு முன்பே தமிழ்நாட்டில் சீரும் சிறப்பும் பெற்று ஓங்கியது எனலாம்.

போதியார் எனச் சம்பந்தர் பௌத்தர்களைக் குறிக்கின்றார். ஆதலால், இளம்போதியார் என்ற சங்கப் புலவர்

பௌத்தப் பாவாணரே ஆவர். சங்கப் பாக்களில் பௌத்தக் கொள்கைகள் பாவடிவம் பெற்று மக்கள் மனத்தினைக் கவர்ந் திருத்தல் வேண்டும். இளம்போதியார் என்ற பெயரே போதியார் என மற்றொரு மூத்த தமிழ்ப் பாவாணர் இருந் ததனை நிலைநாட்டுகிறது. சங்கப் புலவராம் சீத்தலைச் சாத்த னாரும் மணிமேகலை என்ற பௌத்தப் பெருங்காப்பியத்தி னைப் பாடிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் ஒருவரே என்ற கொள்கையும் உண்டு. அப்படியானால், அவரும் பௌத்தரேயாவர். பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்பவும் புத்தர் பெருமைகளைப் பேசவும் எழுந்தது அந்தக் காப்பியம். உயர்ந்தோர் இழிந்தோர் என்று பிறர் கருதுவதுபோலக் கருதாமல் சமுதாயத் தொண்டினைப் பௌத்தப் பெருமக்கள் செய்துவந்ததனை அந்தத் தமிழ்ப் பெருங்காப்பியம் பரக்கப் பேசுகிறது. மணிமேகலை பொதுமகள் குலத்தில் பிறந்தும் பௌத்த பிக்குணியாகிப் பௌத்த மத அறவுரைகளை வழங்கி அறம் வளர்த்து உயர்நிலை அடைந்த கதையன்றோ அக் கதை? மகாயாந பௌத்தம் எழுவதற்கு முன்னர்ப் புத்தருக்குக் கோயில் கட்டி வழிபடாமல் அவருடைய திருவடி நிலைகளை மட்டும் வணங்கிய காலத்தில் எழுந்தது மணி மேகலை. அதில் காணும் மந்திர தந்திரங்கள் மகாயாந பௌததம் தோன்றுவதற்கு வழிகோலுகின்றன எனக் கூறலாம்.

வடநாட்டில் அமைதியின்மையால் பல நூல்கள் தென் னாட்டிற் புகுந்து வளர்ந்தோங்கிய நிலையை மணிமேகலையில் காண்கிறோம். பட்டி மண்டபம் என்பது தமிழ்நாட்டின் அரிய நிலயம். அறிவாராய்ச்சி செய்வார் வெறுப்பு விருப் பின்றி உண்மையை அறிய முயலும் மன்றம் அது. பல மதங்களின் கொள்கைகளையும் மணிமேகலை அறிய முயல் கின்றாள். இதனை ஒரு காப்பியப் பெருவாய்ப்பாகக்கொண்டு சாத்தனார் சர்வமத சங்கிரகமே ஒன்று பாடுகின்றார். சர்வமத

சங்கிரகம் எழுதும் வழக்கம் மணிமேகலையில் முளை விடுகிறது எனலாம். இதிலிருந்து புதுவகைக் காப்பியங்கள் தமிழில் வளர்ந்தன. நீலகேசி, குண்டலகேசி எனக் கேசி என முடியும் பெயருள்ள காப்பியங்களை நோக்குதல் வேண்டும். ஒரு பெண் உண்மையை அறிய முயன்று பலமதக் கொள்கையினரோடும் வாதம் செய்து தான் கொண்ட உண்மையினை நிலைநாட்டுவதனைக் கூறும் காப்பியங்களே இவை எனலாம். தத்துவப் போராட்டம் காப்பியமாக வளரும் காட்சியைத் தமிழ்நாட்டில் இந்த நூல்களிலே காண்கிறோம். மணிமேகலைக் காப்பியமே இவற்றிற்குத் •தாயகமாம், குண்டலகேசி என்பது பௌத்தக் கொள்கையைக் குண்டலகேசி என்ற பெண் நிலைநாட்டிப் பிற மதங்களைத் தகர்த்தெறிந்ததனைப் பாடுகின்றது என அறிகின்றோம். சில பாடல்கள் அன்றி இந்தக் காப்பிய முழுதும் இன்று கிடைக்கவில்லை. இதனைப் பாடியவர் நாதகுத்தர் என நீலகேசி கூறுகின்றது.

மணிமேகலைக் காப்பியம் பௌத்த தருக்கநூல் வளர்ந்த வரலாற்றையும் அறிய வழி செய்கின்றது. அங்குக் கூறப் பெறும் தருக்கமுறை, தருமபாலர் என்பவர் எழுதியதாகச் சீன நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்ற நூலோடு பெரிதும் ஒத்திருக்கக் காண்கிறோம். இந்தத் தருக்கமுறை தமிழ்நாட்டுப் பௌத்தர்களிடையே வளர்ந்தது என்பது இதனால் தெளிவாகிறது. தருக்கத்தினைத் தமிழ்க் காப்பியத்திற் புகுத்திப் பாக்களை அறிவுலகப் பாக்களாகத் திகழச் செய்த பௌத்தர்கள் முயற்சி, மணிமேகலைக் காப்பியத்தில் நன்கு விளங்குகிறது.

பல்லவர் காலத்திலும் பௌத்தர்கள் தமிழ் வளர்த்துத் தமிழ்நாட்டில் பரவி இருந்தாலும் யுவான்சுவாங் பௌத்தர்கள் ஏற்றம் கீழ்நோக்கிச் சென்றிருந்ததனையே கண்டதாகக் குறிக்கின்றார். சோழப் பேரரசு வளர்ந்த நாளிலும்

பௌத்தம் மறையவில்லை. பதினோராம் நூற்றாண்டில் அரசாண்ட வீரராசன் அவைக்களத்தில் வீரசோழியம் என்ற இலக்கண நூல் அரங்கேறியது. இதனை இயற்றியவர் தஞ்சைப் பொன்பற்றி என்ற ஊரில் பிறந்த புத்தமித்திரன் என்ற பௌத்தரே ஆவர். இதற்கு உரை எழுதிய பெருந்தேவனாரும் இவர் காலத்தவர் என்றே தெரிகிறது. இவர் பௌத்த மதப் பாடல்கள் பலவற்றைத் தம் உரையில் காட்டியிருப்பதாலேயே அந்தப் பழம்பாடல்கள் இன்றளவும் வாழ்ந்துவருகின்றன. இலக்கணத்தை வளர்த்த பெருமையும் பௌத்தர்களுக்கு உண்டு. இந்த இலக்கண நூல் வடமொழி இலக்கண வழக்காற்றினைத் தமிழுக்கும் பொருத்திக் காட்டும் புதிய முயற்சியில் புகுகின்றது. பிரயோக விவேகம் என்ற பின்னுளைய இலக்கண நூல் வீரசோழியம் வளர்த்த பிள்ளையே எனலாம். திராவிட மொழிகளையும் வடமொழியின் பிராகிருத வடிவங்களே என்று கூறுவோர். இந்த இலக்கணப் பரம்பரையைச் சேர்ந்தவர்களே ஆவர்.

பௌத்தத தமிழ்ப் புலவர்கள் பாடிய பாடல்களும் நூல்களும் எத்தனையோ இருத்தலவேண்டும். வீரசோழிய உரையில கணடவை போகப் பிறநூல் உரைகளும் சில பௌத்த நூல்களின் இருப்பினை வெளியிடுகின்றன. நீலகேசியுரை, சிவஞான சித்தியாரின் ஞானப்பிரகாசர் உரை, தக்க யாகப் பரணியுரை என்பன இந்த வகையில் வழிகாட்டுகின்றன. ''வன்பசிக் கடும்புலிக்கு உடம்பு அளித்து உடம்பின்மேல் வாள் எறிந்த வாயினூடு பால் சுரந்து'' என்ற பாடற் பகுதி பின்னைய நூலால் வெளியாகிறது. இது புத்தரைப் பாடிய பாடலாதலின் இதனைப் பாடியவர் பௌத்தரே எனலாம். இவரைக் கவியரசர் என அந்த உரை அழைக்கின்றது. சித்தாந்தத் தொகை, திருப்பதிகம் என்ற பௌத்த நூல்களை முன்னைய இரண்டு நூல்களும் பௌத்தக் கொள்கையை விளக்க எடுத்துக்காட்டுகின்றன. விம்பசார கதை என்ற

பௌத்தக் காப்பியம் ஒன்றிருந்ததும் இவற்றின் வழியே நாம் அறிந்து இன்புறுகின்றோம். அதனை ஓதும் பேறு நமக்குக் கிடைக்கவில்லையே என்று வருந்துகின்றோம். விம்பசாரன் பௌத்தரைப் பாராட்டிய மகத அரசன்; அவனுடைய மகன் அஜாதசத்ரு தன் தந்தையைச் சிறைப்படுததினான்; புத்தருடைய உறவினன் ஒருவன் புத்தரைக் கொல்ல அஜாத சத்ரு வழியே சூழ்ச்சி செய்து தோற்றான்; விம்பசாரன் சிறையில் இறந்தபின் அஜாதசத்ரு தனக்குப் பிறந்த மக னிடத்தில் தன்னையும் அறியாமல் பொங்கும் இயற்கை அன்பினைக் கண்டு, தன் தந்தையும் தன்னிடத்தில் இத்தகைய அன்பன்றோ கொண்டிருந்திருத்தல்வேண்டும் எனக் கழி விரக்கம் கொண்டானும். இத்தகைய பலபல காப்பியச் சுவை ததும்பும் பகுதிகள் இந்தக் காப்பியத்தில் பழந்தமிழர் மனத்தினை உருக்கி இருத்தல்வேண்டும்.

இலங்கைப் பௌத்தர்களுக்கும் தமிழ்நாட்டுப் பௌத்தர் களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ்நாட்டில் இருந்து சென்ற தமிழ்ப் பௌத்தர்கள் பல பௌத்த நூல் களை எழுதிய பெருமையை இலங்கையில் கிடைக்கும் கந்த வம்சம் முதலிய நூல்கள் வழியே அறிகின்றோம். இலங்கை யில் பௌத்த மதத்தினை வளர்த்தவர்கள் சிங்களவரே என் றும், அதனை அழித்தவர்கள் தமிழர்களே என்றும் இன்று பலர் நம்பிவரும் கொள்கைகளை இந்த நூல்களே மறுத்துரை யாடுகின்றன. இலங்கையில் அநுராதபுரத்தில் அபயகிரி விகாரைக்கும் மகாவிகாரைக்கும் கி. பி. நான்காம் நூற் றாண்டில் நடந்த போராட்டம் நம்மை இரத்தக் கண்ணீர்விட் டழச்செய்கின்றது. ஈனயான பௌத்தக் கொள்கையும் வைதுல்ய பௌததக் கொள்கையும் இட்ட போராட்டம் அது. ஒருவர் ஒருவரை வருத்தி நாடு கடததி அரண்மனை சூழ்ச்சி செய்து ஒரு பௌத்தப் பள்ளி மற்றொரு பௌத்தப் பள்ளியை இடித்து மண்ணொடு மண்ணுக்கும் கொடிய காட்சி

யைக் காண்கிறோம். அதிகார மோகத்தின் திருவிளையாடல் இது. பௌத்த மதம் தமிழ்நாட்டில் மறைந்ததன் காரணமும் ஒருசிறிது வெளியாகிறது. வைதுல்ய மதத்தின் தலைவராகச் சங்கமித்திரர் சோழநாட்டிலிருந்து சென்றனர் என அறிகிறோம். ஒருசிலர், இவரே மாணிக்கவாசகர் என மருள்கின்றனர். காதலைத் துறவாது வாழக்கூடிய கடவுட் காமத்தினைத் தமிழர் கண்ட அகப்பொருள் நெறி வற்புறுத்துகிறது; இது பௌதத தந்திரங்களில் இடம் பெற்றுள்ளமை அறிவோம். பௌததத் துறவிகள் காதலைத் துறவாது நிற்கலாம் ,என்ற கொள்கை வைதுல்யரின் கொள்கை என இலங்கை நூல்கள் வழியே அறிகிறோம். பிற மதத்தினரோடன்றித் தம்முள் தாமே பௌத்தர்கள் வாதாடினர். பலபல பிரிவுகள் தோன்றின எனப் பௌத்த நூல்கள் விளக்குகின்றன. பின்வந்த தமிழ்நூல்களில் இந்தச் சிறு பிரிவுகளைக் காணோம். சௌதராந்திகர், வைபாஷிகர், யோகாசாரர், மாத்தியமிகர் என்ற நான்கு பிரிவுகளைப்பற்றி மட்டுமே பேசக் கேட்கிறோம். நான்காம் நூற்றாண்டில் புத்த நந்தியோடும், சாரி புத்தரோடும் வாதிட்டு வென்ற ஞான சம்பந்தர், ''அறுவகைத் தேரர்'' எனப் பாடுவதால் அவர் காலத்திலும் பலபல பிரிவுகள் இருந்தமை புலனாகிறது. இவர் செய்த வாதத்தினைக் கன்னபரம்பரையாகக் கேட்டறிந்த சேக்கிழார் பெரியபுராணத்தில் தேரர் கொள்கைகளும் அவற்றின் மறுப்புமாகப் பாடிவைத்துள்ளார்.

மணிமேகலை, காஞ்சியில் வாழ்ந்த அறவண அடிகளை அடுத்து வழிபட்டதனை மணிமேகலை என்னும் காப்பியம் பாடுகிறது. காஞ்சி மாநகரம் ஒரு சிறந்த தமிழ்ப் பல்கலைக் கழகம்; பௌத்தப் பள்ளிகள் பல வளர்ந்த இடம். காஞ்சியில் பிறந்து நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவரான திங்நாகரும் தமிழரே. அவர் மாணவராய் அந்தப் பல்கலைக் கழகத்தில் தலைவராக விளங்கிய தருமபாலரும் தமிழரே.

இவர் காஞ்சியில் மந்திரியாயிருந்த தமிழ்ப் பெரியார் ஒருவரின் செல்வப் புதல்வர். இவர் கையாண்ட தருக்கமுறை தமிழ்நாட்டில் வளர்ந்ததொன்று என முன்னரே குறிப்பிட்டோம். இதனால் இவரே மணிமேகலையில் வரும் தருமபாலர் என முடிவு செய்வோரும் உளர். மணிமேகலையின் காலம் இரண்டாம் நூற்றாண்டானால், ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், அவர் ஆதற்கு இல்லை; எனினும் காஞ்சி மாநகர் பௌத்தப் பேரறிஞர்களது அறிவுக்களஞ்சியமாக உலகம் முழுதும் பேர்பெற்றிருந்தது என்பதில் ஐயம் இல்லை. நாளந்தாப் பல்கலைக் கழகம் ஒருபுறமிருக்க, உலகம் போற்றும் சென்பௌத்தம் காஞ்சிநகர் கண்டதே ஆம். உலகத்தில் இன்று நிலவும் பௌத்த மதப் பெரும்பிரிவு சென்பௌத்தம் அல்லது தியான பௌத்தம் என்பதேயாம். சீனாவிலும், அதனைவிட ஐப்பானிலும் இது பேரும் புகழும் பெற்று விளங்குகிறது. இதனை அங்குச் சென்று கி. பி. ஆறும் நூற்றாண்டில் நிலைநாட்டியவர் காஞ்சியரசரின் பிள்ளைகளில் ஒருவரான போதிதரும ராவர். இந்த மதத்தினைச் சீனாவில் மேலும் வளர்த்தவர் நரசிங்க வனம பல்லவன் காலத்தவரான மற்றொரு தமிழர்; இவர் பெயர் வச்சரபோதி. இவரும் காஞ்சியில் பௌத்தர்களுக்குத் தலைவராக விளங்கினர்.

இவர்களுக்கு முனபே ஐந்தாம் நூற்றாணடிலும் புத்த தத்தத் தேரர் காஞ்சியில் பௌத்த மதத் தலைவராக வீற்றிருந்துள்ளார். இவர் காவிரிப்பூம்பட்டினத்தைத் தமது காலத்தில் வாழ்ந்த அச்சுதக் களபரனோடு சேர்த்துப் புனைந்து அபிதம்மாவதாரம் என்ற நூலில் பாடிப் புகழ்கின்றார். முதல் நூற்றாண்டிலும் காஞ்சி பேர்பெற்று விளங்கியது. "அந்த கட்டஹ காதை" அந்தக மொழியில் அந்தக நாட்டில் பரசமுத்ர வாசிகளால் காஞ்சியில் கொண்டாடப் பட்டதாகப் பாலி நூல்கள் வழியே அறிகின்றோம். பதினோராம் நூற்றாண்டில் தீபாங்கர தேவரும் பன்னிரண்டாம்

நூற்றாண்டில் அநிருத்தரும் காஞ்சி மாநகரில் பௌத்தர்கள் தலைவர்களாகப் பல நூல்கள் இயற்றியமை பௌத்த நூல்கள் வழியே தெரியவருகிறது.

காஞ்சியில் மட்டும் அன்றிப் பொதிகை, உறையூர், வஞ்சி, புத்ததத்த தேரரது பூதமங்கலம், சாக்கிய நாயனாரது சங்கமங்கை போதிமங்கை, மதுரை முதலியனவும் பௌத்தப் பெருநிலையங்களாக விளங்கின. நாகப்பட்டின வரலாறு பௌத்த மத வரலாற்றின் எதிர்ஒலி எனலாம். 1867 வரை அங்குப் புத்த விகாரை விளங்கியதாம். இங்கு நரசிங்கப் போத்தரையர் காலத்தில் சீன அரசன் கட்டிய சீனக் கோயிலை மார்கொபோலோ குறித்துவைத்துள்ளார். இந்தச் சீனக் கோயில் உலகம் அறிந்த ஒன்று. 1477-இல் இதனைப் பர்மா அரசர் தமது கல்வெட்டில் குறிக்கின்றார்; 1725-இல் வாழ்ந்த வாலன்டைன் என்ற பெரியாரும் குறிக்கின்றார். திருமங்கை மன்னர் காலத்தில் இங்குப் புத்தரது பொற்சிலை ஒன்று இருந்ததெனை அறிகிறோம். இராசராச சோழரும், அவர் மகனார் இராஜேந்திர சோழரும் அவர்கள் காலத்தில் சுமத்திரா தீவில் அரசாண்ட ஸ்ரீவிஜய அரசர்களில் ஒருவருக்கு, நாகப்பட்டினத்தில் பௌத்தப் பள்ளி கட்ட உரிமை தந்தமையை லேடன் பட்டயத்தின் வழியே அறிகின்றோம். விகாரையை இடித்துக் கிறித்தவக் கோயில் கட்டியபோது பல புத்தச் சிலைகள் அங்குக் கிடைத்தனவாம். தமிழரது வாணியத்தின் காவற் கடவுளாக மணிமேகலை விளங்குவதற்கேற்ப நாகப்பட்டினம் தமிழ்ப் புத்தப்பெருவணிக நிலையமாகவும் பிறநாட்டுத் தொடர்பின் கலங்கரை விளக்கமாகவும் விளங்குகிறது.

பௌத்த மதம் தமிழ்நாட்டில் மறைந்தபோதிலும் அக்கொள்கை தமிழொடு தமிழாய்ப் போய்விட்டது. புத்தர் திருமாலின் அவதாரமாகிவிடுகின்றார். சாத்தனார், ஐயனார், தர்மராசர், போதிராசர் என்று தமிழ்நாடு வழிபடுவது

உண்மையில் பழைய புத்தரையே எனலாம். அரசமர வழிபாடும், சிங்கப்பெருமாள் கோயில் போன்ற இடங்களில் காணப்பெறும் திருவடிநிலை வழிபாடும் போதி மரத்தினையும் புத்தரது பாதபங்கயத்தினையும் நினைவூட்டாமல் இல்லை. திருவரங்கக் கோலத்தினைப் புத்தர் பெருமானது நிர்வாணக் கோலம் எனக் கூறுவோரும் உண்டு. தமிழ்நாட்டில் தோன்றிய அத்துவிதக் கொள்கையில் பௌத்த மதத்தின் மாற்றுருவத்தினை (பிரச்சன்ன பௌத்தம்) இராமானுஜர் முதலானோர் காண்கின்றனர் என்பதனையும் மறத்தலாகாது. தமிழ்நாட்டுப் பலபல வழிபாட்டு முறைகளுக்கும் பௌத்த தந்திரங்கள் கூறும் முறைகளுக்கும் உள்ள ஒற்றுமையையும் மறைக்க முடியாது. பள்ளிகள், மடங்கள், கோயில்கள்— இவை பௌத்தர்கள் வளர்த்த சமுதாய நிலையங்கள்; அறச்சாலைகள்; கல்லூரிகள். இவற்றை ஒட்டியே இந்த நாட்டுக் கோயில்கள் நாட்டின் உயிர்நிலையாக வளர்ந்து ஓங்கியுள்ளன.

# 11. சங்க காலத்தில் சைவம்-1

சங்க நூல்களே இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் மிகமிகப் பழையவை. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமே சங்ககால இலக்கியங்களில் நமக்குக் கிட்டியவை. தொல் காப்பியமோ, அவற்றிற்கும் முற்பட்ட இலக்கண நூல். இவற்றில் சைவத்தினைப்பற்றி என்ன குறிப்புக்களைக் காண லாம் என்று பார்ப்போம்.

'தாய்மை வழிபாடு, சூலங்கொண்ட பசுபதியாகிய ஆண் டவன் தவக்கோலங் கொண்டு யோகநிலையில் இருந்ததன் வழிபாடு, ஆவின் வழிபாடு—இவை எல்லாம் 4000, 5000 ஆண்டுகளுக்கு முந்திய சிந்துநதிக்கரை நாகரிகத்தின் அடிப் படையாக விளங்கக் காண்கிறோம். வேதங்களில் ருத்ரசிவன் வழிபாடு, இலிங்க வழிபாடு, ஆதிரை நாளின் பழமை முதலி யன குறிக்கப்பெறுகின்றன. சிவம் என்ற பெயரே சிவப்பு, செம்மை என்ற தமிழ்ச் சொற்களோடு தொடர்புடையது என்பர், க்ரையர்சன் என்ற அறிஞர். கி. மு. மூன்றும் நூற் றுண்டிலிருந்து கி. பி. மூன்றும் நூற்றுண்டுவரையில் சங்க காலத்தை ஏற்றியும் இறக்கியும் ஆராய்ச்சியாளர் அளந்து வருகின்றனர். இந்தக் காலத்தில் சிவ வழிபாடு வடநாட்டி லும் பரவி இருந்தது என்பதனை அங்கு வழங்கிய காசுகளில் பொறிக்கப்பெற்ற வடிவங்களும் நிலைநாட்டுகின்றன.

தமிழ்நூலகளிற் பழையதாகிய தொல்காப்பியத்தில் சிவன் என்ற பெயர் இல்லை. சிவன் என்பது சிவப்பு, செம்மை என்ற சொற்களோடு தொடர்புடையதாகுல் சேயோன் என்ற சொல சிவத்தைக் குறிக்கும் எனலாம். முருகனும் செம்மைநிற முடையவனே. சேயோன் என்பதற் குத் திருமகன் என்று பொருள் கொண்டால், எவனுடைய திருமகன் என்ற கேள்வி எழும். அப்போதும் சிவன் என்ற

கருத்து வெளிப்படலாம். கந்தழி என்று தொல்காப்பியர் கூறுவது இலிங்கத்தினையே என்று விளக்குவாரும் உண்டு. ஆனால், இலிங்க வழிபாடு தமிழ்நாட்டிற் பழைய வழிபாடா என ஆராயவேண்டும்.

சங்க இலக்கியங்களிலும் சிவன் என்ற பெயர் காணக் கிடைக்கவில்லை. அருகர் முதலியோரும் தத்தம் வீட்டு நிலையைச் சிவகதி என்று வழங்கியமையால் பொதுச்சொலலாகப் போய்விட்டது போலும்! சிந்துநதிக்கரை நாகரிகம் பசுபதியாக நிற்கும் யோக வடிவினை வழிபட்டதே பின்னாளில் தக்ஷிணாமூர்த்தி வடிவமாக வளர்ந்தோங்கியது. சங்க நூல்கள் ஆலமர் செல்வன், ஆலமர் கடவுள், ஆல்கெழு கடவுள், தாழ்சடைப் பொலிந்த அருந்தவததோன் என்றெல்லாம் இந்த வடிவத்தினைப் புகழ்கின்றன. ஆவின் வழிபாடு சிவனோடு இணைந்துவிட்டபோது அவனது தூய வெள்ளேற்றுக் கொடியாகவும், அவனேறும் ஊர்தியாகவும் அது சிறந்தது. அதனால் ஆனேற்றுக் கொடியோன், ஏற்றூர்தியோன், புங்கவம் ஊர்வோன் எனச் சங்கப் புலவர் போற்றிவந்தனர். தாய் வழிபாடும் சிவனோடிணைந்துவிடவே அம்மையப்பனாகச் சிவபெருமான் விளங்கக் காணகிறோம். உமையம்மை ஒருபாகத் திருப்பாள். நீலமேனி வாலிழை பாகத்தொருவன் அவன்.

அழிவுக்கடவுளாக விளங்கிய ருத்ரன் சர்வசம்ஹாரமூர்த்தியாக அருளால் மக்களை உய்வித்து ஓய்வு தந்து இன்பம் பெருக்கி நம்மை வாழ்விக்கும் கடவுளாக இனித்துவரக் காண்கிறோம். "கொலைவன்" என்ற பெயரும் சங்ககாலத்தில் அவனுக்கு உண்டு. முக்கட் செல்வன், மூவெயில் எரித்தவன், கொடுகொட்டி பாண்டரங்கம் காபாலம் என்று சம்ஹார தாண்டவங்கள் ஆடுபவன் எனச் சங்க இலக்கியம் கூறும். மூவிலை வேலும், மழுவும், எரிதிகழ் கணிச்சியும் அவன் கையில் விளங்குவன. அவன் புலித்தோல் அணிந்

தவன் என்பர். காட்டில் வளர் கொன்றையை அணிந்தவன் அவன். தலைமாலையாம் கண்ணியும் கொன்றை; இன்ப மாலையாக மார்பில் அணிவதும் கொன்றை; அடையாள மாலையாக அணிவதும் கொனறை.

சிவபெருமானின் கோலம் மாலைக் காலத்து வானை நினைப்பூட்டுவது என்பர் ஒருசிலர். செவ்வான்போன்ற மேனி, செவ்வானின் தலையில படர்ந்த செக்கச் சிவந்த மேகம் போன்ற சடை அங்கே தோன்றுகிற பிறைபோன்ற திங்கட் கண்ணி—இவ்வாறு தோன்றுகிருன் சிவன். எல்லாம் மடிந் தொடுங்கப்போகும் இராககாலததின் முன்னே சூரியன், சிவந்து காகா என ஆடுவதனைச் சிவனுடலே என்கிருன் கம்பன். இனி, இமயமலையின் பனிககட்டிகள்மேல் கதிரவ னது ஒளிபாயச் செக்கச் சிவந்த நிலையே சிவனர் திருமேனி; நிழல் படிந்து கருத்திருக்கும் புறமே அம்மை; மேலே பட ரும் மேகங்கள் காலையில் சிவந்து தோன்றுவதே விரித்த செஞ்சடை; கங்கை, பலபல கோலங்கள்—இவ்வாறு எல் லாம சேரச் சிவபெருமான் திருக்கோலத்தைச் சிலர் இமய மலையில் காண்பதும் உண்டு.

சங்ககாலப் பாக்களில் வரும் குறிப்புக்கள் கொண்டு, அந்திவானததின் ஆழ்ந்ததொரு கருத்தாகவும் காட்சியாக வும் சங்கப் புலவர்கள் சிவபெருமானைக் கண்டார்கள் எனலாம். "செவ்வானன்ன மேனி அவ்வான் இலங்கு பிறையன்ன இலங்குவால்வை எயிற்று எரியகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை முதிராத் திங்களொடு சுடரும் சென்னி" என்று வரும் அடிகள் இந்தக் கருத்தினை வற் புறுத்துவதுபோலத் தோனறுகிறது "நீர்சடைக் கரந் தான்" என்று கங்கையைத் தலையிலேற்றும் பெருமை யைக் குறிக்கும்பொழுது இமயமலைக் காட்சி தோன்றலாம். ஆதிரையான் என்ற பெயரைக் கூறிேைம். ஆதிரை என்ற நட்சத்திரம் வேதகாலத்தில் சிறந்தது. ஆதிரை சிறந்திருந்த

குறிப்பைக்கொண்டு பாலகங்காதர திலகர் வேதகாலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முந்தியது என்பர்.

சூரிய வீதி ஆதிரை முதல் தொடங்கிய காலம் அஃது என்பர். மேடசூரிய வீதி இன்று உத்திரட்டாதியை முதலாகக் கொண்டுள்ளது. 1500 ஆண்டுகளுக்கு முன்னர் அசுவினியை முதலாகக் கொண்டு வராக மிஹிரர் முதலானோர் அமைத்தபோது மேடம் முதலாக எண்ணினர். அதற்கு முன்னர்க் கார்த்திகை முதலாக எண்ணினார்களாம். பூமியின் போக்கில் ஏற்படும் மாறுதலால் இந்த மாற்றம் எழும். இஃது ஒரு நியதிக்கு உட்பட்டிருத்தலாம். இந்த மாற்றம் எழும் காலத்தைக் கணித்துப் பாலகங்காதர திலகர் வரையறை செய்துள்ளார். சங்ககாலப் புலவர்கள் ஆதிரையைச் சிவனோடு ஒன்றுசேர்த்து ஆதிரையான் என்றொரு பெயரை அழகாக அவனுக்குச் சாத்தினர்.

ஆதிரை முதல்வனும் அவனே. ஆதிரையில் ஆடல் கண்டோ மன்றோ? சிவபெருமானைத் தவக்கோலததிற் காண்பதோடு அந்தணனாகவும் கண்டன வேத முதலியன. சங்க நூல்களும் பைங்கட் பார்ப்பான், அந்தணன், மறையோன், மார்பில் நுண்ஞாண் கொண்டு விளங்குபவன் என்றெல்லாம் புகழத் தொடங்கின.

உருத்திரனைக் காட்டில் திரிவோனாகக் கண்டது வேதம். சங்க நூல்களில் சிவபெருமான் காட்டில் வளரும் கொன்றையே சூடி விளங்குவதனைக் கூறினோம். காட்டில் ஆடும் ஆடலையும் காடமர்ந்தாடிய ஆடலன் எனச் சிவனோடு ஒன்று சேர்த்துப் புகழ்வதனையும் அங்குக் காண்கின்றோம்.

புராணக் கதைகளும் சங்க நூல்களில் காணபெருமல் இல்லை. திரிபுர தகனம் அவர்கள் மனத்திற்கு அடிக்கடி தோன்றுகிறது. மூவெயில் முருக்கிய செல்வன் என வணங்குகின்றனர் சங்கப் புலவர். இராவணன் கைலை மலையை எடுக்க முயன்று அழிந்த கதையும் அவர்கள்

அறிந்ததொன்றே. "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன் உமையமர்ந்து உயர்மலை இருந்தனனாக ஐயிரு தலையின் அரக்கர் கோமான் தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப் புகுத் தம்மலை எடுக்கல் செல்லா துழப்பவன்" என வருவது காண்க. இப்படியே திரிபுர தகன வரலாறு, "தொடங்கற் கண் தோன்றிய முதியவன் முதலாக, அடங்காதார் மிடல் சாய அமரர்வந் திரத்தலின் மடங்கல்போற் சினைஇ மாயஞ் செய் அவுணரைக் கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும் உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலிற் சீறரும் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில் ஏறுபெற் றுதிர்வன" எனப் பாடப்பெற்றுள்ளது.

உபநிடதங்கள் 'உமா சகாயம்' என்று ஆண்டவன் பெருமையைக் கூறுவதோடு, 'நீலகண்டம்' என்ற கருத்தினையும் வற்புறுத்துகிறது. இதனையும் சங்கப் புலவர் மறப்பதில்லை. 'மணிமிடற் றண்ணல்' என்று வாயாரப் புகழ்கின்றனர்.

பதினெண் கீழ்க்கணக்குகளும் அவனைப் புகழ்கின்றன. திருமூர்த்திகளில் ஒருவனாகவும், அவர்களில் சிறந்தானாகவும் புலவர் அவனைப் புகழ்கின்றனர். பதினோர் உருத்திரர்களும் சிவனிடத்து எழுந்தவர் என்பதும் அவர்கள் கூறுவது. "ஆதிரை முதலவனிற் கிளர்ந்த நாதர் பன்னொருவர்" என்பது பரிபாடல்

இவ்வளவும் கூறியமையால் சிந்துநதிக்கரையில் வளர்ந்த சைவம் குமரிககரை வரை பரவியதொன்றே ஆகையால், சங்க நூல்களிலும் அந்தச் சிறப்போடேயே தோன்றுவதனைக் காணலாம். மக்களது அடிப்படைக் கொள்கையாக அவர்கள் பண்பாட்டில் ஊறிவிட்டமையால் மெல்ல மெல்ல அப்போதப்போது வேத முதலானவற்றிலும் புகுந்து வளர்ந்தது இந்தச் சைவம். சங்க நூல்களில் எவ்வளவு தூரம் இன்று அந்தப் பழங்கருத்துக்கள் தோன்றுகின்றன என்பது

இப்போது தெளிவாக விளங்குகிறது. பாட்டைப் பாட வந்தனரே அன்றிச் சைவம் பேசவரவில்லை இப் புலவர்கள். ஆதலின், இவர்கள் பாடலில் இப்படிக் குறிப்புக்கள் தொடக்கத்தில் வழங்கவில்லை என்று கொள்வதற்கில்லை என்று நாம் உணர்தல்வேண்டும்.

# 12. சங்க காலத்தில் சைவம்-2

சங்ககாலப் புலவர்கள் தத்துவ சாத்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் அல்லர்; வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களும் அல்லர்; சிவபெருமானின் பெயரையெல்லாம் திரட்டிக் கூறும் நிகண்டு ஆசிரியர்களும் அல்லர். ஆதலின், முன்னைய பேச்சில் சிவபெருமானுக்கு அவர்கள் வழங்கிய பெயர்களைத் திரட்டிக் கூறியது இவ்வாறு தவறான கருத்தையும் எழுப்பி இருக்கலாம். சொற்கள் உயிரற்ற பாவைகள். அவை பேச்சில் வரும்போது உணர்ச்சியும், ஆற்றலும் பெற்று உயிரோடு இயங்குகின்றன. அந்த உயிர்ப்பினை அறியவேண்டும். அதிலும் பாட்டில் வரும்போது மந்திர சக்தி பெற்று நம்மையே மாற்றிக் கடவுளுணர்ச்சியில் ஆழ்த்திவிடுகின்றன.

மனிதன் தன்னாற்றலுக்கு அடங்கியவற்றை அறிகிறான்; அடக்கி யாள்கிறான். வானத்தின் தொடுகரை போல அவனுக்கு எட்டாதவை வான்மீன்கள்போல எண்ணுக்கு அடங்காதவை; அளவிட முடியாதவை. வானம் போல எல்லாம் ஒன்றாய்க் கவிந்துநிற்பவை. மலைபோலக் கடல்போல மிகமிகப் பெரியவை. பெருந்துன்பம் சாவு முதலியபோலத் திடீர் என வந்து அவன் உள்ளத்தினைக் குழப்புபவை. இவற்றெதிரே அவன் அஞ்சி பணிந்து நிற்கின்றான். மலையிலும், அந்தி வானிலும், காட்டின் பேரிருளின் பெருங்காற்றின் கடுமுழக்க ஆடலிலும், ஈமப் பெருங்காட்டில் நிழலாட்டமாம் பேயாட்டத்திலும் தனக்கும் எட்டாத பேராற்றல் படைத்து அனைத்துமாய்த் திரண்ட பொருளின் உணர்ச்சி பெற்று வியந்து வியந்து அஞ்சி அஞ்சி மெல்ல நடக்கிறான். மூவா அமரரும் முனிவரும் பிறரும் யாவரும் அறியாத தொன்முறை மரபின் அந்தணன் அவன் என்ப

தாக எல்லாவற்றையும் கடந்த கடவுள் என்ற கருத்துத் தோன்றுகிறது. கடவுள் என்ற சொல்லும் பிறக்கிறது. உலகிற் சிக்காது கடந்து உயர்ந்து தவவாழ்வு வாழ்வாரும் இக் கடவுளைத் தேடும் கடவுளர் என அவன் உள்ளத்தே தோன்றுகின்றன. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்வதே வழி என உணர்கின்றான். அப்போது அச்சம் சிறிது சிறிதாக நீங்குகிறது; பெரிய மலையிலும் அந்தி வானத்திலும் அழகு தோன்றுகிறது; அன்பு ஒளிர்கிறது; அழகு பாய்கிறது; கட்டுப்பட்ட அவன் உள்ளம் மலர்ந்து விரிந்து, அவ்வன்பில் ஆழ்ந்து ஒன்றாகின்றபோது பேரின்பம் பிறக்கிறது. பேரின்பத்தினைப் பாடலாகப் பாடுகிறான் பாவலன். இது அல்ல இது அல்ல என்று மட்டுமே இதற்கு முன் அப் பேராற்றலை விளக்க முடிந்தது. மாற்றம் மனம் கடந்து நின்ற மறையோன் இப்போது இன்பமாய் அன்பாய்ப் பாவலன் உள்ளத்தே புகுந்து இன்பக்கூத்தாடுகின்றான். அவனுடைய பாடலில் அதன் எதிர்ஒலியும் எதிர் ஒளியும் எழுகின்றன. காண முடியாததனைக் காட்டுகின்றான்; கேட்க முடியாததனைக் கேட்கச் செய்கின்றான்; தொட முடியாததனைக் கட்டியணைக்கச்செய்கின்றான்; முகக்க முடியாததனை முகர்விக்கின்றான்; சுவைக்க முடியாததனைச் சுவைத்துணர்ந்து இன்புறச் செய்கிறான்.

எல்லாச் சுவையும், எல்லா மணமும், எல்லாக் காட்சியும், எல்லாக் கேள்வியும், எல்லா உணர்ச்சியும், எல்லா இன்பமுகமாக இனிக்கின்ற நிலையில் நம்மையும் நிறுத்திவிடுகின்றான். இதுவே சங்ககாலப் புலவர்கள் செய்வது. அப்போது பூத்து நின்ற மரங்கள் எல்லாம் கடவுளராகக் காண்கின்றனர், பெண்களும். அந்தி வானத்திலும் இமயமலையிலும் சங்கப் புலவர் சிவக் காட்சி கண்டதனை முன்னரே கூறினோம். அப் புலவர்பெருமக்கள் பாலையை நினைக்கும் பொழுது, திரிபுர தகனத்தில் முப்புரங்களும் எல்லாம்

நெருப்பாய்ப் பொடிப்பொடியாய் அழிந்ததே நினைவிற்கு வருகிறது. சிவபெருமான் சினக்கின்றான். ஆம்; அவனது சினந்த முகம் போன்றதுதான் வேனிற்காலத்தில் பாறை எல்லாம் கொதிக்கக் காய்கின்ற கதிரவன். பாறை எல்லாம் உடைகின்றன: முப்புரம் முரிந்து உதிர்ந்ததுபோல, மாயம் செய் அவுணர் கோட்டை எல்லாம் ஆகாயக்கோட்டையாய் மறைகின்றன. இத்தகைய பாலைவனம் கடந்து பொருள் தேடப்போகும் காதலனைப் பார்த்து இவ்வாறு தோழி வாயிலாகப் பேசும் காதலி என்ன கருதுகிறாள்? மிகமிகச் சூழ்ச்சி செய்து மாயமோ எனும் வகையில் பொருளீட்டிப் பயன் என்ன? கேட்டீர் அல்லீரோ, மூவெயில் திரட்டிய பொருள் பொடிப்பொடியாய் எரிந்தொழிந்ததை! பொருளன்று பொருள். அன்பே பொருள்; எங்களைப் பிரியா அன்பே பொருள்! அன்பன்றோ, அருளன்றோ அந்த முப்புரம் எரித்தது? பிரமன் முதலானோராய் வருந்தியவர்கள் ஆண்டவனிடம் முறையிட்டனர். அந்த அழுகையைத் தாங்க முடியாமல் அவன் மூவெயிலையும் எரித்தான். பொருளினும் ஆற்றல் மிக்கது அருள். ஆண்டவன் வடிவம் அது. அன்பே சிவமென்பதன்றோ தமிழ்? ஆதலின், அந்த அன்புநெறியே - எம்மோடு இன்பமாய் இருப்பதே - அழியாப் பொருள் ஆகும் என்று முழங்குகிறது காதலியின் உள்ளம்.

பேராற்றற் பெருமானை நாம் வழிபடுவது இவ்வாறு அவன் அருளாகக் குழைவதாலேயே; நம் கூக்குரலைக் கேட்பதாலேயே. அவன் குற்றமே குணமாகக் கொள்கின்றான்; பாவங்களை எரிக்கின்றான்; இடர்களையே அமுதமென வாரி விழுங்கிக் களிக்கின்றான். சாவென அஞ்சுகிறோம்; நாம் வாழத் தான்சாவ முந்துவோன்போலச் சாவினை விழுங்குகிறான். ஈதோர் உயர்ந்த கருத்து. அதியமான் சாவாப் பெருநிலை தரும் நெல்லிக்கனி பெறுகின்றான்; தான் உண்டு போரைப் பெருக்குவதினும் அவ்வை அதனை உண்டு கலை

யினைப் பெருக்கி உலகினை வாழ்விப்பது மேல் என நினைக்கின்றான்; தான் சாவத் துணிந்து, சாவினைத் தன் அகத் தடக்கி, அவள் வாழ நெல்லிக்கனி தருகின்றான். இதனை அறியாது, தந்த கனியைச் சுவைத்த அவ்வை, பின் உண்மை அறிந்து வருந்துகிறாள்.

அவளுக்குச் சிவபெருமான் நினைவு வருகிறது. அவனும் இத்தகையவனே. கடல் கடைந்த தம் முயற்சியில் ஆலகால நஞ்சு கண்டு, தேவர்கள் நடுங்கி அழுது ஆண்டவனை அடைய, அவர்களைக் காக்க அந்த நஞ்சின் பயனைத் தான் நுகர அதனை வாரி விழுங்குகிறான். அவர்கள் வாழ, இவன், சாவினை எதிர் ஏற்கிறான். சாவாப் பெரியோன் சாவ முந்துவதே அருளின் வடிவம். தான் அழியவருவழியும் அருளுவ தன்றோ பேரருள்? தூயவன் களங்கமெல்லாம் விழுங்குகிறான். பாதகமே சோறு பற்றியவாறு இதுதான். இதுவே நீலகண்டம் என்பதன் கருத்து. சாவைத் தின்னும் சாவாத பெருமான் அதியமானைச் சாவாது காக்க, அவன், அவர் போல நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகிறாள் அவ்வை.

இந்த அருளே தாய்மை. ஆதலின், ஆண்டவன் அருளைப் பெண்ணாக்கி ஆற்றலாம் அறிவு ஆண்பாகமாகவும், அருள் எனும் இன்பம் பெண்பாகமாகவும் அமைத்த அர்த்த நாரீச்சுர வடிவமாகச் சிவனைக் காண்பதும் பழைய மரபு. உமையலால் உலகம் இல்லை. தாயும் தந்தையும் சேர்ந் தன்றோ உலகம் பிறக்கும்? தாயும் தந்தையுமாய் ஈரணி பெற்ற எழிற்றகையன் அவன். கடவுளை ஆண் என்று கருதியவர் பலர். அம்மையப்பனும் ஒருருவில் ஈருருவும் கண்டவர் நம்மவர். இனி இரண்டாய்ப் பலவாய்ப் படிப்படியாய் அந்நாளைய பரிணாமக் கொள்கைப்படியும், விவர்த்தம் என்ற இந்நாளைய கொள்கைப்படியும் "நீலமேனி வாலிழை பாகத் தொருவன் இருதாள் நிழற்கீழ் மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" எனப் பாடுகின்றார் பெருந்தேவனார்.

விரிவது ஒடுங்கும். பெண்ணுரு ஒருதிறனுகின்று. அவ்வுருத் தன்னுள்ளடக்கிக் கரக்கினும் கரக்கும் என்பதும் சங்கப் பாடலே.

ஒடுங்கிய நிலை சம்ஹாரக நிலை; எல்லாம் அழிந்த நிலை; எல்லாம் சுடுகாடாகிய நிலை. ஆடுகின்றான் அங்கே ஆண்டவன். அழிவு என்பதும் அருளே. மக்களுக்கு ஓய்வின்பம் தரும் செயலே இது. கொடிய காட்சியினை எல்லாம் அருட் காட்சியாகக் காட்டுவதிலே தமிழ்ப் புலவர்பெருமக்கள் சிறந்தவர்கள். கொடுகொட்டி என்பது அழிவுப் பெருங்கூத்து. பிரமன் தலையை அரிகிறான், அவன் இறுமாப்பினை அழிக்க. அது கொண்டு பிச்சை எடுக்கின்றான்; அன்புப் பிச்சை. தாருகாவனத்துப் பெண்கள் தூய உள்ளம் கொண்டு அவனைக் கடவுளாகக் கண்டு அவன்பின் செல்கின்றனர். அவர்களுடைய கணவன்மார் இந்நாளைய விஞ்ஞானிகளின் சிறந்த அழிக்கும் கருவிகளைப் படைக்க வல்லவர்கள். அவனைக் கடவுளாகக் காணும் கண் இன்றித் தம் மனைவியர் அவனுடலினைக் கண்டு மயங்கினர் எனக் கருதி அவன்மேல் தம் அழிவுக் கருவிகளை வீசி எறிகின்றனர். அவன் அவற்றை எல்லாம் அணியாகக் கொண்டு ஆடுகிறான். அவன் ஆட இவர்களும் ஆடி உண்மையை உணர்கின்றனர். காபாலக் கொடுங்கூத்தில் காத லருளை விளக்கும் ஆநந்த நடனத்தைக் காட்டிய பெருமை தமிழரது. இதன் வித்தினைச் சங்கப் பலகைகளில் காண்கிறோம்.

பின்னுளைய சிற்பங்களில் சிவபெருமானது அட்டவீரட்டமும் கூத்துக்களாகவே அமைவதனைக் காண்கின்றோம். இதற்கும் அடிப்படையாக விளங்குவது சங்கப் பாக்களே. திரிபுர தகனம் செய்ததும் சிவபெருமான் சாம்பலில் ஆடச் சாம்பல் எல்லாம் அவன் வடிவில் படிந்துவிடும்படி பெருங் களிப்போடு ஆடுகின்றான். ஈதே பாண்டரங்கக் கூத்து. கொடுமை கொடுமை என நாம் அஞ்சிக் கண் மூடுஞ் செயல்

கள் இவை. ஆனால், எல்லாம் அருளால் எழுந்தவை. நம் தாய் ஆட்டுவிக்கின்றாள் அவனை. அவள் தாளம் போட அவன் ஆடுகின்றான். அவள் முகத்திலும் கொடுமை இல்லை. அவள்மேல் பொங்கும் காதலாம் அருளே வெள்ளமிடுகிறது. கொடுமையில் அருளமுதைக் காட்டும் திறன் என்னே! பாண்டரங்கம் ஆடுகின்றான் அவன். அவனை அணைய விரும்பும் தோளுடையாள் அவனை எதிர்நின்று ஆட்டுகின்றாள்...என்று கூறிக்கொடுங்கூத்தில் காதற் குறிப்பும் அருளாழமும் காட்டுகின்றார் நல்லந்துவனார்.

"பாணியும் தூக்கும் சீரும் என்றிவை மாணிழை அரிவை காப்ப ஆணமில் பொருள்எமக் கமர்ந்தனை ஆடி" என்பது காண்க. அவன் வடிவம் கூத்து மட்டுமா? அவனே ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்தான். அவனே இசையாழ் கெழுமணி மிடற் றந்தணன். ஆதலின், முத்தமிழாகக் காட்சியளிக்கின்றான், முத்தமிழ் வல்ல மூதறிஞர்க்கு!

# 13. பல்லவர் சிற்பம்

பல்லவர்கள் தமிழ்நாட்டை ஆண்டவர்கள். சேர சோழ பாண்டியர் என்ற மூவரசர்களில் இவர் ஒருவர் அல்லர். மூவரசர்களைப்பற்றியே பழைய இலக்கியங்களும் பின்வந்த இலக்கியங்களும் பேசுவதால், இவரைப்பற்றிய வரலாறு ஏதோ தொண்டைமானைப்பற்றி வழங்கும் இரண்டொரு கதைகள் தவிர, வேறு வகையில் தெரியாமலே போயிற்று. சங்க காலத்திற்குப்பின் இவர்களே தமிழ்நாட்டினை உலகம் புகழச் செய்தவர்கள். மூவரசரை ஒட்டிய களப்பிரரை ஒட்டியவர்கள் இவர்களே. வடநாட்டில் பெரும்புகழ் பெற்று ஹர்ஷ சக்கரவர்த்தியைத் தோற்கடித்த புலிகேசியைத் தோற்கடித்த பெருமை பல்லவர்களில் சிறந்த நரசிங்கவர்மனைச் சாரும். இவனே மாமல்லன். இவன் கண்ட துறை முகப்பட்டினமே மாமல்லபுரம். இதுவே இப்போது மாவலிபுரம் என வழங்குகின்றது. மாவலிபுரத்துச் சிற்பங்கள் பல்லவர் பெருமையை, உலகில் எங்கிருந்து வருபவர்களுக்கும் தன் ஈடும் எடுப்பும் இல்லாப் பெருமையையும் பல்லவர் வரலாற்றையும் கூறிக்கொண்டே ஒளிர்கின்றன; 'கல்லும் சொல்லாதோ கதை' என்று நம்மை வியக்கச் செய்கின்றன. சிற்பங்களே பல்லவர் வரலாற்றைக் கூறுகின்றன. இந்தச் சிற்பங்களில் கல்வெட்டுக்கள் உண்டு. அவற்றின் வழியே-தான் தமிழ்நாட்டு வரலாறு நமக்கு வெளியாகின்றது.

தமிழ்ச்சிற்பமே சிற்ப நூல்களில் திராவிடச் சிற்பம் என வழங்கப்பெறுகிறது. இன்று தமிழ்ச் சிற்பத்தின் மிக மிகப் பழைய நிலைமை பல்லவச் சிற்பங்களாகவே காட்சியளிக்கின்றன. அவற்றிற்குமுன் தமிழ்நாட்டில் சிற்பங்கள் இல்லையா? இருந்தன. ஞானசம்பந்தர், தம் காலத்திலிருந்த கோபுரங்கள், சுதை வேலையில் செய்த மதில்கள், மாடங்கள் முதலிய

வற்றைப்பற்றிப் பாடுகிறார். திருநாவுக்கரசர் மணிக்கோயில், மாடக்கோயில், கற்கோயில் என்று பலவகையான கோயில்களைக் குறிக்கின்றார். ஆனால், அப் பழங்கோயில்கள் மண்ணாலும் மரத்தாலும் ஆனவை: ஆதலின், அவை அழிந்தொழிந்தன. மண்ணாலாகிய தளி, மண்டளி. பரவையுள் மண்டளி என்பது சுந்தரர் பாடிய கோயிலன்றோ? பின்னே வந்தவையே கற்றளிகள். கற்றளிகளையே எங்கும் காண்கிறோம். மணிமேகலை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் இந்தச் சுடுமண் ஓங்கிய நெடுநிலை மாடங்களை வெண் சுதை தீட்டிப் பலபல பாவைகளோடும் ஓவியங்களோடும் மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள் ஒரு திறஞ் சாரா அரைநாள் அமையத்து நுண்ணிதிற் கயிறிட்டுத் தேஎம் கொண்டு தெய்வ நோக்கிப் பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனையாக வகுத்தமையையும் பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம் அமைத்ததனையும் கூறக் கேட்கிறோம். அகத்தியர் செய்ததாக வழங்கும் சகளாதிகாரம் என்ற சிற்ப நூல் மண்ணிலும் மரத்திலும் சிற்பம் அமைக்கும் முறையைக் கூறுகின்றது.

ஆனால், இன்றுள்ள கோயில்கள் எல்லாம் கற்கோயில்களே. இந்தப் புரட்சியைச் செய்தவன் மாமல்லனுடைய தந்தையாகிய மகேந்திரவர்மன். ஏழாம் நூற்றாண்டு தொடங்கியதும் இந்தப் புரட்சி தொடங்கியது எனலாம். இந்தப் புரட்சி செய்ததன் காரணமாக, இவன், தன்னை விசித்திர சித்தன் எனப் புகழ்ந்துகொள்கிறான்; செங்கல், மரம், சுதை, உலோகம் என்பவையே இன்றி, மும்மூர்த்திகளுக்குக் கோயில் கட்டியதாகத் தன் பெருமையைத் தானே தன் கல்வெட்டில் நம் காதெல்லாம் குளிரக் கருத்தெல்லாம் குளிர எடுத்துப் பேசுகின்றான்; அவனுக்கு முன்னே இருந்த கோயில்கள், களப்பிரக் குழப்பத்தில் கண்காவலின்றி அழிந்து கிடப்பதனைக் கண்டான்போலும்! கற்கோயிலும்

சிதைந்து கிடப்பதனை நாம் இன்று காணவில்லையா? கண்ட மனம் நொந்தது அவனுக்கு. நமக்குத்தான் அந்த நோவு இல்லையே! அவனுடைய விசித்திரசித்தம் கல்லில் கோயில் அமைக்க முந்தியது. புத்தர்களும் சைனர்களும் குகைகளைக் கண்டெடுத்து, அவற்றைச் சீர்ப்படுத்தி, அங்குள்ள பாறைகளை வழவழ எனச் செதுக்கிவிட்டுப் படுக்கைகள்போல் அமைத்து, மழை உள்ளே வழியாதபடி மேற்பாறையில் கீறிவிட்டு உள்ளே சென்று படுத்துறங்கி வாழ்ந்துவந்தனர்; வழிபடும் வடிவங்களையும் கல்லிற் செதுக்கிவந்தார்கள்; இவ்வாறு உதவியவர் பெயரைக் கல்வெட்டில் எழுதியும் வந்தார்கள். இந்தக் குகைகளையே முன்மண்டபத்தோடு கோயிலாக ஏன் அமைத்தலாகாது என்று மகேந்திரவர்மன் மனத்தில் தோன்றியது. உள் குகையில் மூன்று வாயில்கள் உள்ள கருப்பக்கிருகம்—அதற்கு முன்னுகக் குகைவாயிலைத் தூக்குவதாக வரிசையில் அமைந்த நான்கு தூண்கள்—இப்படி அமைந்ததே அவன் கண்ட புதுவகைச் சிற்பமான குகைக் கோயில். நான்கு தூண்கள் முன்னே தோன்ற, நடுவே இரண்டு தூண்கள் ஒவ்வொன்றும் முப்பகுதியாக இருக்கும்; மேற்பகுதியும் கீழ்ப்பகுதியும் நாற்சதுரமாக விளங்கும்; இடைப்பகுதி எட்டுப் பட்டையாக விளங்கும். தூண், மேலே போதிகையாக விளங்குவது: தூண்களின் வரிசை வாட்டத்தில் வலமும் இடமுமாகத் தோரணவாயில் மேல்நோக்கிச் சென்று தோன்றும். மழை வெளியே வழிந்து ஓட, மேற்பாறையின் முகப்பு முன்வளைந்த எழுதகமாகக் குழைக்கப் பெற்றது. இவற்றினிடையே வளைந்து விளங்கும் கூடுகள் தோன்றும். அக் கூடுகளாம் பள்ளங்களில் மனித முகம் செதுக்கப்பட்டிருக்கும். கருப்பக்கிருகத்தின் இருபுறமும் வாயில்காப்பாரான துவாரபாலகர் நிற்பர். திருச்சிராப்பள்ளி, மகேந்திரவாடி, சீயமங்கலம், பல்லாவரம், வல்லம் முதலிய இடங்களில் இவன் எழுப்பிய கோயில்களைக் காண

லாம். இக் கோயில்களில் பல நிறங்களிற் பூசிய அழகிய ஓவியங்களும் சிற்றன்னவாசலில் காணக் கிடக்கின்றன. அங்கே, தூணில் உள்ள ஓவியம் மனைவியரோடு கூடிய இவனுடைய ஓவியம் என்று கருதுகின்றார்கள். இவனுடைய வடிவம் மாவலிபுரத்துப் பூவராகக் கோயிலில் செதுக்கப்பெற்றிருக்கக் காணலாம். இவன், அப்பர்சுவாமிகளின் மாணவனாக வந்து சைவனானமையைத் திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டில் கூறுகிறான்.

இந்தச் சீர்திருத்தத்தின் பயனாகச் சைவம் கோயில்களால் வாழும் பெரும்பேறு பெற்றது. சைவம் இவனது கலையோடு கலையாக நிலைபெற்றது. இவன் ஓவியக் கலைஞன்; தக்ஷிண சித்திரம் என்ற நூலை எழுதியவன்; குடுமியான்மலைக் கல்வெட்டில் கண்ட புதிய இசைமுறையை வகுத்த இசைக் கலைஞன். எனவே, இவன் கண்ட கோயில்களும் இக் கலைகளின் நிலையமாக ஓங்கின.

இவனுடைய மகனே நரசிங்கவர்மன். நரசிங்கவர்மனின் படைத்தலைவரே சிறுத்தொண்ட நாயனார். படைத்தலைவராய் இருந்தபோது பரஞ்சோதி என்பது இவருக்குப் பெயர். தமிழ்நாட்டின்மீது படைஎடுத்து அல்லல் விளைத்த புலிகேசியை, அவன் நகரமாம் வாதாபியிலேயே சென்று வென்று, வெற்றிக்கொடியை நாட்டி, அந்த நகரத்தினைத் தவிடுபொடியாக்கிய இப் பெருவீரனும் அரசனது பெயர் வாதாபி நகரிலேயே கல்லில் பொறிக்கப்பெற்றுள்ளது. ஈழநாட்டு அரசனான மானவர்மன், தன் நாட்டினை இழந்து இவனிடம் சரணடைந்து, இந்த வாதாபிப் போரிலும் இவனுக்காகப் போரிட்டான். பின்னர், மானவர்மனுக்குத் துணையாக இரண்டுமுறை தன் படைகளைக் கப்பலில் மாமல்லபுரத்துத் துறைமுகத்திலிருந்து ஏற்றி அனுப்பி, அவனை ஈழத்தின் அரசனாக்கினான், நரசிம்மன். இவன், சிற்பமுறையில் மேலொருபடி சென்றான். குகைக்கோயில்கள் குகையாகத்

தானே தோன்றுகின்றன? இவன், அவை கோயிலாகவே முழுதும் தோன்றவேண்டும் எனக் கருதினன். ஒருகல் கோயில்கள், மாமல்லபுரத்தில் இருப்பனவற்றைப் பஞ்ச பாண்டவர் தேர் என்பர் பொதுமக்கள். அந்த நாளில் வழங்கிய மண்தளிகள் அமைந்தவகையில் எல்லாம், கற்றளிகளை அமைக்க முடியும் எனக் காட்டுவதுபோலத் தேர்க்கோயில்கள் அங்கே நம்மை நோக்கி நிற்கின்றன. ஒரே கல்லில் குடையப்பெற்ற கோயிலே தேர்க்கோயில். அங்கே உள்ள மண்டபங்களில் நரசிங்கவர்மன் பெயரை நினைப்பூட்டும் தூண்கள், குந்தியிருக்கும் சிங்கங்கள்மேல் தோன்றுகின்றன. எட்டுப் பட்டை தீற்றிய தூண்கள் இவை. தலைப்பகுதி திரண்டிருக்கும். தலையின்மேல் கற்பலகை விளங்கும். கண்ணன் பால் கறக்கும் காட்சி, மகிஷாசுரமர்த்தனம் முதலியவை கண்கொள்ளாக் காட்சிகள். கல்லும் கவிபாடி நடனம் செய்யக் காண்கிறோம். இசைக்கலையொடு நாடகக்கலையும் கோயிற்கலையில் புகுந்தமையை இங்குக் காண்கிறோம்.

இவனுக்குப்பின், புலிகேசி பரம்பரையின் தொந்தரவு மிகுதியாயிற்று. ஐயடிகள் காடவர்கோன் துறவு பூண்டு சிவனடியாராய்ச் சிவன் கோயில்களைச் சுற்றிப் பார்த்துப் பாடல் பாடினர். பின்னே வந்த இராசசிம்மன், பகைவர்கள் புரத்தினைத் திரிபுரதகனம் செய்த சிவபெருமான்போல் அழித்தான் எனப் புகழப்பெறுகின்றான். ஒற்றைக்கல்லைக் குடைந்து கோயில் வடிவில் அமைத்தால் போதுமா? ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு கோயில் இருக்கவேண்டும் என்பதன்றோ நாவுக்கரசர் கொள்கை? சிறுசிறு கற்பாறைகளைக் கொண்டுவந்து அடுக்கிக் கோயில் கட்ட இவன் முன்வந்தான்.

இராசசிம்மன் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலை முதலிலே இந்தவகையில் கட்டினன். முகமண்டபம், அர்த்த மண்டபம், சுற்றுப்புறம்—இவை எல்லாம் கொண்டு இக் கோயில் விளங்குகின்றது. இலிங்கத்தின் உள்ளே சோமாஸ்

கந்த வடிவம், சுவரில் பலவகைச் சிற்பமாக விளங்குகிறது. கைலாயநாதர் கோயில் இந்த வகையில் தலைசிறந்தது. அதன் விமான அமைப்புச் சுற்றுலைக் கோயில்கள், பலவகைச் சித்திரங்கள் இவற்றால் இன்றும் எல்லார் கருத்தையும் கவருவது. பின்வந்த நந்திவர்மன் அமைத்த மண்டபம் முதலியவை இந்த முறையையே பின்பற்றின. இவையே எட்டாம் நூற்றாண்டைய சிற்பமுறையாக விளங்கின.

இதனினும் மாறிய அமைப்புக்கள் ஏறக்குறைய பிற்காலக் கோயில்கள்போல அமைந்தவை அபராஜித பல்லவன் காலத்தவை ஆகும். ஒன்பதாம் நூற்றாண்டின் சிற்பமுறை இதுவே எனலாம். திருத்தணிகை வீரட்டானேச்சுரர் கோயில் இந்த முறையில் அமைந்தது. ஆனால், விமானம் கஜபிருஷ்ட விமானம் என்ற தூங்கானை மாடமாகும். இந்தச் சிற்பமுறையைப் பிறித்தறிவதற்கு ஓர் எளிய வழி உண்டு. இங்கு இருக்கும் துவாரபாலகர்க்கு, முன் இருந்த இரண்டு கைகள்போல் இல்லாமல், நான்கு கைகள் இருக்கக் காணபோம். சோழ அரசினைப் புதுப்பித்துப் புத்துயிரளித்த விஜயாலயன் தன் விஜயாலயசோளீச்சுரத்தினை இந்த முறையிலேயே அமைத்துள்ளான். ஆதலின், சோழச் சிற்பமுறை இவ்வாறு பல்லவர் சிற்பத்தின் தொடர்ச்சியே ஆகும். பல்லவர் சிற்பமே தமிழ்ச் சிற்பமான திராவிடச் சிற்பத்தின் அடிப்படை. அதுவே கோயில்களை வளர்த்துச் சமுதாயத்தின் உயிர்நிலையாய் ஓங்கி வளர்ந்ததனைச் சோழர் காலத்தில் காண்கிறோம். இதற்கு வழிவகுத்தது பல்லவச் சிற்பம். கற்றளிப் பிச்சன் என்ற அதிகாரி ஏற்பட்டதொன்றே இச் சிற்பத்தின் பெருமையைக் காட்டுகிறது.

# 14. சோழர் காலத்துச் சமுதாயப் பணிகள்

கோயில்கள் மிகமிகப் பெரியனவாய் ஊரினர் அனைவரும் வந்து தங்கக்கூடிய வகையில் பல பல மண்டபங்களோடு தோன்றின; பல கலைகளுக்கும் இருப்பிடமாயின. மக்கள் தம் கலை வாழும் இடமாக இந்தக் கடவுள் நிலையங்கள் தோன்றியமை அருமைப்பாடேயாம். இராசராசன் தஞ்சாவூரில் திருநாவுக்கரையர் பாடிய தஞ்சைக் குல மாமணிக்கு அருகே பெரியதொரு கோயில் கட்டினான். பெரிய இலிங்கம்! பெரிய நந்தி! பெரிய விமானம்! அவன் அன்புள்ளம் போல எல்லாம் பெரியன! விமானம் 216 அடி உயரம். அதன் சிகரத்திலுள்ள கற்குமிழ் ஒரே கல்: 80 டன் எடை உள்ளது. கோயில் 750 அடி நீளம், 250 அடி அகலம். பெரிய கோட்டைபோலக் கோயிலைக் கட்டினான் இராசராசன்; தேவாரம் பாடுவோர், இசைக்கருவி வாசிப்போர், நடனம் ஆடுவோர்—எல்லாரையும் அங்கே குடியேற்றினான். சுந்தரர் பாடியது போன்ற தக்ஷிணாமூர்த்தி வடிவம், சுந்தரர் பாடிய ஆடவல்லான் என்ற பெயர்கொண்ட நடராசர் வடிவம் என்று இப்படிப் பல வடிவங்களை உலோகங்களில் அமைத்தான் இவன்; தான் வென்ற ஈழநாட்டு ஊர்களின் வருவாயையும் இக்கோயிலுக்கு நன்கொடையாகக் கொடுத்தான்.

இவனுடைய மகன், இதனினும் அழகிற் சிறந்த கங்கைகொண்ட சோழபுரத்தைப் பெருங்கோயிலாகக் கட்டினான். நடனமாதர் வடிவம், சண்டேசர் அருள் பெறுங் காட்சி—இவை மிக அழகாக அங்கே அமைந்துள்ளன. இரண்டாம் இராசராசன் கட்டிய இராசராசேச்சுரமே இன்று தாராசுரம் என்று வழங்குகிறது. இதுவும் ஒரு கற்சிற்பப் பெருவிளக்கம். மூன்றாம் குலோத்துங்கன் கட்டிய திரிபுவனமும் இத்தகையதே. சோழநாட்டில் காவிரிக்கரையோரம் எல்லாம்

கோயில்கள் ஓங்கின. பாண்டிநாட்டிலும் அப்படியே. அரசர்கள் இறந்த இடத்தில் பள்ளிப்படைக் கோயில்களும் எழுந்தன. ஆதித்த சோழன் விழுந்த இடத்தில் ஆதித்தேச்சுரம் எழுந்தது.

கோயில்கள் சமுதாய நிலையங்களாக விளங்கின என்றோம். எகிப்து நாட்டுப் பிரமிடுக் கோபுரங்கள், சவத்தினை அடக்கஞ் செய்ய எழும்பியவை. தாஜ்மஹால், மிக அழகிய தொரு கட்டடம்; சலவைக் கல்லால் எழுந்த காவியம். ஆனால், அதுவும் அத்தகையதே. மேல்நாட்டுக் கோயில்கள் கடவுள் வழிபாட்டிற்கு மட்டும் அமைந்தவை. ஆனால், சோழர் காலத்துப் பெரிய கோயில்கள் கடவுளை வழிபடும் நிலையங்களாக மட்டுமன்றிப் பொதுமக்கள் நிலையங்களாகவும் விளங்கின. அவை, நடமாடும் கோயில்கள் வாழ எழுந்த படமாடுங் கோயில்கள். ஏழை எளியவர் என்ற வேற்றுமை இன்றி, அனைவரும் அங்கே விலையுயர்ந்த நகைகளையும், உடைகளையும், கலவைச் சாந்துகளையும், மலர்மாலைகளையும், அம்மையப்பர்மேல் கண்டு களிக்கலாம்; நிவேதனஞ் செய்யப்பெற்ற சிறந்த உணவுகளை உண்டு களிக்கலாம்; இசைக் கலை, நடனக்கலை, சிற்பக்கலை, தமிழ்க்கலை, வேதக்கலை முதலியவற்றில் ஈடுபட்டுப் பண்பாடு பெறலாம். இதில் தனியுடைமை இல்லை; பொதுஉடைமையே வளர்ந்தது. ஆனால், பொதுஉடைமை பொது அனுபவமாக வளர்ந்ததே அங்குள்ள பெருமை!

அங்கே ஓவியக்கலை வளர்ந்தது முன்பு தெரியாமற் போயிற்று. தஞ்சைப் பெரிய கோயிலின் கருப்பக்கிருகத்தினைச் சுற்றிய சுவரின் புறத்தே எழுதியுள்ள ஓவியங்களைக் காண்கிறோம். ஆனால், இவை மகாராட்டிரர் காலத்தவை. இவற்றிற்கும் கீழ்ப்படையாகச் சோழர் ஓவியம் விளங்கியதனைக் காலஞ்சென்ற கோவிந்தசாமியார் கண்டு உலகிற்கு அறிவித்தார். சுந்தரரிடம் இராசராசனுக்குப் பெரிய ஈடு

பாடு போலும்! அவரை, ஆண்டவன் தடுத்தாண்ட வரலாறு, அக் கீழ்ப்படையில் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கக் காண்கிறோம். கடவுட் காட்சிகளில் மட்டுமன்றி, உலகியற் காட்சிகளிலும் ஓவியரது மனம் ஈடுபட்டதனையும் காண்கிறோம். ஏழைமக்களின் காதற்குடிசை வாழ்வும், அங்கு ஒரு புதுமைக் கலையாகத் தோன்றக் காண்கிறோம். சோழர்கால ஓவியம் இவ்வாறு அங்குக் கிடைப்பது நமது நல்ல காலமேயாம். பல்லவர் காலத்தில் தோன்றிய ஓவியம் இவ்வாறு வளர்ந்தது.

நாடகக் கலையும் அங்கு வளர்ந்தது. தஞ்சைப் பெரிய கோயிலில் ஆண்டுதோறும் இராசராச நாடகம் நடைபெற்று வந்தது என்பதைக் கல்வெட்டுக்களிலிருந்தும் அறிகிறோம். இராசராசன் புகழ் இவ்வாறு நாடகமாகவும் பரவியது. சோழர்கள் தங்கள் அரண்மனைகளை இவ்வளவு நிலையானவையாகக் கட்டிக்கொள்ளவில்லை. 'பொன்மாளிகை' என்றும், ஆயிரத்தளிகள்' என்றும் அவர்கள் அரண்மனைகள் பேர், பெற்றாலும், அவை செங்கல்லாற் கட்டப்பெற்றவைகளே. ஆதலின், அவை எல்லாம் அழிந்தொழிந்தன. சமுதாய நிலையமான கோயில்கள் கடவுள் பெயரால் நிலவவேண்டுமென்று அந்த அரசர்கள் கல்லினால் கட்டினார்கள். 'குடிகளே நாட்டின் உயிர்நிலை' என்று கம்பர் பாடியது இந்தச் சோழர் கால உண்மையை உணர்த்தலே ஆகும்.

இந்தக் கோயில்களைக் கண்காணிக்கின்ற சபையினராம் பன்மாகேசுரர், கோயிலில் கூடுவது வழக்கம். சபையினர், பலரும் கொடுக்குங் கொடைகளை வாங்கிக் கோயிலுக்கு வேண்டும் பல தொண்டுகளையும் நடத்தி வந்தனர். தூங்கா விளக்கு எரிப்பதற்கு நெய்க்காகப் பலர் ஆடுகளைத் தந்தனர். சோழ அரசரே அன்றி, அரச குடும்பத்தினர் பலரும் பலபல நன்கொடைகளை வழங்கினர்; படைவீரரும் வழங்கினர்; கோயில்களைக் கட்டினர். பஞ்ச காலத்தில், கோயில்

பணத்திலிருந்து மக்களுக்குக் கடன் கொடுப்பதும் உண்டு. பஞ்சம் போக்கும் வழி இஃது. அரசர்களது ஆணையோலைகளைக் கல்லில் வெட்டிவைத்தனர். இன்று ஆவணக் களரிகளில் (Offices of Registration) பத்திரங்களைப் பதிவு செய்வதுபோலக் கோயில் சுவர்களில் கல்வெட்டாக வெட்டிவைத்தார்கள். அந்த நாளையில் கற்றளிப் பிச்சர் என்ற அதிகாரி கோயிலில் இருந்தார். இந்த ஆணைகள் சரிவர எழுதுவதனைச் சரிபார்க்கத் திருமந்திர நாயகர், திருவாய்க் கேள்வியார் என்ற பல திறத்தினர் அரசாங்கத்தில் அமர்ந்திருந்தனர்.

ஒவ்வோர் ஊரிலும் ஊர்ச்சபைகள் ஊர்க்காரியங்களைத் திறமையுடன் மேற்பார்த்து வந்தன. தல சுயஆட்சி (Self-Government) அன்று அப்படிச் சிறந்திருந்தது. ஊரில், வயது வந்தவர்களில, கற்றவர்கள் பெயரை எல்லாம் பனை ஓலை நறுக்கில் தனித்தனி எழுதிக் குடத்தில் இடுவார்கள். இளஞ்சிறுவன் ஒருவன் எல்லோருக்கும் தெரிந்தாற் போல ஒரு நறுக்கினை எடுத்துத் தருவான். எல்லாரும் காணும் படியாக உள்ளங்கையை விரித்து வைத்துக்கொண்டு அந்த நறுக்கினைக் கையில் ஏற்கவேண்டும். ஏற்றவர்கள், அந்த நறுக்கில் எழுதியுள்ள பெயருள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக அறிவிப்பார்கள். ஊர் ஒவ்வொன்றும் பல குடும்பமாகப் பிரிக்கப்படும்; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொருவர் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஊர்ப் பெருமக்களாகச் சபை கூடுவர். இவர்கள் சிறு சிறு குழுவாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு வேலையை மேற்பார்த்து வந்தனர். இன்றைய நகராண்மைக் கழகங்களில் நிலையான குழுக்கள் (Standing Committee) இருப்பதை யொக்கும் இஃது. இக் குழுக்களுககு 'வாரியங்கள்' என்பது பெயர்: பஞ்சாயதது என்று இன்றும் வழங்குகிறோம். குழு ஒவ்வொன்றிலும்

ஐவர் இருந்தனர். பொன் வாரியம், ஏரி வாரியம், பஞ்ச வார வாரியம் முதலிய வாரியங்கள் இருந்தன.

கோயிற் சபைகளையும் ஊர்ச் சபைகளையும் மேற் பார்வை பார்க்க, நடுவிடத்து அதிகாரிகள் நாட்டைச் சுற்றி வந்து, அவ்வவற்றின் கணக்குகளை ஆராய்வார்கள். ஒரு காலத்தில் இவை பிறழ்ந்து நடந்ததால், நாடு முழுதும் கண் காணித்து வரக் கண்டாராதித்தர் என்ற சோழப் பெருமானர் சென்றார் என அறிகின்றோம்.

# 15. சென்னை நாகரிகம்

## 1. இருப்புக்கால மக்கள்

நிலமகள் நேற்றுப் பிறந்த சிறுமி அல்லள்; காலம் கண்ட கிழவி. அவள் சூரியனோடு ஒட்டிச் சுழன்ற காலமும் உண்டு; சுழன்ற சுழற்சியில பிய்ந்துப்போன காலமும் உண்டு; அன்று பிரிந்த நிலையில் இன்றும் அழியாத அழ கோடும் சூரியனைச் சுற்றிவருகிறாள்; தீப்பிழம்பாய்த் திகழ்ந்து எரிந்தவள் சிறுகச் சிறுகக் குளிர்ந்து நீராய்த் தரையாய் மலையாய் மணலாய் மாறிச் செடியும் கொடியும் பலவகை உயிர்களும் வளர்ந்து வாழ இடங்கொடுக்கும் சிறந்த தாயாகி விளங்குகிறாள்.

நிலமகளுக்கு முதலூழி, இரண்டாம் ஊழி, மூன்றும் ஊழி எனப் பலகாலம் கடந்தபின் அவளுடைய ஒரு கூறாகத் தோன்றிக் காட்சியளித்த தரைப் பரப்பினையே (Post Tertiary Period) சென்னையைச் சுற்றிலும் பார்க்கின்றோம். பல்லாவரம் மலை அந்நாளைய பழைய மலை. சென்னைக்கு அருகாக வடபுறத்தில் அந்நாளில் பேராறு ஒன்று ஓடிய தாம். குடதலையாறு, கூவம் முதலியவற்றை இன்றும் பழம் பாலாறு (விருத்த க்ஷீர நதி) என மக்கள் பேசிவருகின் றனர். திருமுல்லைவாயில் பாலாற்றங்கரையில் இருந்ததாகச் சுந்தரர் பாடுகின்றார். அந்தப் பழம்பாலாறு சுற்றுப்புறத்து மலைகளின் நீரை எல்லாம் கொணடு ஒருகாலத்து ஓடியது போலும்! பின்னே, பல பல காட்டாறுகளாகவும் கல்லாறுக ளாகவும் கூவம், அடையாறு முதலிய சிற்றாறுகளாகவும் மாறி மறைந்ததுபோலும்!

இந்தப் பழம்பாலாற்றங் கரையில் மக்கள் வாழ்ந்தனர். ஆற்றங்கரை யோரமாக அன்றோ நாகரிகங்கள் செழித்து

வளர்வது வழக்கம்! சென்னைக் கீழ்ப்பாக்கம் பழங்கால மக்களது இடுகாட்டினை இன்றுவரையில் காத்துவந்துள்ளது. இடுகாட்டில் புதையுண்ட மக்களுடைய தலையோடுகள், அவர்கள் ஆண்ட தட்டுமுட்டுக்கள் முதலியவற்றை ஆராய்ந்தே அவர்கள் நாகரிகத்தினை உலகம் அறிந்துவருகிறது.

மக்கள் குகையில் வாழ்ந்த காலமும் உண்டு. அத்தகைய குகைகள் இங்கே அலிகூடு மலையருகே உண்டு. பின்னர்க் கல்லால் வாளும் வேலும் கத்தியும் பிறவும் செய்து அவர்கள் வாழ்ந்துவந்தனர்: கற்கால மக்கள் என இவர்களை வழங்குவர். கல்லாலான கருவிகள் முதலில் கரடுமுரடாக இருக்கும். அந்தக்காலத்து மக்களே பழங் கற்கால மனிதர்கள். பின்னர்க கற்கருவிகள் அழகிலும் சிறந்து நின்றன; திறமையிலும் சிறந்து நின்றன. இந்தக் காலத்து மக்களே புதுக் கற்கால மக்கள்.

பழங்கால மக்கள் இறந்தோரைக் கல்லிட்டு மூடிக் கல்லை வலையமாக வைப்பது வழக்கம். இவைதாம் பின்னர்ப் பள்ளிப்படைக் கோயில்களாக வளர்ந்தன எனலாம். பழங் கற்காலத்து வழக்கமான இந்தக் கல் எடுப்பு, சங்க காலத்தும் பாலைநிலத்து மக்களிடத்தே வழங்கியது என அறிகிறோம். 'கல்லிடு பதுக்கை' என்பது சங்க நூலில் கண்ட வழக்கு. மண்ணால் செய்த பெரிய சால்களில், இறந்தோரை அடைத்துப் புதைப்பது ஊர்களில் வாழ்ந்த மக்களின் பழக்கம்: இதுவும் கற்கால மக்களின் வழக்கமே. இத்தகைய சால்களுக்கு 'முதுமக்கள் தாழி' என்பது பெயர். சங்க காலத்திலும் இந்த வழக்கம் இருந்தது. பழம் பாலாற்றங் கரையில் வாழ்ந்த கற்கால மக்களிடையே இருவகை வழக்கமும் இருந்தன. கூடுவாஞ்சேரி, பெரும்பெயர், ஆதித்தநல்லூர், சத்தியவேடு, பெரியநத்தம் என்று சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள கல்லிடு பதுக்கைகளும் முதுமக்கட்டாழிகளும அந்நாளைய மக்களுடைய குய

வேலைத் திறத்தையும் நன்கு விளக்குகின்றன. சென்னைக் கண்காட்சி நிலையத்தில் (மியூசியம்) இவற்றை இன்றும் காணலாம்.

கற்களைக் கருவியாகத் திருத்தி அமைத்த மக்கள் நாளடைவில் இரும்பு செம்பு முதலியவற்றை அறிந்து அவற்றால் கருவிகளைச் செய்யக் கற்றுக்கொண்டனர். இவ் விருப்புக்கால மககளே சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கத்தில் புதையுண்டு கிடக்கும் மக்கள் என ஆராய்ச்சியாளர் முடிவு செய்துள்ளனர். இந்தப் பழங்கால மக்களின் வரலாறு முழுதும் ஆராயப்பெருமல் அரைகுறையாகவே இருக்கின்றது. ஆனல், பழம்பாலாற்று நாகரிகத்தின் உயிர்நிலையாய்ச் சென்னையும் அதன் சுற்றுப்புறமும் மூன்றும் ஊழி தொடங்கிச் செழிக்கத் தொடங்கியது என்பதில் ஐயமிருப்பதற்கில்லை.

## 2. கோட்டை நாகரிகம்

பழம் பாலாற்றங்கரையில் வாழ்ந்த மக்கள் சங்ககால மக்களுக்குப் பாட்டன்மாரும் பூட்டன்மாருமாவர் என்பதனை முதுமக்கட்டாழிகளும், கல்லிடு பதுக்கைகளும் நிலைநாட்டுகின்றன. எனவே, தமிழர்கள் இந்நாட்டுப் பழங்குடிகளே அன்றி, இங்கு வந்து குடியேறின புதுக்குடிகள் அல்லர். இவர்கள் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் சென்று குடியேறின வரலாறு, கட்டுக்கதைகளைவிட மிக்க வியப்பினைத் தருவது என அறிஞர்கள் கருதுகிருர்கள்.

தொல்காப்பியர், தமிழ்நாட் டனைத்திற்கும் பொதுவான செந்தமிழினைப்பற்றியும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இதற்குச் சிறிது வேருக அங்கங்கே வழங்கிய கொடுந்தமிழினைப்பற்றியும் பேசுகிருர். இத்தகைய கொடுந்

தமிழ் நாடுகள் பன்னிரண்டு என்று அன்றுமுதல் இன்று வரையில் தமிழர் வழங்கிவந்துள்ளனர். அவற்றில் அருவா நாடு, அருவா வடதலை நாடு என்பவை தமிழ்நாட்டின் வட பகுதியாக அமைந்தவை. இவை, அருவர் நாடு, அருவர் வடதலை நாடு என வழங்கினபோலும்! பழம்பாலாற்றின் பின்னர்ப் புதுப்பாலாறும் சிறந்து விளங்கியது. அந்நாளில் அந்த ஆற்றங்கரையிலும் மக்கள் வாழத் தொடங்கினர். செங்கற்பட்டு, வடஆர்க்காடு என்ற நிலப் பகுதிகள் வளங் கொழிக்கத் தொடங்கின. சென்னை அல்லது பழைய பாலாற் றங்கரை அருவரது பழைய நாகரிக ஊற்றுகவும், புதிய பாலாற்றங்கரை அருவரது புதிய நாகரிக ஊற்றுகவும் அமைந்தன எனலாம். இந்த இரண்டும் அருவர் நாடு எனச் செழித்தன. இவற்றிற்கு வடபுறத்தும் அருவர் பரவினர். ஓர் இயற்கை எல்லை எதிர்நின்று தடுக்கும்வரை மக்கள் பரவு வது இயற்கைதானே! திருவேங்கடமலையும், வடபெண்ணை யாறும் தோன்றித் தடுக்கும்வரை அருவர் வடக்கிலும் சென்று குடியேறினர். இந்தப் புதிய குடியேற்ற நாட் டினையே அருவர் வடதலை நாடு என மக்கள் வழங்கலாயினர்.

இந்த அருவர் பேசிய கொடுந்தமிழிற்கே, வடுகர், அர வம் எனப் பெயரிட்டனர். அதுவே தமிழுக்கு அவரிடும் பெயருமாயிற்று. அரவம் என வழங்கும் கொடுந்தமிழின் இயல்பினைப் பழைய இலக்கண ஆசிரியர்கள் எடுத்துக் காட்டுக்களால் விளக்கியுள்ளார்கள். கேணி என்ருல் தமிழ் நாட்டுப் பிற பகுதிகளில் கிணறு என்றே பொருள். ஆனல், அருவா நாட்டார் குளத்தினையே கேணி என்று வழங்கி வந்தனராம். இதற்கேற்பப் பார்த்தசாரதியார் கோயில் எதி ரில் உள்ள குளம் திருவல்லிக்கேணி என்று பெயர் பெற் றுள்ளது. இந்தக் குளத்தால் அன்றே அந்த ஊரும் இன்று வரையில் திருவல்லிக்கேணி எனப் புகழ்பெற்று விளங்கு கிறது! தம் ஆந்திர மொழியினும் வேறு மொழி என

இகழ்ந்த அரவம் மொழி பேசும் திருவல்லிக்கேணி சென்னையைச் சேர்ந்ததேயாம்.

அருவர் நாட்டினை ஆந்திரர், ஆந்திர நாடு எனக் கூறுவது எப்படிப் பொருந்தும்? இந்த அருவர் நாடு அந்நாளில் பெருங்காடாகக் கிடந்ததாம். இதனைத் தண்டகாரணியம் என இராமாயணம் பேசுகிறது. ஆர்க்காடு, ஈக்காடு, பழவேற்காடு, ஆலங்காடு, திண்டிவனம், செங்காடு, ஊற்றுக்காடு, இளங்காடு முதலியன இந்த அருவா நாட்டில் உள்ள ஊர்களின் பெயர்கள். அருவா நாடு காட்டரணுற் பொலிந்தது என்பதற்கு இவையே சிறந்த சான்றுகளாம். யானையும் புலியும் விரும்பியபடி திரிந்த காடுகளாகும் இவை. புலியூர், இரும்புலியூர் என வழங்கும் பல ஊர்கள் இந்த அருவா நாட்டில் உள்ளன. மறக்குடியிற் சிறந்த அருவர், புலி வேட்டையாடிக் காடு திருத்தி நாடாக்கி நாகரிகத்தினை வளர்த்த பெருங் கதையினை இந்த வீரப் பெயர்களே இன்றும் நமக்கு நினைப்பூட்டுகின்றன.

காடு வெட்டித் திருத்திய பெருமக்களைக் காடுவெட்டிகள் எனத் தமிழர் புகழ்ந்தனர். காட்டில் வாழ்ந்த பெருமையைப் பாராட்டிக் காடவர் என்றும் அவர்களைத் தமிழரனைவரும் பாராட்டினர். தொண்டையர்கள் என்ற பல்லவர்கள் இந்தச் சிறப்புப் பெயர்களைத் தங்கள் கல்வெட்டுக்களில் செதுக்கி வைத்துப் போயிருக்கின்றனர். கரிகாற் பெருவளத்தான் என்ற சோழர்பெருமான் இவ்வாறு இந்தத் தொண்டை மண்டலத்தினைச் சீர்ப்படுத்தினன் என்று தமிழ்ப் பாட்டுக்களும், கல்வெட்டுக்களும் பல நூற்றாண்டுகளாகப் புகழ்ந்து வந்திருக்கின்றன. அவ்வாறு திருத்தப்பெற்றபோது தமிழ் நாட்டின் மேற்குப்புறத்திலுள்ள துளு நாட்டிலிருந்து தாங்கள் இங்குக் குடியேறினவர் என்று தொண்டைமண்டலத்துத் துளுவ வேளாளர் பெருமை பேசிக்கொள்கின்றனர். நாளடைவில் தொண்டையர்கள் சோழர் உறவால் தம்மை

யும் சோழர்கள் எனவே புகழ்ந்துகொண்டனர் எனப் பத்துப் பாட்டிலிருந்து அறிகின்றோம்.

சென்னையின் இந்நாளைய நாகரிகப் பெருமை அதன் கோட்டைவழியே எழுந்தது ஒன்றாகும். அருவர் நாட்டின் பழம்பெருமையும் கோட்டைவழியே எழுந்து ஓங்கிச் சிறந்ததுதான் இங்குள்ள வியப்பு. தொண்டைநாடு, காட்டு நிலைமை மாறி நாட்டு நிலைமை எய்தியதும் இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிந்தது. கோட்டம் என்பது கோயில் என்று பிற்காலத்தே பொருள் பெற்றது. கோயிலும் கோட்டையாக அமைந்ததாலேயே இந்தப் பொருளும் எழுந்தது. கல்லிடு பதுக்கை ஒரு மாயவட்டம்; கடவுள் தன்மை சான்றது; காவல் நிறைந்தது. இந்த நம்பிக்கை வளர வளர எல்லைக் கற்களை நட்டுக் கோட்டைகளை அமைக்கத் தொடங்கினர்; அவை காட்டில் பகைவர் கையில்நின்றும் தப்பிப் பிழைப்பதற்கு நல்ல வழியாக இருத்தலையும் உணர்ந்தனர். காட்டில் இத்தகைய காவல் இன்றியமையாது வேண்டும் அன்றோ?

அருவர் என்ற பெயரில் அர் என்ற பகுதியே அடிப்படை. ஆர்எயில், ஆர்க்காடு, அரண், அரையர் (அரியர், ஆரியர்), அருப்பம் முதலியன, இந்த அருவர், கோட்டை கட்டி வாழ்ந்து நாகரிகத்தினை வளர்த்தனர் என்பதனை இன்றும் நிலைநாட்டுகின்றன. அர்க்காமேடு என்பது புதுச்சேரியின் அருகேயுள்ள இடம். இதனை இரண்டாண்டுகளுக்கு முன்னே ஆராய்ச்சியாளர் தோண்டிப் பார்த்தனர். அது யவனர் குடியிருந்த இடம் என்பது தெளிவாயிற்று. அர்க்காமேடு என்பது அருவர் மேடு என்பதன் வேற்று வடிவம் போலும்! அருவரது பூங்காவனம் மிகுந்த இடம் எனப் பொருள்படுமாறு அருக்காமேடு (அரிககாமேடு) என்றும் வழங்கி இருக்கலாம்! மேடு எனப் பிற்காலத்தார் வழங்கியது பழைய கோட்டையும் ஊரும் மணல்மேடிட்டுப் பாழாய் நின்ற

இடத்தினைத்தான். எனவே, கோட்டை நாகரிகத்திற் சிறந்த மக்களிடையே, அந்தக் காவல்நிழலில் பல்லாயிரம் காதங்களுக்கு அப்பால் வாழ்ந்த யவனர்களும் வந்து குடியேறி வாணிகம் செய்தார் என்பதாயிற்று.

## 3. கப்பலோட்டிய நாகரிகம்

சென்னை இன்று பெரிய துறைமுகமாக விளங்குகிறது. கலங்கரை விளக்கம், காரிருளில், காலம் எல்லாம் களிப்புடன் சுழன்று சுழன்று கப்பல்களை 'வா, வா' என்று கண்ணாலும் கையாலும் அழைத்துக்கொண்டே இருக்கிறது. பொருள்கள் கப்பலேறிக் கடலுழுது வருகின்றன; போகின்றன. பலவகை மக்கள்; பலவகைப் பேச்சு; பலவகை நடை; பலவகை உடை; பலவகைப் பணம்! ஆந்திர நண்பர்கள் இதனைக் கண்டு மயங்கித் தங்கள் விசாகப்பட்டணத்தின் பெருமையையும் மறந்து இதனைக் கைப்பற்ற முயலுவதில் வியப்பொன்றும் இல்லை.

"கப்பலோட்டிய தமிழன்" என வ. உ. சிதம்பரம் பிள்ளையை விடுதலை வீரத் திருநாளில் நினைந்து நினைந்துருகிப் போற்றினோம். "கப்பலோட்டிய தமிழன்" என்பதே எந்த நாளிலும் தமிழனது தனிச்சிறப்பு. Rice என்ற சொல்லை மேனாட்டிற்குச் சோறூட்டிக் கற்றுக்கொடுக்க 2000 ஆண்டுகளுக்குமுன கப்பலில் அரிசி ஏற்றிச் சென்றவன் 'அரிசி' எனப் பேசும தமிழனே; எகிப்து நாட்டில் உள்ள பட்டைக் கோபுரங்களில் உள்ளிருக்கும் தமிழ்நாட்டுத தேக்கினைக் கப்பலில் ஏற்றிச் சென்று ஊற்றம் கொடுத்தவன் தமிழனே; கிழக்கிந்தியத் தீவுகளில கப்பலிற் சென்று பழகியவனும் தமிழனே; தமிழ்நாடு அத் தீவுகளிலும் செங்கோல் செலுத்த வழிகோலியவனும் தமிழனே. "கடல்சூழ்ந்த உல

கெல்லாம் காக்கின்ற பெருமான் கழற்சிங்கன்'' என்று சுந்தரர் பாடிய கடலரசர்பெருமான் ஒரு பல்லவன். பல்லவர் அருவ நாட்டுப் பெருமக்கள் என முன் கண்டோமாதலின், கழற்சிங்கன் சென்னை நாகரிகத்தை வளர்த்த அருவனும் தமிழனே ஆம்.

அரிக்காமேடு புதுவைக்கருகே யவனர் குடியாக விளங்கியது எனக் கண்டோம். கடலரையர்களான அருவா நாட்டாரோடு யவனர் நட்புப் பாராட்டியது இயற்கையேயாம். எயிற்பட்டினம் என மற்றொரு துறைமுகத்தைப்பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன. இது புதுவையா? அரிக்காமேடா? சதுரங்கப் பட்டணமா? இந்த ஊர்கள் இருக்கும் இடத்தே தான் எங்கேயோ அந்த எயிற்பட்டணம் இருத்தல்வேண்டும். மாமல்லை என்பது பல்லவரது மற்றொரு துறைமுகம். இதுவே பின்னாளில் மஹாபலிபுரம் எனச் சிறந்தோங்கியது. இடைக்கழி நாடு, உள்ளூர்களிடையே கழிவழியே படகோட்டி வாழ இடந்தந்தது. திருஇடந்தை, திருவான்மியூர், திருமயிலை, திருவொற்றி என்பவை திருமலையைத் தொடர்ந்து கடலருகே விளங்குகின்றன. இந்தக் கோயில்களின் அமைப்பை நோக்கும்போது கடலருகே அருவநாட்டுப் பெருவழியொன்று அந்நாளில் இந்த ஊர்கள் வழியே கடலையொட்டி ஓடியது என்பது விளங்குகின்றது. கடலருகாக அருவர் அருவநாட்டில் பரந்து சென்றுவந்தனர் போலும்!

கடலருகே வாழவந்த காடுவெட்டிகள் கடலுழுது கப்பலோட்டி வாழ முற்பட்டது அவர்களது இரண்டாம் திருவிளையாடல் எனலாம். திரைகடலோடித் திரைமீது தவழ்ந்து விளையாடிய இந்த மறவர்கள் திரையர் எனப் பேர்பெற்றனர். தொண்டையர், பல்லவர், காடுவெட்டிகள், காடவர், திரையர் என்று அருவநாட்டுப் பெருமக்கள் பலபேர் பெறுவர். அருவர் நாடே திரையர் நாடு: அருவர் நாடே தொண்டை நாடு. தொண்டை நாட்டுக் காட்டின் செழுமையையும் கடலின்

கொழுமையையுங் கண்டு சோழப் பெருமக்கள் காதலித்தனர் என்று முன்னர்க் கண்டோம். சோழர் திரையரொடு கொண்டும் கொடுத்தும் வாழத் தொடங்கினர். நாளடைவில் தொண்டையர் தம்மைச் சோழரென்றே எண்ணலாயினர். திரையருக்குக் கிழக்கிந்தியத் தீவுகளில் வாழ்ந்த நாகருடைய தொடர்பும் உண்டு. பலரோடும் கலந்து வாழும் பண்பாடு அருவநாட்டாரோடு கூடப்பிறந்ததாகும். இளந்திரையன், காஞ்சிமா நகரில் ஆண்ட பெருமையைப் பெரும்பாணாற்றுப் படை பாடுகிறது. திரையர் சிறப்பினையும், வேங்கடத்தின் நின்றும் பரவிய தொண்டையர் கொடையினையும் *சங்கப் புலவர் மறவாது போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

பல்லவனுக்கு மயிலைக்கோன் என்பது ஒரு சிறப்புப் பெயர். இது மல்லைகோன் என்பதுபோலப் போற்றப் பெறும் ஒரு பெயர். மல்லை என்ற மஹாபலிபுரமே தலை நகரமான காஞ்சியின் துறைமுகமாகும் எனக் கி. பி. ஆறும் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கு வந்து சென்ற ஹியூங் சாங் என்ற சீனப் பெரியார் எழுதிவைத்துள்ளார். பல்லவர் வடக்கிருந்து தென்பகுதியிற் சென்றனராம். அருவர் நாடு இரு பகுதியின் பழம்பகுதி போகப் புதுப்பகுதியின் தலைவர் மலலையோடு சேர்ந்தவர் எனக் கூறலாம். துறைமுகம் நாட்டிற்கு வாயிலேபோல விளங்கியதால், பல்லவனைத் துறை முகங்களையொட்டி மயிலைக்கோன், மல்லைக்கோன் எனப் புகழவந்தனர் எனத் தோன்றுகிறது.

பல்லவர் சிறந்தது சங்ககாலத்திற்குப் பின்னே எனலாம். அவர்கள் ஓ என வாழ ஓங்கியது கி. பி. ஆறும் நூற்றாண்டிலிருந்தே ஆகும். இந்தப் பல்லவர் காலத்திற்கு முன்னும் சென்னை சிறந்திருந்தது என்று அறுதிகூற இடம் உண்டு. இங்கே மயிலாப்பூர் என வழங்கும் மயிலை அன்றும் பெருமைபெற்றுத் திகழ்ந்தது. குறைந்தது கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேனும் அதன் பெருமை மேனாடுவரை எட்டி

யிருந்தது என்று கூறவேண்டும். டாலமி (Ptolemy) என்பவர் அந்த நூற்றூண்டில் வாழ்ந்த யவன பூகோள ஆசிரியர். தாம் எழுதிய உலகப் படத்தில் அவர் மயிலேயைக் குறித்து வைத்துள்ளார் என அறிஞர்கள் கருதுகின்றனர். இப்போது சென்னை இருக்கும் இடத்தில் அவர் தம் படத்தில் ''மல்லியர்பா'' என்ற பெயரை ஒரு துறைமுகத்தின் பெயராக எழுதி வைத்துள்ளார். ''ம் அ (ல்)ல் இய் அர்ப் ஆ'' என்ற எழுத்துக்களை 'ம் அய் இல் ஆப் ஊர்'' என இடம் மாற்றி எழுதியதையும் இந்நாளைய மயிலா(ப்)பூர் என்ற பெயர் வருவது ஒரு வியப்பே. கடைசியில் ஊர் என்பது யவனர் காதில் 'ஆ' என விழுந்திருத்தல் வேண்டும். உற்றுக் கேளாமையாலும், மொழியை அறியாமையாலும் நேர்ந்த எழுத்துப் பிறழ்ச்சியே இஃது என்பது தெளிவாகிறது. தரங்கம்பாடி ட்ராங்க்பார் எனத் தமிழறிந்தார் வாயிலும் புரளும்போது, யவனர் அந்நாளில் எழுத்துப் புரட்டி எழுதியது பெரிய தவருகாது.

இந்த மயிலாப்பூர் மற்ஞெரு வகையிலும் மேனாட்டில் புகழ்பெற்றுள்ளது. ஏசுநாதரின் அடியாரான ஸெண்தோம் என்ற தோம் ஐயர் அடிகளார் இந்தியாவிற்கு வந்து தம் அறவுரைகளை இந்தச் சென்னை மக்களிடையே வழங்கினராம். ஸெண்தோம் என்ற தோம் ஐயர் கோவில் இதனை இன்றும் நினைப்பூட்டுகின்றதாம். மயிலேயில் அன்ரூ, தோமையர் கோயில் இன்றும் கடலருகே நின்று நிலவுகிறது? பகைவர் கையில் சிக்கித் தோமையர் உயிர்விட்டுச் சமாதி கூடிய இடங்களும் இதற்கு அருகே உள்ளன. பரங்கி மலையைச் சார்ந்த சிறுமலையும் பெருமலையும் தோமையர் கோவிலுக்குப் பெருந்தொலைவில் இல்லை. இவையே அப் பெரியார் சமாதி கூடிய இடம் எனக் கிறித்துவர்கள் இன்றும் காட்டி, ஆண்டுதோறும் திருவிழாக் கொண்டாடி அடிகளார் நினைவை நிலைநாட்டிவருகின்ருர்கள். இஃது உண்மை

யாலும், கிறித்துவப்பெருமான் பிறந்த முதல் நூற்றாண்டிலேயே மேனாட்டோடும், மேனாடும் அன்று உண்மையறியாது மயங்கிய கிறித்துவ அறவுலகோடும சென்னைக்குத் தொடர்புண்டாகியது எனலாம். தோமையர் இவ்வாறு இங்கு வந்தது அருவநாட்டுத் துறைமுகப் பெருவாய் திறந்து கிடந்தமையாலேயாம். அடையாத பெருங்கதவம் அருவநாட்டின் அழியாத பெருமையாகும். உலகப் பெருவழியாகச் சென்னை விளங்குவது இன்று நேற்று அன்று; இரண்டாயிரமாண்டுகளாக எனல் வேண்டும்.

மயிலாப்பூரில் 'லஸ் சர்ச்' என்று ஓரிடத்தினை வண்டியில் ஏறிச் செல்வோர் அனைவரும் அறிவர். 'லஸ்' என்றால் ஒளி என்று பொருள்; ஆதலின் அஃது ஒளியம்மைத் திருக்கோயிலாகும். மேனாட்டவர் சிலபல நூற்றாண்டுகளாக முன்னர்க் கீழ்க்கடலில் கப்பலோட்டி வந்தபோது திசையறியாது திகைத்தனராம். அப்போது இங்கிருந்து ஒரு பேரொளி தோன்றியதாம்; அது கண்டு கரை சேர்ந்து பிழைத்தனராம்; ஒளி தோன்றிய இடத்தில் ஒரு கோயில் ஒளியம்மைத் தாய்க்கு எடுப்பித்தனராம். கலம் கரைவிளக்கம் இன்றன்று ஒளிர்வது; கடவுள் தாயின் கருணை விளக்காகக் காலங் காலமாக ஒளிர்ந்துவருகிறது என்பதாயிற்று. கீழ்க்கடலில் செல்லும் கப்பலைக் காக்க அன்றோ, மணிமேகலைத் தெய்வமும் அருவரொடு தொடர்புடைய நாகர் வழிபடு கடவுளாய்த் தமிழ்க் கடவுளாயிற்று!

## 4. பல்கலைக் கழகம்

பொழுது விடியவில்லை. தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்கின்றேன். தூய காற்று வீசுகின்றது. உடம்பெல்லாம் புத்துயிர் பரவுகின்றது. எழுந்து நடக்கலாமென்று தோன்றுகிறது. நேரே நடந்து செல்கின்றேன். கருங்கடல்

வெள்ளையலைகளை வீசி இன்பக் கூத்தாடுகின்றாள். கடல் கடந்த தமிழரின் வழிவந்தும் எனக்குக் கடல கடக்கும் துணிவு இல்லை! கடலருகே உட்கார்ந்துவிடுகின்றேன். கதிரவன் கரகரவென்று எழுகின்றான்; உலகினைத் தன் அழகிய நிறமெலாம் பூசி ஒளிரச் செய்கின்றான். திரும்பிப் பார்க்கின்றேன். மங்கிக் கிடந்த சென்னை நகரம் பொங்கிப் பொலிகிறது. ஒருபுறம் பழம்பாலாற்றைச் சேர்ந்த கூவம் கடலொடு கலக்குமிடத்தே புதுப்பாலம் இந்நாளைய சிற்பியின் பெருமையை வளைந்து வளைந்து புகழ்ந்து கிடக்கின்றதே. நேரே செக்கச் சிவந்த கட்டடம் வெள்ளை முடிகளுடன் ஓங்கி வீற்றிருக்கின்றது. என்னுடைய கல்வித்தாய் இனிதே அரசாட்சி செய்யும் திருஓலக்க மண்டபம் இதுதான்!—சென்னைப் பல்கலைக் கழகத் திருக்கோயில் இதுதான்!

நிலப்பரப்பினைச் சுற்றுமுற்றிலும் பார்ககின்றேன். அளவிலாத பெருவானம்! அளவிலாத பெருங்கல்வி! காலப் பரப்பினையும் அளக்க முயல்கிறது என் மனம். பழைய நினைவுகள் வருகின்றன. கற்ற நினைவும், கேட்ட நினைவும், வாழ்ந்த நினைவும் எல்லாம் சென்னை நகரம் இன்றுபோல என்றும் அறிவாராய்ச்சி நிலையமாகவே இருந்தது எனக் கண்டு என் மனம் இன்பவெள்ளத்தில் துள்ளிக் குதிக்கின்றது. தெற்குமுகமாகத் திரும்புகிறேன். தோமையர் கோயிலின் கோபுரம் எனக்குக் காட்சியளிக்கின்றது. தோமையர் கிறித்தவக் கொள்கையினை அங்கிருந்து பரப்பியதனை முன்னரே கண்டோம். தோமையர் அறப்பள்ளியைக் கிறித்துவப் பெருமானின் பல்கலைக் கழகம் என்று பாராட்டி வரவேற்கும் நூல் சென்னை மாநகரத்தெழுந்த இந்தத் திருக்குறளன்றி வேறெது? இன்றுள்ள சென்னையின் பொதுநிலைமைக்கேற்ப, அன்றே எவரும் என்றும் எதிர்பாராத முறையில் பொதுமை அறத்தினைத் திருக்குறள் வெளியிட்டது இந்தச் சென்னை மண்ணின் வளம்போலும்!

திருவள்ளுவரை ஏலாசாரியார் என்ற சைனப் பேராசிரியரென சமணப் பெரியோர் பாராட்டுகின்றனர். சைனப் பெரியோர்களின் அறப்பள்ளியாகவும் திருமயிலை விளங்கியது. சமணர்கள், தமக்குப் பெருவழி காட்டித்தந்து கடவுள் தன்மை பெற்ற பெருமக்களை இருபத்துநால்வர் என எண்ணி அவர்களைத் தீர்த்தங்கரர் எனப் போற்றி வருகின்றனர். அவர்களில் நேமிநாதர் என்பாரும் ஒருவர். அமணமாய் நின்ற சமணச் சிலையில் செதுக்கியுள்ள ஆழிகொண்டு இந்த நேமிநாதரின் உருவத்தினைப் பிரித்தறியலாம். இந்தப் பெரியாரின் திருக்கோயில் திருமயிலையில் பேரும் புகழும் பெற்று ஓங்கியது. திருமயிலையில் கோயில்கொண்ட இந்தப் பெருமையால் நேமிநாதரது பெயரே மயிலைநாதர் எனத் தமிழரிடையே வழங்கலாயிற்று. 14-ஆம் நூற்றுண்டுவரை இந்தச் சிறப்பு மறையவில்லை என்பது தெளிவாகிறது. அந்த நூற்றுண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரியாரின் பெயர் மயிலைநாதர் என்பதாம். இவர்தாம் நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர். சமணப்பள்ளிகளும், புத்தப்பள்ளிகளும் பல்கலைக் கழகங்களாகத் திருமயிலையில் வளர்ந்தோங்கித் தமிழை வளர்த்த பெருங்கதையினைத் தமிழன் மறக்க முடியாது.

இவற்றை எல்லாம் எண்ணிக்கொண்டே வரும்போது ஒரு புதிய கருத்து மின்னல்போல் திடீரென விளங்குகிறது. அருவர் நாட்டு அருவரைப்பற்றியன்றோ பேசி வருகின்றோம்? தொல்காப்பியத்தில் முக்காலமும் அறிந்த அறிவரைப் பற்றிக் கேட்டுள்ளோம். முனிவர் என்று ஒருசில ஆசிரியர் அறிவரைக் கூறுவர்; வானத்தினை நோக்கி வான்மீன்களை ஆராய்ந்து காலத்தை வரையறுத்து 'மழை வரும்—வெயில் வரும்' என்றெல்லாம் கணக்கிட்டுக் கூறும் வான நூலாசிரியர் என்று வேறு சிலர் கூறுவர். அருவர் என்ற சொல்லும் அவர்கள் அறிவாராய்ச்சியும் இந்த 'அறிவரை'

நினைப்பூட்டுகின்றன. கண்மூடிக் கனவு கண்டு கடவுளையும் உலகினையும் பற்றிக் கண்ட உண்மைகளைக் கூறும் பெரியார் ஒருபுறம்; அவ்வாறு உள்ளுக்குள்ளேயே ஒளிந்துகொள்ளாமல் வெளியுலகில்கூட வாழ்ந்து கண்ணைத் திறந்து அனைத்தினையும் ஒன்றுவிடாதாராய்ந்து உயர ஒளிரும் வான்மீன்களையும் எண்ணிப் பார்த்து அவற்றிற்கும் அவ்வப்போது தோன்றும் காலத்திற்கும் உள்ள தொடர்பினை உய்த்தறிந்து உண்மை கூறுவோர் மற்றொருபுறம். இன்றைய விஞ்ஞானப் பெரியோர் இந்தப் பின்னினத்தைச் சேர்ந்தவரே. அறிவரும் அருவரும் இந்த இனத்தினையே சேர்ந்தவர் எனலாம். கண்ணுற் கண்டதனைக் கண்மூடியும் கண்டு, கருத்தினைத் திருத்தமாக உருப்படுத்தி உண்மையுணர்ந்து உலகிற்கு உதவுவார் ஆதலின் முன்னினத்தின் உயர்வும் இங்கு உண்டு.

அருவர் நாடு அறிவர் நாடே ஆம். இதனை நிலைநாட்ட எதிர்பாராத மற்ருேர் இடத்திலிருந்து அரிய சான்றுகள் கிடைக்கின்றன. அருவர் நாடு என்பதே தொண்டை நாடு எனக் கண்டோம். இந்தத் தொண்டை நாடு காடாக இருந்ததையும் நாம் முன் கண்டதேயாம். இந்தக் காட்டினைத் தண்டகாரணியம் என இராமாயணம் பேசுவதும் நாம் அறிந்ததொன்றேயாம். இந்தக் காட்டில் ஆங்காங்கே அறிவர் அல்லது முனிவர் தனித்தனியே அறப்பள்ளி அமைத்துக் கொண்டு தம்மைச் சூழ்ந்துநின்ற இளைஞருக்கு அறிவு ஊட்டி வந்தனர் என்பது இராமாயணத்தின் அடிப்படை. அவரைக் காக்க அன்றோ இராமன் தன் வாயை விற்றுவிடுகின்றான்? அந்த அறிவரின் தலைவர் அகத்தியர்; அவர் அன்றோ இராமனுக்கு வில்லும் உதவுகிறார்? அகத்தியர் தமிழ்முனி என்பதனை உணர்ந்தால் இந்தக் குறிப்புக்களின் நுட்பம் நன்கு விளங்கும். வரலாற்றாராய்ச்சியாளர் ஒருவர் இந்தத் தவப் பள்ளிகள் அந்த அந்த முனிவர் நடத்திவந்த பல்கலைக் கழகங்களே என முடிவு கட்டியுள்ளார்.

பல்கலைக் கழகம் என்றால் பல கட்டடங்களும் பலபல பொருள்களும் நினைவிற்கு வருகின்றன. இவை எல்லாம் இல்லாதபோது பல்கலைக் கழகம் எனப் பேசுவது பலருக்கும் நகைப்பினையே விளைக்கும். நம் கல்வி ஆராய்ச்சி, கல் ஆராய்ச்சியாக முடிந்துள்ளது. மூளையும் கல்லாய்ப் போவது தான் இந்த ஆராய்ச்சியின் முடிவு. கட்டடம் முதலியன புறக்கோலங்களே. நாம் அகக்கோலத்தினையே நாடவேண்டும். அறிவு விளக்கமே அகக்கோலம். பேராரவாரப் பெருங் கட்டடப் பெருங்கோலப் பெரும்பணப் பெருந்திருமேனிப் பெரும்பொலி வெல்லாம் வெளிமினுக்கே. நம் பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சியுரைகள் பல காணேம் என்று பலரும் கையை முறித்துக்கொள்கிறார்கள். பழங்காலத்தில் வெட்டவெளியில் வான்மீன்களின் ஒளியில் இரவெல்லாம் ஆய்ந்தனர்; கதிரவனோடு உடனோடுவதுபோல அறிவு கொண்டு உலகெல்லாம் உள்ளத்தினை ஓடவிட்டுப் பசுமரத் தடியில் அமைதியாய் நின்று அனைத்தினையும் ஆராய்ந்தனர். பெண்ணும் ஆணும் வாழுவது எப்படி? அரசியலை அமைப்பது எப்படி? என்று படிப்படியாகச் சென்று கடவுளையும் விடாத பெரும்பிடியாகப் பிடித்து ஆராய்ந்தனர். இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்தாலன்றோ அறிவு வளரும்; விஞ்ஞானம் வளரும்; கலை வளரும்; கல்வி வளரும்; களிப்பு வளரும்; களிப்பில் பாட்டு வளரும். இந்த உண்மையினைக் கண்டு இரவீந்தரும் தம் விசுவபாரதி என்ற பல்கலைக்கழகத்தினைப் பழமைபோல இயற்கைத் தாயின் மடிமீது தவழ்ந்து விளையாட விட்டுள்ளார். ஆதலின் குடிசைக்குக் குடிசை பல்கலைக்கழகம் வளர்ந்தது என்று கூறுவதில் தவறில்லை.

காடான காலத்திலும் இவ்வாறு அறிவர் நாடாகச் சிறந்த அருவர் நாடு, நாடான காலத்தில் உண்மைப் பல்கலைக் கழகமாக வளர்ந்து பரவுவதனைச் சொல்லவேண்டுமா? தொண்டைநாட்டில் காஞ்சிபுரம் இவ்வாறு தலைசிறந்து

விளங்கியது. இந்தியாவில் அந்நாளில் விளங்கிய ஏழு அறிவு நிலையங்களில் இதுவும் ஒன்று என ஓங்கியதோடு, இது காரணமாக நகரமென்றால் காஞ்சி (நகரேஷு காஞ்சி)யே என வடமொழியாளரும் புகழ்ந்து பாராட்டுமுறையில் சிறந்தெழுந்தது. நம் நாட்டுக் காப்பியமான மணிமேகலையிலும், காஞ்சிமாநகர்ப் பெருமையைக் காணலாம். சீன நாட்டிலிருந்து வந்து இந்த நாட்டினைப்பற்றி எழுதிவைத்த ஹியூன் சாங் வழியாகவும் இந்தப் பெருமையை அறியலாம்.

கல்விப் பிரிவு என ஒன்றனைப் பழைய தமிழ்நூல்கள் கூறுகின்றன. கல்வி இளமையிலே முடிந்துவிடுகிறது என நம்புகின்றோம். இப்போது உலகம் இந்த நம்பிக்கையினை உடைத்தெறிந்துவரக் காண்கிறோம். இளமையில் கம்பனையும் வள்ளுவனையும் முற்ற முடிய அறிய முடியாது. போதிய உலக அறிவின்றி அவர்களை உணர்ந்தின்புற முடியாது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது." அதனாலேயே கல்வி கற்று உலகிடை வாழ்ந்தபின் மறுபடியும் கற்க வருகின்றனர், டென்மார்க் முதலிய இடங்களில், முதியோர். கல்லூரிகள் அந்நாடுகளைக் காத்துள்ளன. அப்படியே பழைய தமிழ்நாட்டிலும் கல்வி கற்று மணந்து வாழ்ந்தபின் இடையே மனைவியைவிட்டுப் பிரிந்து கல்வி கற்க முனிவரிடம் சென்று வாழும் வழக்கம் பெருவழக்காகப் பரவி இருந்தது. இது தான் கல்விப் பிரிவு. சங்க நூல்கள் இதன் பெருமையைப் பாடுகின்றன. "சாகின்ற வரையிலும் கற்றல்" என்ற எண்ணம் தமிழ்நாட்டில் வேரூன்றியது. இதனாலன்றோ திருவள்ளுவர் "என்ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?" என்று கேட்கின்றார்?

தோமையர் கோயில் இருக்குமிடத்தின் தமிழ்ப் பெயர் மயிலாப்பூர் என்பதே நினைவிற்கு வருகிறது. தமிழில் இரண்டெழுத்துக்கள் தெரிந்தாலும் மயிலாப்பூர் என்ற உடன் திருவள்ளுவர் கோயிலும், அங்கு மயிர்முடியும்,

பெருந்தாடியும், திருநீறும், யோகப்பட்டமும் கொண்டு வீற்றிருக்கும் அவர் உருவமும் மனக்கண்ணெதிரே தோன்றுகின்றன. அந்தக் கோயிலிருக்கும் இடத்தேதான் அவர் வாழ்ந்தார் என்றனர் பின்னுள்ளார். அப்படித்தான் அவர் திருக்கோலம் இருந்தது என மனக்கண்ணால் கண்டு செதுக்கிவிட்டார் ஒரு சிற்பியார். இவற்றிற்கெல்லாம் சான்று என்ன என்று அறிவு கேட்கிறது. அந்த அறியாமை இருள் நீங்க இன்னும் பொழுது விடியவில்லை. திருமயிலாப்பூரில்தான் திருவள்ளுவர் வாழ்ந்து திருக்குறளை இயற்றினார் எனப் பலரும் நம்பிவந்திருக்கின்றனர். இந்த நாலு• பேர் போன வழியில் நாமும் சென்று நம்புவதில் கேடொன்றும் இல்லை. பின்னர்த்தான் திருவள்ளுவர் மதுரைக்குப் போய்த் திருக்குறளினை அரங்கேற்றினாராம். திருக்குறளைத் தந்த திருமயிலை சிறந்ததோர் அறிவுநிலையமன்றோ? வள்ளுவர் வாயிலன்றோ கலைமகள் வீற்றிருந்தாள்? அவர் இருந்த இடமே பல்கலைக் கழகம்! என்ன என்ன கலை? அறிவுக்கலை, பொருட்கலை, இன்பக்கலை, கடவுட்கலை, அரசியல் கலை, பிள்ளைக்கலை—தனித்தனி சொல்லுவானேன்! உலகமாய்ப் பிரிந்த தமிழ்க்கலை யனைத்தும் அங்கு விளங்கவில்லையா? எல்லாச் சாதியினரும் எல்லா மதத்தினரும் எல்லா நாட்டினரும் ''இதுவே உண்மை'' என்று திருக்குறளைப் போற்றுகின்றனர்.

அறிவோரிடம் சென்று கற்கும் பல்கலைக் கழகங்கள் இராமாயண காலத்திலிருந்தன என்பது பழங்கதை அன்று; அருவர் நாட்டுப் பெருவழக்கே என்பது இவ்வளவும் கூறியதால் விளங்கி இருக்கும். முடிவாக மற்றோர் எடுத்துக் காட்டினையும் விளக்குவது நல்லது. திண்டிவனம் என்ற பெயரே காடு என்பதனை நினைப்பூட்டுகின்றது. சங்க காலத்தில் இதற்குக் 'கிடங்கில்' என்று பெயர். இந்தக் காட்டில் பழங்கால மரபினையொட்டி ஒரு பெரியார் சங்க காலத்தில்

வாழ்ந்து வந்தார்; உண்டியும் உடையும் உறையுளும் உதவி அறிவூட்டி வளர்த்துவந்தார். "Residential University" என்று புகழ்வது இன்றைய பெருமை அன்று. அப்படித் தாமே அறிவூட்டி வளர்ப்பார்க்குக் 'குலபதி' என்று பெயர். கிடங்கிற் குலபதி, சங்கப் புலவரில் ஒருவர். அவர் பாட்டை இன்று நாம் பாடலாம்; பாடி இன்புறலாம்.

வள்ளுவரும் அருகரும் தோமையரும் தொடர்பு கொண்ட மயிலையும், அருவர் நாட்டின் வடபகுதியில் கலங்கரை விளக்கும் அறிவு விளக்கமாக ஒளிர்ந்தன என்று கூறத் தட்டில்லை. வள்ளுவர் குறளை ஈன்றெடுக்கும் பொதுமைப் பல்கலைக் கழகமாக விளங்குவதற்கு இதற்கு வாய்ப்பு உண்டு. வடநாட்டின் எல்லைப்புறமாம் அருவா வட தலையில் அமைந்து நாகரிகக் கலப்பிடமாக வீற்றிருக்கும் வாய்ப்பு ஒன்று; மேலும் கீழ்நாடும் வந்து போகும் உலகப் பெருவாயாம் துறைமுகமாக இருப்பதால் பிற நாடுகளை அறிய நிற்பது மற்றொரு வாய்ப்பு. சென்னை நகரத்தின் அறிவாராய்ச்சி முடியே வள்ளுவர் போன்ற அந்நாளைய மக்கள் வாழ்ந்து காட்டிய பொதுமை அறமாகும்.

## 5. அன்புநெறி

மாலையில் கதிரவன் மேற்கே மஞ்சளாய்ப் பைம்பொன்னாய் உருண்டையாய் உருண்டு, செக்கச் சிவந்து, வான முழுதும் செவ்வொளியில் மூழ்கிக் களிக்க, மெல்ல மெல்ல மறைகின்றான். உயிர்களுக்கெல்லாம் ஓய்வு பிறக்கின்றது. இவைகளைக் கண்டு இன்பச் சிரிப்புப் பூப்பதுபோல வான் மீன்கள் ஒவ்வொன்றாக அங்கும் இங்கும் தலைகாட்டி வானக முழுவதும் நெருங்கி நிற்கின்றன; "ஓம், ஓம், ஓம்" என்ற ஒலி, விட்டுவிட்டுத் தொடர்ந்து இன்ப ஓசை ஒலியாகப் பாடுகின்றது. இஃது ஒரு மணி ஒலிதான். ஒலி வரும்

வழியே திரும்பிப் பார்த்தால், பெரியதொரு கோபுரம் வானகத்திற்கு ஏறுவதற்கமைந்த படிக்கட்டுப் போல ஓங்கித் தோன்றுகிறது, அந்த எழுநிலை மாடத்தை நோக்கிப் போகின்றோம். கோட்டை போன்றதொரு கோயிலின் வாயிலாக அக்கோபுரம் விளங்குகிறது. மக்களைக் காணோம். துரிஞ்சிலும், வௌவாலும் கோபுரத்தில் குடிபுகுந்து கழுவி லிட்டாற்போலத் தொங்குகின்றன. ஒரே இருள்! புறத்தே இருந்த அழகிய இயற்கையையும், இருள்கின்ற இந்தக் காட்சியைப் பொறுக்கமாட்டாமல், வான்மீன்கள், கண்ணை மூடித் திறப்பதுபோல் மின்னுகின்றன.

முன்னொரு காலத்தில் மக்கள் வாழ்ந்த இடமே இன்று பாழாகிக் கிடக்கின்றது எனத் தெரிகிறது. கோபுரத்தின் மேல் ஏறினால், எழுநிலை மாடத்தில் ஒவ்வோர் அடுக்கிலும் தூண்களே இல்லாத பெரிய மண்டபத்தில் நான்கு புறத்தி லும் காற்றுக் கலந்து வீசுகின்ற அழகினையும் இனிமையினை யும் என்னென்பது! உலகத் துன்பங்களை எல்லாம் மறந்து வானுலகத்தில் புகுந்தது போன்ற மகிழ்ச்சி மனததில் பொங்கி வழிகின்றது. இத்தகைய கோபுரத்தில் இருந்து தான் இராமாநுஜர், ''எனக்கு நரகம் வந்தாலும் இந்த உலக மக்கள் எல்லாம் என்றும் இன்ப வாழ்வு வாழ முயல் வேன்'' என்று கூறித் துள்ளி எழுந்த அவர் துணிவு, நினை விற்கு வருகிறது. அந்தத் துணிவின் வழியே, நாடுகளில் எல்லாம் சென்று தொண்டின் பெருமையே கடவுள் வழி பாட்டின் உண்மை வடிவம் எனப் பேசித் தீண்டாதாரைக் கோயில்களுக்குள் புகவிட்டுத் தமிழ்ப்பாட்டே எங்கும் பாடி அவர் ஆட முயன்ற முயற்சிகள் கண் எதிரே தோன்று கின்றன. எல்லாம் பழங்கதையாகி மறைந்தனவே என மனம் வாடி வதங்குகின்றது. இத்தகைய கோபுரத்திலிருந்து அருணகிரியார் கிளிபோலக் கவலையற்றுத் திருப்புகழ் பாடி யதும் நினைவிற்கு வருகிறது. ஆம்! ஒருகாலத்தில் இந்தக்

கோபுர மாடங்களில், கற்றவர் வாழ்ந்து கலைகளைப் பயிற்றி வந்தனர். இன்றும், இவற்றில் ஒவ்வொன்றும் ஒரு கல்லூரி யாகலாம். மின்சாரத் தூக்கி (Lift) ஒன்று அமைத்தால் மேலே ஏறுவதும் இறங்குவதும் எளியவாகும் எனக் கனவு காணும்போது, அங்குப் புதிய திட்டப்படி மின்சார விளக் குக்கள் மின்னிப் பொலிவதனையும் மனக்கண்ணால் காண் கின்றோம்.

கோபுரத்திலிருந்து கீழிறங்கிக் கோயிலுக்குள் சென் றால், பெரிய பெரிய மண்டபங்கள்: "நாலுகால் மண்டபம், பதினாறுகால் மண்டபம், நூறுகால் மண்டபம், ஆயிரம்கால் மண்டபம் என எத்தனை எத்தனை தோன்றுகின்றன!" "ஏன் இவற்றினை வீணாகக் கட்டினார்கள்? கட்டினவர்கள் வெறியர் களா?" என்று உள்ளிருந்து உரத்த குரலில் கேள்வி எழு கின்றது. "இத்தகைய மண்டபத்தில்தான் சேக்கிழார் பெரியபுராணம் அரங்கேற்றினார்; கம்பர் இராமாயணத் தினை அரங்கேற்றினார்; ஆசிரியன்மார் பல பல விளக்கங் களைக் கூறி வந்தனர்" என என்னுடைய நினைவு விடை கூறுகின்றது. முதியோர் கல்வி, இளையோர் கல்வி, பெண் கள் கல்வி எல்லாம் இந்த மண்டபங்களில் நடந்தேறி வந்தன.

'எழுத்தறியும் மண்டபம்' என ஒன்று திருவொற்றி யூரில் இருக்கின்றது. அந்த மண்டபத்தில் வீற்றிருப்பவரே இராமலிங்க அடிகள் பாடும் எழுத்தறியும் பெருமாள். இங்கு இலக்கண வகுப்புக்கள் நிகழ்ந்தன. பலவகைத் துறைகளில் மக்கள் இங்குப் புகுந்து கற்றார்கள். கடவுளே இல்லை என்கிற பூருவ மீமாஞ்சை நூல்களையும், கடவுள் எதிரேயே கற்று ஆராய்ந்தார்கள். பரந்த நோக்கம் அந்த நாளில் இருந்த நிலைமை அஃது:

இசைப் பாடல்கள் பாடினார்கள். 'சர்வ சங்கீத வாத்ய மண்டபம்' என எல்லா இன்னிசைக் கருவிகளும் முழங்கும்

மண்டபம் ஆவுடையார் கோயிலில் இன்றும் இருந்துவருவது நினைவிற்கு வருகிறது. அரையர்கள் இசைப்பாட்டினைப் பொருள் விளங்குமாறு அபிநயம் பிடித்துக் கூத்தாடிக் காட்டுவதற்கு இராமானுசர் முதலானோர் பெரிதும் முயன்ற பெருங் கதையும் மனத்திற்கு வருகிறது. கோயிலே உண்மையிற் பல்கலைக் கழகமாக அந்த நாளில் விளங்கியது.

அது மட்டுமா? ஊர்மக்கள் இந்த மண்டபங்களிலேயே ஊரினை ஆளும் ஊராளும் கணத்தாரைத் தேர்ந்தெடுத்தார்கள்; குடத்தில், ஊரார் பெயர்களை எல்லாம் தனித்தனியே ஒவ்வொரு பனையோலை நறுக்கில் எழுதியிட்டுச் சிறுவனொருவனை அனைவர் எதிரிலும் குடத்தில் கையிட்டு ஒரு நறுக்கை எடுத்துத் தரச் சொல்லுவார்கள். அந்த நறுக்கில் உள்ள பெயர் உடையவரே ஊராளும் கணத்தவராவார். 'எல்லோரும் ஓர் நிறை' என்பதனை ஒட்டிய தேர்தல்முறை அது. பஞ்சாயததார் என்ற வாரியத்தார் கூடி ஊராளும் வேலைகளைப் பார்ப்பதும் அந்த மண்டபங்களிலேயே ஆம். பல பல சாதியினரும் பல பல தொழிலினரும் தங்கள் தங்கள் குழுவினைப் பற்றியவற்றினை ஆராய்வதும் அங்குக் கூடித்தான். ஊராளும் கணத்தாரின் பணமிருப்பதும் அங்குத்தான். அரசர்கள் கட்டளையைக் கல்லில் அடித்துவைப்பதும் அங்குத்தான்.

'ஏழை பங்காளன்' எனக் கடவுளுக்கு ஒரு பெயர் வந்தது, இத்தகைய கோவில்களால்தாம். நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கவும், படுகிடையாகக் கிடப்பார்க்கு உணவு முதலியன உதவவும் ஏற்பாடுகள் உண்டு. இவர்களை அன்போடு காப்பாற்ற, இன்று, 'நர்சுகள்' என்று சொல்லுவது போன்ற பணிப்பெண்களும் இருந்தனர். வேலை செய்ய முடியாமல் குருடும் முடமுமாய் இருப்பவர்க்கு அந்த நாளில் செய்திருந்த ஏழ்மை ஒழிப்புத் திட்டம் மிக அழகியது. கையில்லா முடவன் தேவாரம் முதலிய பாடல்களைப் பாடக் கண்ணில்லாக் குருடன் மத்தளங் கொட்டிக் கோயிலோடு

கோயிலாய் வாழ்ந்தினிதே வரக்கூடும். ஊரார் அனைவரும் ஓய்வு காலங்களில் கண்டு களிக்கத் திருவிழாக்கள் நிகழும். அந்தத் திருவிழாக்களில் குறவஞ்சி முதலிய நாடகங்களைக் கண்டு மக்கள் களிப்பார்கள். அன்னபிஷேகம், பாலாபிஷேகம் என்பன எல்லாம் திக்கற்றோர்க்குச் சோறு கொடுக்கவும் ஏழைப் பிள்ளைகளுக்குப் பால் உதவவும் எழுந்த ஏற்பாடுகளேயாம்.

இவை எல்லாம் நாம் காண்கின்ற இன்பக் கனவுகள் அல்ல; அந்தக் கோயிற் சுவர்களில் கல்லெழுத்தால் செதுக்கி வைத்திருக்கும் பழைய வரலாறுகளேயாம். எனவே, கோயில்கள், வழிபடும இடமாக மட்டும் விளங்கவில்லை. வழிபாடுதான் உயிர்நிலை. ஆனால், அதனைச் சுற்றிச் சமுதாயத் துறைகள் அத்தனைக்கும உயிர்நிலையாகக் கோயில்கள் தழைத்தோங்கின. இன்று மேனாட்டில் கிளர்ச்சி ஒன்று வளர்கின்றது. பள்ளிக்கூடங்களைச் சமுதாய வாழ்வின் நடுவிடமாக அமைத்துவர முற்படும் கிளர்ச்சியே அ:்து. அத்தகைய கிளர்ச்சியின் பயனாகவே சென்ற காலத்தில் நம் தமிழ்நாட்டில் கோயில்கள் எழுந்தன. இந்தக் கோயில், எதிர்காலத்தில் எவ்வாறு திருந்தவேண்டும் என்பதனை இந்தப் பழைய வரலாறே நமக்கு விளக்கிவைக்கவில்லையா?

இந்தப் படமாடும் கோயில்கள் எல்லாம் நடமாடும் கோயில்களாம் மக்களுக்கென்றே எழுந்தன. இந்த உண்மையைப் பிறர் மறக்கும்போதெல்லாம் அறிஞர்கள் வற்புறுத்தி வந்துள்ளார்கள். இதனை இந்தத் தமிழ்நாட்டில் புகவிட்டவர் யார்? பழைய நாள்களில கோயில்கள் இருந்தன. அவற்றிற்கு அம்பலங்கள் என்று பெயர். தில்லையில் கூத்தப் பெருமான் ஆடுகிற உள்ளிடம போல இருப்பதே அம்பலம். அப்படித்தான் மலையாள நாட்டில் ஊர்தோறும் கோயில்கள் இருப்பதனைக் காணலாம்: அங்கு மக்களும் தங்கலாம். மக்களுக்குப் புகலிடமாவது தமிழ் அம்பலத்தின் சிறப்பியல்பு

எனலாம். சைனர்களும் புத்தர்களும் தங்கள் தங்கள் அறப் பள்ளிகளில் சமுதாயத் தொண்டு செய்துவந்தார்கள். இவற்றினை எல்லாம் அறிந்த தொண்டைநாட்டுப் பெருமக்கள், இங்கு ஒரு புரட்சி செய்தனர். அதுதான் மேலே கூறிய பெரிய கோயில்கள்.

உலகினை மறந்து கடவுளை வழிபடுவது கடவுள் வழிபாடாகாது. அச்சத்தால் நடுங்கிச் செய்கின்ற பேய் வழிபாடு கடவுள் வழிபாடாகாது. இன்பப் பெருமானை அன்பினால் அகங் குழைந் துருகி வாழ்த்தி வணங்கவேண்டும். அவனுடைய அன்பின் விளக்கமன்றோ உலகமனைத்தும்! நாம் வாழ்வதும் அவனுடைய அருளால் அன்றோ! கடவுளுக்குப் பலபல இயல்புகள் கூறினாலும் எல்லாரும் தம் அனுபவத்தில் உணர்ந்ததாய் இருப்பது எது? அன்பு அன்றோ! அதுவே கடவுள். "அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே." கடவுள், உலகமாய்ப் பூத்துள்ளான். மண்ணிலும் அவன் கடவுட்டன்மை விளங்குவதால் அன்றோ, வளங்கொழித்து நெல்லையும் பழத்தையும் அது வளர்த்துத் தருகின்றது! அதனைப் பாழாக்காது பண்படுத்திக் காப்பதும் வழிபாடாம். நீரோ, நம் உடலுக்கு உற்ற துணை; அதனைப் பலவகையிலும் பாய்ச்சி உலகினை வளர்ப்பதோடு, அதனைக் கெடுக்காமலும் இருப்பதும் கடவுள் வழிபாடாம். காற்றும், தூயதாகக் கடவுட்டன்மை நிரம்பி வழியுமாறு வாழ்வதே கடவுளுக்கு உவப்பான வாழ்க்கை. தீயும், அவன் திறலை விளக்குகிறது. வானும், அவன் புகழ்போலப் பரந்து அனைத்திற்கும் இடம் கொடுக்கிறது. சூரியன் இல்லையானால் உலகில் சூடேது? பயிர் ஏது? வாழ்வேது? இத்தனையும் தந்து உலகத்தை அளந்து செல்லும் சூரியனையும் திங்களையும் இயற்கை அழகெல்லாம் ஒருங்கு திரண்ட இரண்டு கடவுட்

குடங்களாகக் கண்டு களித்து, அவற்றின் ஒளியில் குளித்து மகிழ்ந்து, காலத்தினை வீணாக்காது அவற்றினாலாய பயனை எல்லாம் உலகம் உறிஞ்சிக் குடிக்குமாறு செய்யவேண்டும். இந்த இயற்கைப் பரப்பனைத்தும் உயிர்ப் பொருள்கள் ஓடி யாடும் கூத்து மேடையேயாம். இந்த உயிர்களுள் ஒவ்வொன்றி லும் கடவுள் வீற்றிருக்கின்ற காட்சிக்கு உருகி, இவைகளுக் குத் தொண்டு செய்வதே உண்மையான கடவுள் வழிபாடு. அன்பும் சிவமும் ஒன்றெனக் கூறுவது, இந்த வகையால் மட்டுமே உண்மையாம்.

இவ்வளவும் கூறியது, "இருநிலனாய்" என்று திரு நாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகத்தின் கருத்தே யாகும். இஃது அவர் செய்த புரட்சி. அவர், தம் பாடலில் கைத் தொண்டினை வற்புறுத்தக் காண்கிறோம். உழவாரப் படையே அவர் கையில் விளங்கியதாகத் தலைமுறை தலைமுறையாகத் தமிழர் நம்பி வந்தனர். காடு திருத்தி நாடாக்கிக் குளங்கள் தொட்டுப் பூந்தோப்புக்கள் வைத்து இருள் எல்லாம் போக விளக்குக்கள் ஏற்றி இன்னிசை பாடி இன்பமூட்டுவதே அவ ருடைய தொண்டு. அவருடைய அடியாரான அப்பூதி அடி கள் அவரைப் பின்பற்றித் தண்ணீர்ப் பந்தல் முதலிய அமைத்து மக்கள் தொண்டே செய்துவந்தனர் என்ற வர லாறும் இந்தக் கருத்தினையே வற்புறுத்துகிறது. அரசிய லாரையும் எதிர்நோக்காது, மக்களை ஒருங்கு திரட்டி, இத் தகைய பொதுத் தொண்டில் ஈடுபடுத்தியதும் கண்டு, 'போட்டி அரசு'' நிலைநாட்ட வந்தார் எனப் பல்லவ அரசர் கருதி, அவருக்கு இடையூறு செய்ய வந்தனர் போலும்! எனவே, அவர் காலத்திலேயே அவருடைய தொண்டு ஒரு பெரிய புரட்சி எனக் கருதப்பெற்றதோ என ஐயப்பட இடமுண்டு. ஆனால், அன்பு வெல்லும். எத்தனை நாள் அதனை ஐயுற்றுக் கிடக்கலாம்? அரசரும் அப்பருடைய அடியவர் ஆனார். ஆனதன் பயன் யாது? புதுமை ஒன்றனை

நிலைநாட்டியதாகத் தம்மைத் தாமே அந்த மகேந்திர வர்ம பல்லவர் பாராட்டிக்கொள்கின்றார்; புதிய வகையில் கோயில்கள் எடுப்பித்தார். கற்கோயில்கள்—சமுதாயத் தொண்டின் உயர்நிலையாக அமையக்கூடிய கோயில்கள்—எங்கும் பரவின. கல்வெட்டுக்கள் கொண்டு திருநாவுக்கரசரது தொண்டு நெறி, தென்னாட்டுக் கோயில்களை மாற்றியமைத்ததனை அறியலாம்.

இதுதான் அன்புநெறி. இதனையே வடமொழியில் பக்தி நெறி என்பர். பக்தி எனபது பின்னாளில் பலபல கோலம் கொண்டு வெறிக்கூத்தும் ஆடியது. ஆனால், அதன் தோற்றுவாய், சமுதாயத் தொண்டேயாம். பக்தி என்கிற நங்கை தமிழ்நாட்டிலிருந்து வடநாடு புகுந்தாள் எனப் புராணங் கூறுகின்றது. இதிலிருந்து இந்த அன்புநெறி தமிழர் கண்ட உண்மை என்பது விளங்குகிறது. சங்க நூல்களில வரும் காதலன்பே உலக மக்களிடையே எல்லாம் பாயும் கடவுள் அன்பாக மாறுவது இயல்பன்றோ? ஆகவே, அன்புநெறி தமிழர்நெறியே ஆம்; தொண்டைநாட்டு நெறியாம்; சென்னை நாகரிகத்தின் பண்பாடும் ஈதேயாம்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 2 | வந்து | வந்நு |
| 16 | 3 | விளங்கும் | விளக்கும் |
| ,, | 28 | என் | ஏன் |
| 17 | 8, 9 | ஆங்கிலேயரின் | ஆங்கிலேயனின் |
| 21 | 30 | இழந்து. | இழந்து, |
| 25 | 24 | -வீடே | -வீடாக- |
| 28 | 18 | வடிவம். | வடிவம் |
| 29 | 7 | போலும் | போலும். |
| 36 | 27 | வரலாற்றுப் போராட்டமாய் | வரலாற்றுப் போராட்டமாய், |
| 38 | 8 | ஆவோம்? | ஆவோம். |
| ,, | 10 | காட்டுகின்றன? | காட்டுகின்றன. |
| 39 | 10 | ஒருநாளா, | ஒருநாளா? |
| 42 | 10 | கூடும்! | கூடும். |
| 51 | 23 | விளங்குகிறது | விளங்குகின்றன. |
| 53 | 18, 19 | பெரியபுராணம், மொழி பெயர்ப்பு | ''பெரியபுராணம் மொழிபெயர்ப்பு'' |
| 54 | 27 | லகிரி | லகரி |
| 55 | 4 | துவங்கியது | துவக்கியது |
| 57 | 15 | அவா | அவர் |
| 60 | 17 | கதை? | கதை. |
| 61 | 11, 12 | தாயகமாம், | தாயகமாம். |
| 63 | 28 | அரண்மனை சூழ்ச்சி | அரண்மனையில் சூழ்ச்சி |
| 64 | 12 | வாதாடினர். | வாதாடினர்; |
| ,, | 17 | நான்காம் | ஏழாம் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 65 | 24 | களபரஞேடு | களப்பிரஞேடு |
| 67 | 5 | நிர்வாணக் | நிரியாணக் |
| 68 | 1 | நூல்களில் | இலக்கிய நூல்களில் |
| 69 | 22 | விளங்கிய ருத்ரன் சர்வ சம்ஹார மூர்த்தியாக | -சர்வ சம்ஹார மூர்த்தி யாக-விளங்கிய |
| 70 | 14 | கருத்திருக்கும் | கறுத்திருக்கும் |
| 71 | 10 | உட்பட்டிருத்தலாம். | உட்பட்டிருத்தலால் |
| 72 | 14 | வற்புறுத்துகிறது | வற்புறுத்துகின்றன |
| ,, | 21 | முதலவனிற் | முதல்வனிற் |
| 74 | 15 | எட்டாதவை | எட்டாதவை- |
| 75 | 5 | தோன்றுகின்றன. | தோன்றுகின்றது. |
| ,, | 9 | அழகு | அருள் |
| ,, | 12 | இது அல்ல இது அல்ல | ''இது அல்ல; இது அல்ல'' |
| ,, | 13 | மாற்றம் | மாற்றம், |
| ,, | 16 | அதன் | கடவுளின் |
| ,, | 17 | முடியாததனைக் | முடியாததனைப் புலவன் |
| ,, | 19 | முகக்க | முகர |
| ,, | 20 | சுவைத்துணந்து | சுவைத்துணர்ந்து |
| ,, | 24 | இன்பமுகமாக | இன்ப முகமாக |
| ,, | 30 | முப்புரங்களும் | முப்புரங்களும், |
| 78 | 12 | பெண்ணுரு...கரக்கும் | ''பெண்ணுரு... கரக்கும்'' |
| ,, | 21 | ஆநந்த | ஆனந்த |
| ,, | 22 | பலகைகளில் | பாக்களில் |
| ,, | 27 | ஆடச் | ஆடுகிருன்; |
| 79 | 4 | அவள்மேல் | அவன் மேல் |
| 80 | 9 | பெற்று | பெற்ற |
| ,, | 15 | பெருமையை, | பெருமையோடு, |
| ,, | 16 | தன் | தம் |
| 81 | 8, 9 | நூல்களில் | நூல்கள் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ,, | 29 | கண்காவலின்றி | கண்காப்பின்றி |
| 85 | 1 | பலவகைச் | பலகைச் |
| ,, | 8 | அமைப்புக்கள் | அமைப்புக்கள்— |
| ,, | 9 | அமைந்தவை | அமைந்தவை— |
| 85 | 14 | பிறித்தறிவதற்கு ; | பிரித்தறிவதற்கு |
| 86 | 10 | கல்: | கல்; |
| 88 | 16 | பேர், | பேர் |
| ,, | 22 | உணர்த்தலே | உணர்த்தவே |
| 92 | 16 | வலையமாக | வளையமாக |
| 96 | 4 | எழுந்தது | எழுந்த |
| 98 | 19 | கடலருகே அருவ | அருவ |
| 99 | 18 | அருவர் நாடு | அருவர் நாட்டு |
| 100 | 8, 9 | எழுதியதையும் | எழுதியதும் |
| ,, | 23, 24 | நிலவுகிறது? | நிலவுகிறது. |
| 101 | 18 | ஒளியம்மைத் தாய்க்கு | ஒளியம்மைக்கு |
| 104 | 9 | வாயை விற்றுவிடுகிருன். | சத்தியம் செய்கின்ருன் என்பது பொருள். |

# இலக்கிய வெளியீடுகள்

டாக்டர் மொ. அ. துரைஅரங்கனுர்:

| | | |
|---|---|---|
| 1. | *அன்பு நெறியே தமிழர் நெறி* | ***5-00*** |
| 2. | *கருவிலே திருவுடையான்* | ***6-00*** |

*தி. அ. சொக்கலிங்கம்:*

| | | |
|---|---|---|
| 3. | *காப்பியச் சிந்தனைகள்* | ***1-75*** |
| 4. | *நாடறிந்த கதை* | ***0-75*** |

*Dr. V. I.* சுப்பிரமணியம்:

| | | |
|---|---|---|
| 5. | *சில கட்டுரைகள்* | ***2-50*** |

## மீனுட்சி புத்தக நிலையம்

*60*, மேலக் கோபுரத் தெரு :: மதுரை-*1*

## வரலாறு, விஞ்ஞானம்

| | | |
|---|---|---|
| மாநகர் மதுரை | —வித்வான் ச. சாம்பசிவம் | 2-75 |
| வாழ்விக்க வந்தோர் வரலாறு | —கீ. பழனியப்பன் | 1-75 |
| சோவியத் பொருளாதார வளர்ச்சி | —டாக்டர் தவராஜ் | 4-25 |
| சுகப் பிரசவம் | —காப்டன் சேஷாத்திரிநாதன் | 2-00 |
| நியாயக் களஞ்சியம் | —கு. நடேச கவுண்டர் | 2-25 |

## மீனாட்சி புத்தக நிலையம்

60, மேலக் கோபுரத் தெரு :: மதுரை-1